
மே 03 - 09, 2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE ... සුඩර් ඔළි
வார மலர்



## ஆயித்தியமலை படுகொலைகள் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்

## கண்காணிப்புக் குழு கண் மூடி இருக்கலாமா?

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



## தொங்கு நாடாளுமன்றம்



# தடம் புரளும் கட்சிகளுக்கிடையே தடுமாறப் போகும் நாடாளுமன்றம்

2004 பொதுத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து முதல் தடவையாக கூடிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வுகள், நாடாளுமன்றத்தின் எதிர்காலம் குறித்த கேள்விகளை தீவிரப்படுத்தியுள்ளன.

சபாநாயகர் தெரிவுக்கான இந்தக்கூட்டத் தொடரில், அதற்காக நடைபெற்ற தேர்தலின்போது தமது கட்சிக்குச் சார்பான ஒருவரைத் -,தேர்ந்து கொள்வதற்கான பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்காக பெரும்பான்மைக் கட்சிகள் தமக்கிடையே மோதிக் கொண்ட விதமும் –




ஏனைய சிறுபான்மைக் கட்சிகளின் எம்பிக்களை தம்பக்கம் இழுத்துக் கொள்வதில் அவை காட்டிய தீவிரமும்— எதிர்கால நாடாளுமன்றம் நாட்டில் நிலவும் மிக முக்கியமான, இக்கட்டான பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வு காணப் போகின்றது என்ற வினாவை நாட்டு மக்கள் அனைவரது மனதிலும் எழுப்பிவிட்டுள்ளது.

இந்த நிலையில், சிறுபான்மைக்கட்சிகள் நாடாளுமன்றத்தில் எவ்வாறு நடந்து கொண்டன? அவை வகிக்க வேண்டிய பாத்திரம் எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பவை குறித்த விடயங்கள் மிகவும் கவனத்துக்குரியவையாக இருந்து வருகின்றன.

சபாநாயகராக எதிர்க்கட்சியின் சார்பில் தெரிவாகியிருக்கும் லொக்குபண்டார ஒரு மேலதிக வாக்கினால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அதுவும் சிறுபான்மைக் கட்சி ஒன்றுக்குள் அதனது நிலைப்பாடு தொடர்பாக அதற்கேற்பட்ட தடுமாற்றத்தின் காரணமாகவே அந்த மேலதிக வாக்கு எதிர்க்கட்சிக்குக் கிடைத்திருக்கிறது.

ஒன்பது ஆசனங்களைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இரண்டு உறுப்பினர்கள், கட்சியின் தீர்மானத்துக்குப்புறம்பாக அதாவது நாடாளுமன்றத்தில் நடுநிலை வகிப்பது என்ற அவர்களின் முடிவுக்கு மாறாக ஆளும் கட்சிக்கு வாக்களித்ததை தவறென ஏற்றுக் கொண்டு அதற்கான மாற்று நடவடிக்கையாக தாம் எதிர்க் கட்சிக்கு அந்த வாக்கை அளிப்பதாக எடுத்த முடிவின் விளைவாகவே அந்த மேலதிக ஒரு வாக்கின் மூலம் எதிர்க்கட்சி சார்பான ஒருவர் சபாநாயகராகும் வாய்ப்பு கிட்டியது.

சபாநாயகர் தேர்வுக்கான வாக்களிப்புக்கு முன்பும் பின்பும் நாடாளுமன்றத்திற்குள் ஹெல உறுமய கட்சியினர் தமக்கிடையே சச்சரவுப்பட்டு ஒருவரை ஒருவர் திட்டித்தீர்த்துக்கொண்டதையும், இவர்களின் இந்தச் சச்சரவுக்களிடையே இரு பெரும்பான்மைக் கட்சிகளினதும் உறுப்பினர்கள் ஜாதிக ஹெல உறுமயவின் எம்பிக்களிடம் போய் நின்று கொண்டு தமக்கு ஆதரவு தரும்படி இறைஞ்சி வேண்டிக் கொண்டு நின்ற நிலைமைகளும் நாடாளுமன்றத்தில் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நெருக்கடியான நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதாகவே இருந்தது.

நாடாளுமன்ற அமர்வுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஹெல உறுமயவின் இரண்டு உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் தரப்பால் கடத்தப்பட்டதாகவும் , அவர்கள் ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவரின் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டதாகவும், தகவல்கள் வெளியாகிய அதே வேளையில் அவர்களை ஜே.வி.பியினர் தான் கொண்டு சென்று மறைத்து வைத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன.

சபாநாயகர் தெரிவில் தமது கட்சிக்குச் சார்பான ஒருவரை தெரிவு செய்ய முடியாமல் போனமை தொடர்பாக ஜே.வி.பி கருத்துத் தெரிவிக்கையில் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது தங்களது கட்சி உறுப்பினர்களை ஹெல உறுமயவினர் சந்தித்து தங்கள் ஆதரவை எமக்குத் தருவதாக பல தடவைகள் வாக்குறுதி அளித்தனர் என்றும் ஆனால் நாடாளுமன்றத்தில் இவர்கள் தமது காலைவாரிவிட்டனர் என்றும் ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளனர். சபாநாயகர் தெரிவைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சியின் சார்பில் சம்பந்தன் எழுந்து பேச முற்பட்ட போது பல தடவைகள் அவர் இடைமறிக்கப்பட்டிருக்கிறார் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட காலத்தில் இருந்து


விமல் வீரவன்ச

ஜனாதிபதியும் ஆளும் கட்சியும் சமாதான முயற்சியில் ஆர்வம் காட்டாது இருப்பது பற்றியும் வடக்கு கிழக்கில் தன்னாட்சிக்கான அலகு என்பதன் அடிப்படையிலே பேச்சுக்கள் அமைய வேண்டும் என அவர் தனது பேச்சிடையே கூறிய போது அரசுத் தரப்பினர் புலி, புலி என கோஷமிட்டு, அவரை பேச விடாமல் இடை நிறுத்த முயற்சித்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு எங்கும் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய ஆட்சி ஒன்றுக்காக நாடாளுமன்றத்துக்கு 22 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அதற்கு தமிழ் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

இந்த வாக்குகள் சுயாட்சியொன்றுக்கான அதிகாரத்தைப் பெறுவதற்காக தமிழ் மக்கள் ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு, தமது ஒற்றுமையின் ஊடான பலத்தை அவர்கள் வெளிக்காட்டியிருப்பதையே இத் தேர்தல் புலப்படுத்துகிறது.

முதலாவது நாடாளுமன்ற அமர்விலேயே சம்பந்தன் எம்பியின் பேச்சினிடையே எழுந்த அரசுதரப்பின் கூக்குரல்கள், தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டிருப்பதை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் அரசுதரப்பினர் திணறுவதையே வெளிக்காட்டுகிறது.

சபாநாயகர் முன்னிலையிலான தமிழ் எம்.பிக்களின் சத்தியப்பிரமாணத்தின் போதும், பிரபாகரன் முன்பும் சத்தியப்பிரமாணம் சபாநாயகர் முன்பும் சத்தியப்பிரமாணமா? என கேலி செய்திருக்கிறார்கள்.

இந்தச்சம்பவங்கள், இரண்டு தசாப்த கால போருக்குப்பின்பும் தமிழ் மக்கள் தமது சுயாட்சி அதிகாரத்துக்கான போராட்டத்தில் ஒரு குடையின் கீழ் அணி திரண்டிருப்பதை ஆளும் தரப்பு ஏற்றுக்கொள்ள மறுப்பதையே புலப்படுத்துகிறது.

எதிர்காலத்தில், இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுக்களை ஆளும் தரப்புடன், தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்வது சிரமம் என்பதையும், அதனூடாக நாடாளுமன்றம் மூலமாக பிரச்சினைகளை பேசித் தீர்த்துக்கொள்ளும் வழி வகைகளில் நம்பிக்கை வைப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதையுமே இந் நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

எதிர்க்கட்சியின் தரப்பை நோக்கும் போது, நாடாளுமன்றில் பெரும்பான்மை ஒன்றைபெற்றுக்கொள்ளும் முயற்சியில் அது தீவிரமாக இருக்கின்ற போதும், நாடு எதிர் நோக்கியுள்ள இனப் பிரச்சினை விவகாரம், மற்றும் தேசிய மட்டத்திலான பொருளாதார அபிவிருத்திக்கான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கான அறுதிப்பெரும்பான்மையை எடுத்துக்கொள்ளுமா என்பதும் சந்தேகமாகவே உள்ளது.

சபாநாயகர் தெரிவுக்காகநடைபெற்ற பாராளுமன்ற அமர்வு தொடர்பாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ள கூற்றுக்களும் கவனத்துக்குரியவையாக இருக்கின்றன.

ஏபிசி நிறுவனத்தின் தெற்காசியச் செய்தியாளர் இவ் அமர்வு தொடர்பாக கூறும்போது, விகிதாசாரப்பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்குப்பதிலாக புதிய தேர்தல் முறை ஒன்றை அறிமுகம் செய்தல் மற்றும், அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவது தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துக்களுக்குப் பதிலடியாகவே சபாநாயகர் தெரிவு அமைந்திருப்பதாக அவர்கருத்துக்கூறியுள்ளார்.

எதிர்கால நடவடிக்கைகளுக்கும், செயற்திட்டங்களுக்கும் பாரிய சவால் ஒன்றை அரசு எதிர்நோக்கியிருப்பதையே சபாநாயகர் தேர்வு வெளிப்படுத்துவதாக இந்துப் பத்திரிகையின் செய்தியாளர் வி.எஸ்.சம்பந்தன் கருத்து தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பீடத் தலைவர் ஜெயதேவ உயன் கொட, அரசின் ஸ்திரமற்ற தன்மையையே சபாநயகர் தெரிவு வெளிக்காட்டுவதாக கூறியிருக்கிறார்.

சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தனது குறிப்பில், ''அரசியல் கட்சிகளின் பிளவுபட்ட நிலை, அவற்றுக்கிடையிலான அதிகாரப்போட்டி என்பவற்றால் நாடு தொடர்ந்தும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்'' எனக் கூறியுள்ளார்.

யுத்தத்துக்கு எதிரான தேசிய முன்னணி நடத்திய கருத்தரங்கு ஒன்றில் குமார் ரூபசிங்க கலந்துகொண்டு உரையாற்றுகையில், ''இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்த ஹெல உறுமய கட்சிக்கு 9 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. அரசு மக்களுக்கு அறிவித்த நிவாரணங்களை எப்படி வழங்கப் போகிறது?'' என கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் தாம் நடுநிலை வகிக்கப் போவதாக கூறியுள்ள ஜாதிக




ஹெல உறுமயவின் தலைவர் மேதானந்த தேரர், சபாநாயகர் தெரிவு தொடர்பாக கூறியுள்ள கருத்து மற்றெல்லாவற்றையும் விட கவனத்துக்குரியதாக உள்ளது. நாடாளுமன்றத்தில் புலிகளின் முகவர்களாக, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் பலமான நிலையில் இருக்கின்றனர். ரணில் அரசு நாட்டைப் பிரித்து ஈழத்தை கொடுக்க முனைந்தால், எமது உயிரைத்தியாகம் செய்தாவது நாட்டைக் காப்பாற்றுவோம் எனக்கூறியுள்ளார். மேலும் சபாநாயகர் தெரிவின்போது, ஈழம் சபைக்குள் வந்து விட்டது போன்று தான் உணர்வதாகவும் கூறியுள்ளார்.

நடுநிலை வகிப்பதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள், இனப்பிரச்சினை விவகாரத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை இவர்களே தெளிவுபடுத்திவிட்டார்கள் என்று தான் கூற வேண்டும்.

சமாதானத்துக்கான முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட தான் ஆவலாக இருப்பதாக அரசு தரப்பு அறிவித்திருக்கின்ற போதும், விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணாவைப் பாதுகாப்பதில் அரசு காட்டிவரும் அக்கறை, ஆர்வங்களைப் பார்க்கும்போது , தம்முடன் இதயசுத்தியுடனான பேச்சைத் தொடர்வதில் அரசு உண்மையில் ஆவலாக இருக்கின்றதா என விடுதலைப்புலிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்நிலமை, நாடாளுமன்றத்துக்கு வெளியால் சமாதான முயற்சிகள் எதிர்நோக்கியுள்ள முட்டுக்கட்டைகளை விலக்கி அவற்றை முன்னெடுத்துச் செல்வதில் புதிய நெருக்கடிகள் தோன்றியுள்ளதையே நிலமைகள் வெளிப்படுத்துகின்றன.

மொத்தமாகப் பார்க்கும்போது, தத்தமக்கான பெரும்பான்மையை தக்க வைப்பதற்காக பெரும்பான்மைக்கட்சிகள் சிறிய கட்சிகளை தம்முடன் இணைத்துக்கொள்ள எடுத்துக்கொள்ளும் பிரயத்தனங்கள் நாடாளுமன்றம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியில் இவை புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளதையே அவதானிக்க முடிகிறது.

எனவே, சந்தர்ப்பம் பார்த்து தாவுகின்ற நிலைமைகளுக்கு இடமளிக்காத கட்சி முறை ஏற்பாடொன்று நாடாளுமன்றத்துக்கு அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்குள் தம்மை தேசத்தின் தலைவர்களாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள் தேசம் எதிர்நோக்கியுள்ள தேசிய ரீதியிலான பிரச்சினைகளை கவனத்தில்கொண்டு தமது அரசியலை நேர்மையானதாக வகுத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், நாடாளுமன்றத்தின் இருப்பும் அதன் எதிர்காலமும் சூனியமாகவே போய்விடும்.

**சாலையூரான்**

## வாசகர் இதயம் பேசுகிறது

***விடுதலைப்பித்தன் – நெல்லியடி***

'குழைக்காடான்' எழுதிய கட்டுரை என்கண்களில் நீரைப் பனிக்கச் செய்தது. இக் கட்டுரைஎன் எண்ணப் பிரதிபலிப்பு ஆகும். ஒரு விஷயம் பற்றி எழுதவேண்டுவதாயின் அவ்விஷயம் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

நடுநிலை வகிப்பதால் யாருக்கும் பயனில்லை. உலகில் இரண்டே இரண்டு பண்புகள்தான் இருக்க முடியும். ஒன்று நியாயம் மற்றது அநியாயம். சுருங்கக் கூறின் நீதி, அநீதி இரண்டுமே. இதில் நடு நிலைக்கு இடமில்லை.

மேற்படி கட்டுரை இன்றைய காலகடத்தின் அவசியத் தேவையாகும். நாம் எது எதற்கோ செலவிடுகிறோம். இக் கட்டுரை பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல நாட்டுப் பத்திரிகைகளுக்கும் விநியோகிக்கப்பட வேண்டும். குறிப்பாக தமிழக மக்கள் இக் கட்டுரையைப் படித்து தங்கள் சீர்கேட்டை உணரவேண்டும்.

***சி.விஜயகுமார்— ஸ்போட்ஹில், எஸ்டேட்***

மதிப்பிற்குரிய ஆசிரியர்,

கடந்த 19ஆம் திகதி 'சுடர்ஒளி' வாரமலரில் ''கருணா விவகாரமும் ஊடகங்கள் கையாண்ட விதமும்'' என்ற கட்டுரை மிகமிக அருமை. கருணா என்ற தனிமனிதனின் போக்கை மிக அழகாக எடுத்துக்காட்டியதுடன் தமிழன் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு புலிகளே காரணமானவர்கள் என்பதையும் தெளிவுபடுத்தி இருந்தது. ஏனைய ஊடகங்கள் கருணாவுக்கு சார்பாக செய்திகளை வெளியிட்டதை நினைக்கும்போது மிகவும் கவலை. அத்துடன் பிரித்தானிய தமிழ் ஒலி பரப்பு, தினமும் புளுகித்தள்ளுவதை ஏன் குறிப்பிட வில்லை. சுடர் ஒளி தமிழ் உலகில் சுடர்விட்டு பிரகாசிக்க என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.



# மலையகத் தமிழரை வஞ்சம் தீர்க்கத் திட்டம் கந்தபொல தாக்குதல் இதன் ஆரம்பம்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பேரினவாத சக்திகள் மேற்கொண்டுவரும் வன்முறைகள் காலங்காலமாக இடம்பெற்று வருகின்றன.

தமிழர்களைக் கொலை செய்வதும் அவர்களின் சொத்துக்களைச் சூறையாடுவதும் இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத வடுக்களாகியுள்ளன.

தமிழர்களைக் கொன்று குவித்துவிட்டு அவர்களின் சொத்துக்களையும் உடமைகளையும் சூறையாடிவிட்டு பின்னர் மன்னிப்புக் கோருகிறோம், சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துகிறோம் என்றெல்லாம் சிங்கள அரசியல்வாதிகள் சாக்கு போக்குக் கூறுவதை தமிழர்கள் இனியும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை.

உதாரணமாக மலையகத்தில் தமிழர்கள் மிகவும் செறிந்து வாழும் பிரதேசமான கந்தபொலவில் தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு தமிழர்கள் பொலிஸாரால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகினர். மேலும் பல தமிழர்கள் படுகாயமுற்றனர். தமிழர்களின் கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டன. இவை அனைத்தும் பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடன் சிங்களக் காடையர்களினால் மேற்கொள்ளப்பட்டன. நுவரெலியாப் பகுதியில் நாடாளுமன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்கள அரசியல் வாதியும் இந்த கலவரங்களின் பின்னணியில் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

நுவரெலியா நகரத்தில் இருந்து சுமார் எட்டு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது கந்தபொல நகரம். தமிழர்கள் மிகவும் அதிகமாக செறிந்து வாழும் பிரதேசம் இதுவாகும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளில் அதிகூடிய காய்கறிகளும் கிழங்கும் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

அதேசமயம் பெரும்பாலான தமிழர்கள் இங்கு வசதி வாய்ப்புடன் வாழ்கின்றனர். அந்த நகரத்தில் பெரிய வர்த்தகர்களும் பெரும்பாலான வியாபார நிலையங்களின் உரிமையாளர்களும் தமிழர்களே.

பெரும்பான்மை இனத்தவர் செல்வம் கொழிக்கும் இப்பகுதியை எப்படியாவது ஆக்கிரமித்து தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்பதில் தீவிர கவனம் செலுத்தி வந்தனர்.



உடைத்து நொருக்கப்பட்ட கடைத்தொகுதிகளும், பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரும்

ஒருபுறத்தில் அடிக்கடி ஏதோ ஒரு வகையில் தமிழர்களோடு அவ்வப்போது குரோதம் காட்டி வந்தனர்.

மறுபுறம் தமிழர்கள் பெரும்பாலாக அப்பகுதியில் வாழ்ந்து வந்தமையினால் தமது கைவரிசையை காட்ட முடியாமல் இருந்தனர்.

தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள வேண்டுமெனில் பாதுகாப்பு தரப்பு உறுதுணையாக இருக்க வேண்டும். இப்படி இரண்டு தடவைகள் தலவாக்கலையில் பாதுகாப்புப் படையினரின் துணையுடன் தலவாக்கலை நகரம் எரிக்கப்பட்டது. தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் கந்தப்பொலயில் பொலிஸ் காவல் அரண் நிறுவப்பட்டது. இந்தக் காவல் அரண் நிறுவப்பட்ட தினத்திலிருந்து இப்பகுதியில் வாழும் சிங்களவர்களுக்கு தெம்புவந்தது.

நகரில் ஆட்டோ தரிப்பிடத்தில் தமிழர்கள் மட்டுமே ஆட்டோ வைத்திருந்தனர். பஸ்தரிப்பிடத்தில் சிங்களவர்கள் மட்டுமே பஸ் வைத்திருந்தனர். இந்த இரு பகுதியினருக்குமிடையில் அடிக்கடி முறுகல் நிலை தோன்றியது.

சம்பவ தினத்தன்று தனியார் பஸ் ஒன்று ஆட்டோவை மோதியது. இதனால் முறுகல் அதிகரித்து பின்னர் மோதலில் முடிவுற்றது. தருணம் பார்த்துக் கொண்டிருந்த பேரினவாதிகள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தினர். பொலிஸாரும் துணைக்கு வந்தனர். கந்தபொல நகரம் போர்க்களமானது.

தமிழர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. நகருக்கு அருகாமையில் வசிக்கும் தோட்டப்புற மக்களை நகருக்குள் வரவிடாமல் பொலிஸார் மேற்கொண்ட வன்முறையின் போது இரண்டு இளைஞர்கள் பலியாகினர்.

மேலும் நான்குபேர் படுகாயமுற்றனர். கந்தபொல நகரத்தில் தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

மேலதிகமாக இராணுவம் அழைக்கப்பட்ட முக்கிய சந்திகளில் அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் நகரத்தில் வசித்த தமிழர்கள் துரத்தியடிக்கப் பட்டனர்.

மலையகத்தில் தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் இன்று நேற்று நடப்பவை அல்ல. காலகாலமாக திட்டமிட்டு இவை நடத்தப்படுகின்றன.

1972 ஆம் அண்டு முதல் மலையகத் தமிழரை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கை தொடங்கியது. புப்புரஸ்ஸ டெல்டா தோட்டம், புஸ்ஸலாவ சங்குவாரி தோட்டம், தலைவாக்கலை, டெவன் தோட்டம், முல்லோயா தோட்டம் போன்றவை இதற்கு உதாரணங்கள்.

தமிழர்களுக்கு சிங்களவர்களால் எந்த வித தொந்தரவுமே இல்லை என்று வாதாடும் பேரினவாதிகள் இந்த கண்மூடித்தனமான காட்டுமிராண்டிச் செயல்களுக்கு என்ன பதில் கூறப் போகிறார்கள்? 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலக தமிழர் ஆராய்ச்சி மாநாட்டின் போது இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்களின் குருதியில் உருவான தமிழர் தயாக கோஷம் இன்று எத்தகைய நிலைக்குள் போய் நிற்கின்றது என்பது உலகுக்கே உணர்த்தப் பட்டுள்ளது.

கந்தபொலவில் கொல்லப்பட்ட தமிழர்களின் குருதியிலிருந்து மலையகம் பாடம் கற்குமா? அல்லது மலையக தலைமைகள் அங்கு வாழும் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குமா?

புதிதாக பொறுப்பேற்ற அரசின் அமைச்சர் ஒருவரும் இந்த சம்பவங்களின் பின்னணியில் இருந்தார் என்று அப்பகுதி மக்கள் உறுதிபடக் கூறுகின்றனர். ஆட்சி மாறியவுடன் ஐ.தே.கவை ஆதரித்த நுவரெலியா தமிழர்களைப் பழிவாங்கும் படலம் ஆரம்பித்து விட்டதா?

அல்லது அழித்தொழிக்க திட்டம் தீட்டப்பட்டு விட்டதா? என்று மலையகத்தவர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவங்களுக்கு அரசு கண்டனம் தெரிவித்து சம்பந்தப்பட்டவர்களை சட்டத்துக்கு முன் நிறுத்துவோம் என்று வழமையான அறிக்கையை விடுக்கும் என்பதை விட வேறெதுவும் நடக்கப் போவதில்லை.

ஐ.தே.கவின் அசைக்க முடியாத கோட்டையாகவிருக்கும் நுவரெலியாவை துவம்சம் செய்து அதற்கு ஆதரவான தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொள்வதே அரசின் அடிவருடிகளின் திட்டமாகும். இதைத் தடுக்க மலையகத்தவர்கள் ஓரணியின் கீழ் தயாராக வேண்டும்.

-ஆர்.வரதன்-


**Hair Straightening**

இந்தியாவில் விசேட பயிற்சியும், அனுபவமும் பெற்றவரினால் வனிதையர் கூந்தல் நேர்சீர் செய்தலும் வகுப்புகளும் (Hair Straightening) எதிர்வரும் மே 6ஆம், 7ஆம் திகதிகளில் மட்டும் கொழும்பு, வெள்ளவத்தையில் நடத்தப்படுகின்றன. மே 5 ஆம் திகதி (புதன் கிழமை) அன்று தொலைபேசி மூலம் (இலக்கம்:- 011 - 2365245) தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.

**ORGAN NOTES**

Organ, Guitar, Melodica,வயலின், வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள் போன்றவற்றின் ''இசைக் குறிப்புகள்'' (Notes) பாகம் – 26 வரை வெளிவந்துள்ளன.

தொடர்பு: S.S.Rajeendran,
Karaweena Isai Manram,
75,Temple Rd,
Nallur, Jaffna.

(பதிவுத் தபாலில் பெறுவதற்கு ரூபா 100 மணி ஓடர் அனுப்ப வேண்டும்.)

T.P:- 0777- 031293

**பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்**

தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,
வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.250/– தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/–

தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்

மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 250/–



**ஞானசுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி : 2421398

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை விணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லிறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
மே 24 - 30 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**கல்முனையில்..**
மே 01, 02, ஆம்
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**
மே 08, 09, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**
மே 11 - 17வரை
A.S.N. சுற்றுலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

மே 03 – 09, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## ஆயித்தியமலை கந்தப்பொல ஓர் எச்சரிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவி ஏற்று மூன்று வாரங்களே ஆகின்றன.

புதிய நாடாளுமன்றம் கூடி அடுத்த நாளே, புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்த இருப்பது குறித்து ஜனாதிபதி பிரஸ்தாபித்திருந்தார்.

ஜனாதிபதியின் நெருங்கிய சகாவும் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு படி மேலே சென்று, ஜூன் இறுதியில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்று இந்தியாவில் தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கடந்த கால நிலைப்பாடுகள், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் இனவிரோதக் கொள்கைகள் இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடர வாய்ப்புகள் உண்டா என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றன. விடுதலைப்புலிகளின் கருத்துக்களும் இதனையே கோடிகாட்டுகின்றன.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சமாதானப் பேச்சுக்களைத் தொடருவதற்கான சூழ்நிலை உருவாவது கடினம் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த அபிப்பிராயமும்.

இத்தகைய நிலையிலேயே கடந்த வாரம் இரு சம்பவங்கள் கிழக்கிலும் மலை நாட்டிலும் இடம் பெற்றிருக்கின்றன.

சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு வாய்ப்பு குறைவு என்பதை அவை பிட்டுக் காட்டுகின்றன.

புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கலாம் என்ற கருத்தும் அரச மட்டத்தில் நிலவுகிறது.

ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப்புலிகளின் நம்பிக்கையை அரசு பெறவேண்டும். அதுவே முக்கியமானது. ஆயித்திய மலை மற்றும் கந்தப்பொல ஆகிய இடங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் நம்பிக்கையைக் கட்டி எழுப்ப ஒரு போதும் உதவப் போவதில்லை.

மட்டக்களப்பு, வவுணதீவுக்கு அருகே உள்ள ஆயித்திய மலைப்பகுதியில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிபிரயோகத்தில் ஏழு புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதிலும், இவர்களில் நால்வர் அங்கவீனர்கள்.

இந்த படுகொலைகளை நடத்தியவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வந்தவர்கள் என்று கூறப்படுகிறது. கருணா தரப்பினரே இதனைச் செய்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், இதுவரை எவரும் கைதாகவில்லை. இராணுவம்வழமைபோல்கைவிரித்துவிட்டது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றதால் தனக்கு எதுவும் தெரியாது என்று இராணுவம் கூறுகிறது.

ஆனால் இராணுவத்தின் உதவியோ, ஒத்தாசையோ இன்றி இதனை எவருமே செய்திருக்க முடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த பின்பு இடம்பெற்ற மோசமான யுத்தநிறுத்த மீறலாக ஆயித்தியமலைச் சம்பவத்தை புலிகள் கருதுகிறார்கள். இது நிச்சயமாக பேச்சுவார்த்தைக்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்க மாட்டாது.

மற்றைய சம்பவம் நுவரெலியாவுக்கு அருகில் உள்ள கந்தப்பொலவில் இடம்பெற்றுள்ளது.

இனமோதல்களை அடக்க என்று வந்த பொலிஸார் இரு தமிழர்களை அநியாயமாகச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிராகப் போடப்பட்ட பெரும் எண்ணிக்கையான வாக்குகளால் சீற்றமடைந்திருந்த சக்திகளே இதன் பின்னணியில் செயற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதற்காக அப்பாவித் தொழிலாளர்களை பலிக்கடாக்கள் ஆக்குவதா?

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்றும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு கூறுகிறது. ஆனால் எல்லாம் வெறும் கண்துடைப்புத்தான். போன உயிரை மீட்டு விட முடியுமா?

ஆயித்தியமலை, கந்தப்பொல சம்பவங்கள் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் எத்தகைய நெருக்கடிகளை எதிர்நோக்கப் போகிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. எச்சரிக்கையும் கூட.

# மகாவலி அமைச்சும் ஜே.வி.பியினரும்

ஏப்ரல் 10 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜே.வி.பிக்கு நான்கு அமைச்சர் பதவிகளும் நான்கு பிரதி அமைச்சர் பதவிகளும் ஒதுக்கப்பட்டிருந்தும் அவர்கள் அன்று சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து விட்டனர்.

மகாவலி அமைச்சு அவர்களுக்கு வழங்கப்படாததே இதற்கு காரணம்.

இந்த விவகாரம் புதிய அரசுக்கு ஏற்பட்ட முதலாவது பின்னடைவு. இரண்டாவது பின்னடைவு சபாநாயகர் தேர்வில் அரச தரப்பு வேட்பாளர் அடைந்ததோல்வி.

ஜே.வி.பியினருடன் விரைவாக ஓர் இணக்கத்துக்கு வந்து அவர்களுடனான பிரச்சினைக்குத் தீர்வு காணத்தூண்டியதும் இந்த இரண்டாவது பின்னடைவுதான்.

இதன் அடிப்படையிலேயே மகாவலி அமைச்சு விவகாரத்தில் பெரும் பிடுங்கல்களின் பின்பு ஜே.வி.பிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு வார கால தாமதத்தின் பின்பு ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்களும் நான்கு பிரதி அமைச்சர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு தமது அமைச்சுப் பொறுப்புக்களைதற்போது ஏற்றுள்ளனர்.

மகாவலி அமைச்சு தொடர்பாக சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கத்தின்படி மகாவலி அமைச்சையும் விவசாய அமைச்சையும் சேர்ந்த அதிகாரிகளை உள்ளடக்கிய ஓர் உயர்மட்ட அதிகாரசபை நிறுவப்படும்.

மகாவலி பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான தீர்மானங்களை இந்த சபை மேற்கொள்ளும் அதே சமயம் மகாவலி அபிவிருத்தி விடயங்களை சுதந்திரக் கட்சியின் அமைச்சரான மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சே கையாளும். மகாவலி அதிகாரசபையின் அதிகாரங்கள் முற்றுமுழுதாக ஒரே அமைச்சரின் பொறுப்பில் இருக்க மாட்டா.

கூட்டமைப்பு ஏற்படுத்துவது தொடர்பாக ஜே.வி.பியுடன் ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்திய சமயம் ஜே.வி.பியினர் மகாவலி அமைச்சைக் கோரி அதற்கான சம்மதத்தை ஜனாதிபதியிடம் பெற்றிருந்தனர்.

ஆனால் மகாவலி அமைச்சின் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்பட்ட பின்பே ஜனாதிபதி உஷார் அடைந்தார்.

மகாவலி அமைச்சு அப்படி என்ன முக்கியத்துவம் உடையது?

மகாவலி அமைச்சின் வளங்களைப் பயன்படுத்தி ஜே.வி.பி மற்றும் ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்கு செல்ல முடியும் என்கிறார் ஆற்றுப் படுக்கை அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன. மகாவலி அமைச்சு முதலில் இவரிடமே முற்றாக விடப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்ததாக மகாவலி அமைச்சிடமே அதிக ஆயுதங்கள் இருக்கின்றன. இலங்கையில் உள்ளகாடுகளில் பெரும்பகுதி மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழேயே இருக்கிறது.

மகாவலி அமைச்சின் கீழ் உள்ள மொத்த ஆயுதங்கள் 615. இவற்றுள் ரி. 56 ரக துப்பாக்கிகள் மட்டும் 450. ஏனையவை சீனரக பிஸ்டல்கள். றீப்பிட்டர் ரக துப்பாக்கிகள்.

அதுமட்டுமா 800 பயிற்சி பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளும் 600 ஆயுதப் படையினரும் இந்த அமைச்சின் கீழ் கடமை ஆற்றுகின்றனர்.

இவர்களை விட 139 பொறியியலாளர்கள், 50 விவசாய உத்தியோகத்தர்கள், 12 திட்ட அதிகாரிகள், 18 சூழல் பாதுகாப்பு அதிகாரிகள், 230 தொழில் நுட்ப அதிகாரிகள், 123 பொறியியல் உதவியாளர்கள், கூலியாட்கள்கள் என்று 4, 600 பேர் கடமையாற்றுகின்றனர்.

விக்டோரியா, மாதுறுஓயா, கொத்மலை, ரண்தெனிகல, மொறகஹகந்த ஆகிய ஐந்து பாரிய நீர்த்தேக்கங்களும் மகாவலி அமைச்சின் கீழேயே இருந்து வருகின்றன.

ஆயுதப் பயிற்சி பெறுவதற்கு வசதியான காடுகள் மற்றும் ஆயுதங்கள் ஆயுதப் பயிற்சி பெற்ற ஆட்கள் எல்லாவற்றையும் கொண்டுள்ள இந்த அமைச்சை ஜே.வி.பியினரிடம் விடுவது நிச்சயமாக மற்றொரு கிளர்ச்சிக்கு ஜே.வி.பியை இட்டுச் செல்லும் என்பதே சுதந்திரக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் வாதம்.

இந்த அமைச்சு தொடர்பாக இழுபறி ஏற்படுவதற்கு இதுவே காரணமாக இருந்தது.

-எஸ்.பி.எஸ்-

# ஆயித்தியமலை புலிகள் முகாம் மீதான தாக்குதல் சமாதானத்தை விரும்பாத சதிகாரரின் யுத்தம்

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கும் ஆயித்தியமலை மற்றும் முல்லாமுனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் முகாம் மீது இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் நடத்தியிருக்கிறது.

25–04–2004 ஞாயிறு இரவு 11 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் போரில் காயமடைந்து அங்கவீனர்களாக இருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் தங்கியிருந்த முகாமும் தாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதலில் மொத்தம் 7 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தாக்குதலின் போது முகாமில் இருந்து தப்பியவர் வழங்கிய தகலின்படி இத்தாக்குதலில் நான்கு பேர் ஈடுபட்டதை தான் கண்டதாகக் கூறி இருக்கிறார்.

தாக்குதலை நடத்தியவர்கள் வவுணதீவு முகாம் பக்கமாகச் சென்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து விட்டனர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்

காயமுற்று அங்கவீனர்களாக இருந்த விடுதலைப்புலிகளின் முகாம் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், இந்தச் சமாதான காலத்தில் அவர்களை யுத்தத்துக்காக சீண்டி வலிந்திழுக்கும் ஒரு முயற்சியாகவே நடைபெற்றிருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் விடுதலைப்புலிகள் வடக்கு, கிழக்கில் தன்னாட்சி அலகைக் கோரி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு யோசனைகள் அப்போது பதவியில் இருந்த ஐ.தே.முன்னணி அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவை தொடர்பான விபரங்கள் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்தன. அவை வெளிவந்த உடனேயே அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஜனாதிபதியின் கட்சியினர் புலிகளின் இந்த யோசனை ஈழத்தை பிரித்துக் கொடுப்பதற்கு ஒப்பானதென்று, சமாதானப் பேச்சுக்களை இனியும் தொடர அனுமதிப்பது ஆபத்தில்போய் முடியும் என்றும் எழுப்பிய கூச்சலை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ரணில் அரசு புலிகளுக்கு நாட்டை தாரைவார்க்கிறது என்றும், யுத்தத்தில் புலிகளை வெற்றி கொண்ட பின்னரே புலிகளுடன் பேச வேண்டும் என்றும் ஜே.வி.பியினர் ஆர்ப்பரித்ததையும் யாரும் இலகுவில் மறந்து விட முடியாது.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதை தொடர்ந்து விடுதலைப்புலிகள் உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் பெற்றுவந்த முக்கியத்துவமும் பிரபல்யங்களும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட நாடுகள் விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட நல்லுறவுகளும் அதன் மூலமாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு சுதந்திரமாக வந்து தமிழ் மக்கள் யுத்தத்தின் மூலம் எதிர்கொண்ட துன்பதுயரங்களை நேரில் கண்டறிந்து கொண்டதும் இந்தப் பேரினவாதிகளுக்குப் பேரிடியாய் போய்விட்டிருந்தது என்பதை இங்கு சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

மேலும் சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் போராட்டம் எந்தளவுக்கு நியாயமானது என்பதை யுத்தம் நடைபெற்ற காலத்தை விட சமாதான காலத்திலேயே உலகம் தெளிவாக நேரில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இதனை ஜீரணிக்க முடியாத இனவாத சக்திகள் அப்போதிருந்த அரசை ஆட்சியில் இருந்து இறக்குவதன் மூலம் சமாதானத்தை முடிவுக்குக் கொண்டுவர எடுத்த பகீரதப் பிரயத்தனங்கள் யாவரும் அறிந்த விடயங்கள் ஆகும்.

தற்போது பதவியில் இருக்கும் அரசு, தான் பதவிக்கு வருவதற்காக விடுதலைப் புலிகள் தொடர்பாக தென்னிலங்கை மக்களுக்கு விடுத்த செய்திகள், பதவிக்கு வந்ததும் இந்த சமாதானத்தை எப்படியாவது முறித்து யுத்தத்தை ஏற்படுத்திக் கொள்வார்கள் என்பதை துலாம்பரமாக வெளிப்படுத்துவதாகவே இருந்தது. ஆயித்தியமலை மற்றும் முல்லாமுனை ஆகிய இடங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் அதனையே நிரூபிக்கின்றன.

ஆயித்தியமலையில் தாக்குதலை நடத்த வந்தவர்கள் சரளமாக தமிழில் பேசியுள்ளார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தே அவர்கள் தாக்குதலுக்காக வந்திருக்கிறார்கள். தாக்குதல் முடிந்து திரும்பும் போது அரச படைமுகாம் அமைந்திருந்த பகுதியின் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றதை பொதுமக்கள் பலரும் கூட பார்த்திருக்கிறார்கள்.

இந்தத் தகவல்களின்படி, விடுதலைப் புலிகளுக்கெதிரான தேசவிரோதக் கும்பலொன்று, அரசின் ஒத்தாசையுடன் இந்தக் காரியத்தை செய்திருக்கிறது என்பது நன்கு புலனாகின்றது.

சமாதான காலத்தின் போது தமிழ் மக்களுக்கு வெளிநாடுகள் மூலமாக கிடைத்திருந்த அற்ப, சொற்ப உதவிகளைக் கூட, ஜீரணிக்க முடியாத தற்போதைய ஆளும் தரப்பினர், ரணில் அரசு தமிழ் மக்களுக்கு சிங்கள தேசம் முழுவதையுமே வாரி வழங்கிவிட்டதாக விஷமப் பிரசாரங்களை தென்னிலங்கை மக்களுக்கு செய்தும் கூட எதிர்பார்த்த பெரும் பான்மைப் பலத்தை பெற முடியாமல் போய்விட்டது. அதற்கு மேலாக சபாநாயகர் தெரிவில் ரணில் அரசுக்கு சார்பான ஒருவர் தெரிவானமை புலிகளுக்கு எதிரான தமது முயற்சிகளுக்கு விழுந்த பலத்த அடியாகவே ஆளும் தரப்பினர் கருதுகின்றனர்.


அவர்களுக்கு ஏற்பட்ட பலத்த ஏமாற்றத்தின் பிரதிபலிப்புத்தான் இந்த ஊனமுற்ற விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் ஆகும். ஊனமுற்றிருந்த புலி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் புலிகளை இலகுவாக சீண்டி யுத்தத்திற்குள் இழுத்து விடலாம் என்று எண்ணியவர்கள் மிகவும் கோழைத்தனமான தாக்குதலை தாம் மேற்கொள்வதை எப்படி மறந்து போனார்கள் என்று தெரியவில்லை.

இவர்கள் இதற்கு முன்பும் பலதடவைகள் புலிகளை யுத்தத்திற்குள் வீழ்த்த பலமுயற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள். ஆயித்தியமலை சம்பவம் என்பது அவர்களது முயற்சியின் ஓர் உச்சகட்ட முயற்சியாகவே நடந்திருக்கிறது.

தமிழ் மக்கள் குறைந்த பட்சமாகவாவது அடைந்து கொள்ள வேண்டிய உரிமைகளை வழங்குவதற்கு மறுத்து இரண்டு தசாப்த காலமாக யுத்தத்தை நடத்தி வந்த இந்த இனவாதிகள் அந்த யுத்தத்திலும் வெல்ல முடியாத நிலையில் கோடரிக் காம்புகளை வைத்து நடத்தும் கோழைத்தனமான யுத்தத்தில் எப்படி வெல்லப் போகிறார்கள் என்பதை தமிழ்த் தேசம் மட்டுமல்ல சிங்கள தேசமும் கூட அவதானித்துக் கொண்டுதானிருக்கிறது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தசாப்தங்களுக்குப் பின்னும் இணைய மறுத்த மக்கள்!


இணைப்பை ஆதரித்து வாக்களித்த கிரேக்க சைப்பிரஸ் பகுதி மூதாட்டி ஒருவர் முடிவை அறிந்ததும் தேவாலயம் முன்பாக சோகமே உருவாக அமர்ந்திருந்த காட்சி

இனரீதியாகப் பிரிந்து கிடக்கும் சைப்பிரஸை மீண்டும் இணைக்கும் முயற்சிகள் தோல்வி அடைந்து விட்டன. சைப்பிரஸ் தொடர்ந்து பிளவுபட்டே இருக்கப் போகிறது.

1974 ஆம் ஆண்டு சைப்பிரஸ்மீது துருக்கி படையெடுத்தது. துருக்கிய வம்சாவழியினர் பெரும்பான்மையாக வாழும் வடசைப்பிரஸை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது.

அன்றில் இருந்து சைப்பிரஸ் துண்டாடப்பட்ட நாடாகவே இருந்து வருகிறது.

கிரேக்கர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி கிரேக்க சைப்பிரஸ் என்று அழைக்கப்படுகிறது.

துருக்கியர் பெரும்பான்மையினராக வாழும் பகுதி துருக்கிய சைப்பிரஸ் என்று கூறப்படுகிறது.

பிரிந்து கிடக்கும் சைப்பிரஸை மீண்டும் இணைக்கும் முயற்சிகள் இதற்கு முன்பும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், உருப்படியாக எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானின் இணைப்பு முயற்சி ஒன்றே தற்போது நிராகரிப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி சைப்பிரஸை மீண்டும்இணைக்க வேண்டுமா என்பது குறித்து கிரேக்க சைப்பிரஸிலும் துருக்கிய சைப்பிரஸிலும் தனித்தனியாக வாக்களிப்புக்கள் இடம்பெற்றன.

துருக்கிய சைப்பிரஸில் வாழும் மக்களில் 64.91 சதவீதமானோர் இணைப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர். கிரேக்க சைப்பிரஸில் வாழ்வோரில் 75.83 சதவீதமானோர் இணைப்பை நிராகரித்து வாக்களித்தனர்.

இதனால் சைப்பிரஸை மீண்டும் ஒரே நாடாக இணைக்கும் முயற்சி கைநழுவி விட்டது.

பிளவுபட்டிருக்கும் சைப்பிரஸை மீண்டும் இணைக்கும் அரிய வாய்ப்பு தவற விடப்பட்டு விட்டதாக கோபி அனான் கவலை வெளியிட்டுள்ளார்.

கிறீஸுக்கும் (கிரேக்கம்) துருக்கிக்கும் அருகில் உள்ள தீவு சைப்பிரஸ். இங்கு உள்ள மொத்த சனத்தொகை 8 இலட்சம். அதில் 2 இலட்சம் பேர் துருக்கிய வம்சாவளியினர்.

காலாகாலமாக கிறீஸில் இருந்தும் துருக்கியில் இருந்தும் வந்து குடியேறியவர்களைக் கொண்ட நாடே சைப்பிரஸ்.

1960 களில் சைப்பிரஸில் உள்ள கிரேக்க வம்சாவழியினருக்கும் துருக்கிய வம்சாவழியினருக்கும் இடையில் அடிப்படி இனமோதல்கள் இடம்பெற்று வந்தன.

1970 களின் முற்பகுதியில் இன மோதல்கள் உச்ச கட்டத்தை அடைந்த போது இன அழிவில் இருந்து தனது இன மக்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் துருக்கிய அரசுக்கு ஏற்பட்டது. இதன் விளைவே 1974 ஆம் ஆண்டுப் படையெடுப்பு.

துருக்கியின் நடவடிக்கையை அப்பொழுது பல நாடுகள் கண்டித்தன ஐ.நா. தலையிட்டது.

கிரேக்க வம்சாவழி மக்கள் வாழும் பகுதிக்கும் துருக்கி வம்சாவழி மக்கள் வாழும் பகுதிக்கும் இடையில்ஐ.நா.ஏற்பாட்டில்எல்லை ஒன்று வகுக்கப்பட்டது. இதனை மேற்பார்வை செய்ய ஐ.நா.சமாதானத் தூதரகம் ஒன்றும் நிறுவப்பட்டது. அப்பொழுது நிறுவப்பட்ட இந்த தூதரகம் இன்னும் இயங்கி வருகிறது.

பிளவுண்டு போன சைப்பிரஸை மீண்டும் ஒன்றிணைப்பதே ஐ.நா.சமாதானத் தூதரகத்தின் நோக்கமாக இருந்தது. இணைப்பு முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து ஐ.நா. சமாதானத் தூதரகமும் மூடப்பட இருக்கிறது.

சர்வஜனவாக்கெடுப்பில்கிரேக்க சைப்ரஸ் மக்கள் இணைப்புக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான். ஆனால், இவ்வளவு பெரும் தொகையானோர் இணைப்பை எதிர்ப்பார்கள் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

குறைந்த வித்தியாச வாக்குகளால் இணைப்பு தோற்கடிக்கப்படும் பட்சத்தில் இன்னும் சில மாதங்கள் கழித்து மீண்டும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி இணைப்புக்கு அங்கீகாரம் பெற்று விட முடியும் என்றே கோபி அனான் எதிர்பார்த்தார். ஆனால் இனி அதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விட்டதாக தற்போது கருதப்படுகிறது. கிரேக்க வம்சாவழியினரிடம் இருந்து இணைப்புக்கு பெரும் எதிர்ப்பு இருப்பதால் அவர்களின் மனதை மாற்றும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

கிரேக்கசைப்பிரஸ்ஜனாதிபதி ராசொஸ் பட்படோபோலஸ் இணைப்புக்கு எதிராக வாக்களிக்கும் படி கிரேக்க சைப்பிரஸ் மக்களைக்கேட்டுக் கொண்டிருந்தார்.

இணைப்புக்குப் பதிலாக துருக்கியசைப்பிரஸுடன் உடன்பாடு ஒன்றை எட்ட முடியும் என்று கிரேக்க சைப்பிரஸ் ஜனாதிபதி நம்புகிறார்.

துருக்கிய சைப்பிரஸ் பிரதமர் மெஹ்மட் அலி தாலட், இணைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கும் படி தனது மக்களைக் கேட்டிருந்தார்.

சைப்பிரஸை மீண்டும் இணைக்கும் முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து துருக்கிய சைப்பிரஸில் நிலை கொண்டுள்ள 30 ஆயிரம் துருக்கிய படைகள் வாபஸ்பெற மாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. துருக்கிய படைகள் தொடர்ந்து நிலைகொள்ளப்போகின்றன.

சைப்பிரஸ்மே முதலாம் திகதி ஐரோப்பிய யூனியனில் சேர்ந்து கொள்ள இருக்கிறது. இணைப்பு முயற்சி தோல்வி அடைந்ததால் கிரேக்க சைப்பிரஸ் மட்டும் ஐரோப்பிய யூனியனில் சேர்ந்து முழு நன்மைகளையும் பெறப் போகிறது.

ஐ.நா.பொதுச்செயலாளர் கோபி அனானின் இணைப்புத் திட்டத்தின் கீழ் துருக்கிய வம்சாவழியினரை பெரும் பான்மையினராகக் கொண்ட சைப்பிரஸின் வட பகுதி சமஷ்டி அமைப்பு ஒன்றின் கீழ் கிரேக்க சைப்பிரஸுடன் இணைக்கப்பட இருந்தது. அவரின் இணைப்புத் திட்டம் வெற்றி பெற்றிருந்தால், சமஷ்டி அமைப்பின் கீழ் சைப்பிரஸ் ஒன்றிணைக்கப்பட்டிருக்கும்.

அதேசமயம் 1974 துருக்கிய படையெடுப்பின் பின்னர் கிரேக்க சைப்பிரஸில் இருந்து வெளியேறிய ஆயிரக் கணக்கான துருக்கிய வம்சாவழியினர் மீண்டும் அங்கு சென்று அப்பொழுது தாம் விட்டுச் சென்ற தமது நிலங்களுக்கும் சொத்துக்களுக்கும் உரிமை கோர முடியும். இணைப்பை கிரேக்க சைப்ரஸ் மக்கள் எதிர்க்க இதுவும் ஒரு காரணம்.




1976 படைஎடுப்பின் போது துருக்கிய சைப்பிரஸில் இருந்து மிகவும் சொற்ப கிரேக்க வம்சாவழியினரே வெளியேறி இருந்தனர்.

1974 துருக்கிய படையெடுப்புக்குப் பின்னர் துருக்கியசைப்பிரஸ்மீதான கிறீஸினதும் மற்றும் நாடுகளினதும் பொருளாதாரத் தடை தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. துருக்கி மட்டுமே துருக்கிய சைப்பிரஸை அங்கீகரித்திருந்தது.


எல்லையில் ஐ.நா. அமைதிப்படையினர்

கடந்த 30 ஆண்டுகளாக துருக்கிய சைப்பிரஸ் தனிமைப்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பின் தள்ளப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனில் அது சேர்க்கப்படாத பட்சத்தில் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து அது மீளமுடியாத நிலையும், துருக்கி நாட்டிலேயே முற்றும் முழுதுமாக தங்கி இருக்க வேண்டிய நிலையும் தொடரப்போகின்றன.

உலகில் இணைந்த நாடுகள் பல பிரிந்திருக்கின்றன. பிரிந்த நாடுகள் இணைந்திருக்கின்றன. ஆனால், சைப்பிரஸின் நிலைமை வேதனை தருகிறது.

-சஞ்சாரன்-


கிரேக்க சைப்பிரஸ் ஜனாதிபதி வாக்களிப்பு.


துருக்கிய சைப்பிரஸ் பிரதமர் தனது மனைவியுடன்

# தொங்கு நாடாளுமன்றத்தை நோக்கி இந்தியா?

இலங்கையில் தொங்கு நாடாளுமன்றம், எதிர்க்கட்சி சபாநாயகர் என்ற கூத்துகள் நடந்தேறிக்கொண்டிருக்கும் நிலையில் அயல்நாடான இந்தியாவிலும் அதே நிலைமை ஏற்படும் எனத் தெரியவருகிறது.

அந் நாட்டின் 14ஆவது நாடாளுமன்றத் தேர்தல்கள் எந்த ஒரு கட்சிக்கோ அல்லது அணிக்கோ அறுதிப் பெரும்பான்மையை தராத ஒரு வாக்களிப்புக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கின்றன.

ஐந்து கட்டங்களாக நடைபெறும் இத் தேர்தல் வாக்களிப்பின் இறுதிக்கட்டம் அடுத்த மாதம் 10ஆம் திகதி நடைபெறுகிறது. இதில் வேடிக்கை என்னவெனில் தேர்தல் கூத்து ஜனவரி முதல் வாரத்திலேயே தொடங்கிவிட்டது. அப்போது எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் ஆளும் பி.ஜே.பி கூட்டணி 300 முதல் 335 இடங்களை வெல்லும் என்று பெரிதாகக் கூறப்பட்டது. ஆனால் இந்தப் பந்தியில் கடந்த பல வாரங்களாக ஜனவரி, பெப்ரவரி மாதங்களிலேயே எழுதப்பட்ட ஒரு விடயம் இப்போது உண்மையாகியுள்ளது. அதாவது கருத்துக்கணிப்புகள் கூறுவது போல் 335 இடங்கள் பி.ஜே.பி க்கு கிடையாது என்பதே இப்பத்தியில் திருப்பித் திருப்பி எழுதப்பட்டது. அதுவே இப்போது உண்மையாகியுள்ளது.

மொத்தமுள்ள 543 லோக்சபா தொகுதிகளில் 278 தொகுதிகளுக்கான வாக்களிப்பு கடந்த 26ஆம் திகதியுடன் முடிந்துவிட்டது. வாக்களிப்பு முடிந்த கையுடன் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புகள் பி.ஜே.பிக்கு எதிர்பார்த்த வெற்றி கிடையாது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. 278இல் பி.ஜே.பி கூட்டணி 144–154 தொகுதிகளே கிடைக்குமென அவற்றில் கூறப்பட்டுள்ளது. இது 278இல் அரைவாசியே என்றாலும் முக்கியமான விடயம் என்னவெனில் மேற்கு வங்கம்(42 தொகுதிகள்) தமிழகம்(40 தொகுதிகள்), கேரளா(20 தொகுதிகள்) ஆகிய மாநிலங்களின் தேர்தல்கள் இனித்தான் நடைபெறவுள்ளன.

இவற்றில் கேரளாவில் வரலாற்றில் ஒரு லோக்சபா ஆசனத்தைத்தானும் வென்றது கிடையாது. ஏன் சட்டசபையில் கூட ஒரு பி.ஜே.பி உறுப்பினர் கிடையாது. மேற்கு வங்கத்தில் கடந்த இரு தேர்தல்களில் (1998 மற்றும் 1999) பி.ஜே.பி ஒரு லோக்சபா ஆசனத்தை வென்றிருந்தது. தமிழகத்தில் 1998இல் மூன்று ஆசனங்களும் 1999இல் 4 ஆசனங்களும் பி.ஜே.பியில் வெல்லப்பட்டன. ஆக இம் மூன்று மாநிலங்களில் மொத்தம் 102 தொகுதிகள் உள்ளன. இவற்றில் ஐந்தே தொகுதிகள் தான் பி.ஜே.பி க்கு 1999இல் கிடைத்துள்ளன.

இம் முறை தமிழகத்தில் பி.ஜே.பி வசமுள்ள 4 தொகுதிகளுமே குறையலாம். இந்நிலையில் இந்த 102 தொகுதிகளில் இரண்டு தொகுதிகளே பி.ஜே.பி க்கு மிஞ்சலாம். இந்த 102 தொகுதிகளை சேர்த்தால் மொத்தம் 380இல் பி.ஜே.பி கூட்டணிக்கு



ஆறு ஆண்டுகளின் பின் ஜெயலலிதா, வாஜ்பாய் ஒரே மேடையில்

146–156 தொகுதிகள் மிஞ்சும். அதாவது அரைவாசிக்கும் மிகக் குறைவு.

எஞ்சியுள்ள 153 தொகுதிகளில் மத்திய பிரதேசத்தின் 40, ராஜஸ்தானின் 25, பஞ்சாபின் 13 என்பனவே பி.ஜே.பிக்கு நம்பிக்கை தரக்கூடிய மாநிலங்கள். இதைவிட உத்தரப்பிரதேசத்தின் 47, பீகாரின் 23 தொகுதிகளும் பி.ஜே.பிக்கு நம்பிக்கை தரலாம். ஆனாலும் இம் மாநிலங்களில் கடந்த தேர்தலில் பெற்றதைவிட அதிக்ரிப்பு என்று பி.ஜே.பிக்கு கிடைக்க வாய்ப்பில்லை. உதாரணமாக 1999இல் மத்திய பிரதேசத்தின் 40 தொகுதிகளில் 29பி.ஜே.பியாலும் 11 காங்கிரசாலும் வெல்லப்பட்டன. இந்த 29ஐ விட ஓரிரு ஆசனங்கள் மட்டுமே பி.ஜே.பிக்கு அதிகரிக்கலாம். அங்கு சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் பி.ஜே.பி வென்று ஆட்சியைப் பிடித்ததால் லோக்சபாத் தேர்தலிலும் பி.ஜே.பிக்கு ஆதரவான ஒரு அலை இருப்பது உண்மையே. எனினும் கடந்த முறையே (1999) 40இல் 29ஐ வென்றுவிட்ட பி.ஜே.பி அதிகரிப்பு என்று பெரிதாக எதிர்பார்க்க முடியாது.

ராஜஸ்தானிலும் நிலைமை மத்திய பிரதேசம் போன்றது தான். மொத்தம் 25 தொகுதிகளில் 16ஐ பி.ஜே.பி 1999இல் வென்றது. காங்கிரசுக்கு 9 கிடைத்தது. மிஞ்சிப்போனால் இன்னும் 3–4 இடங்கள் அதிகரிப்பு பி.ஜே.பிக்கு கிடைக்கலாம்.

பஞ்சாபில் மாநில ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் அவ்வளவாக வெல்ல முடியாது எனத் தெரிகிறது. பி.ஜே.பியும் அதன் பலம் வாய்ந்த தோழமைக்கட்சியான சீக்கிய அகாலிதள் கட்சியும் வெற்றி வாய்ப்பை எதிர்பார்க்கின்றன. ஆனால் இது பெரிய மாநிலமல்ல; மொத்தம் 13 தொகுதிகள் தான் பஞ்சாபிலுள்ளன.

இந்தியாவின் பிரதமர்களின் தொகுதிகள் அமைந்ததும் அதிகூடிய தொகுதிகள் (80) கொண்டதுமான உத்தரப்பிரதேசம் இந்தியாவின் மத்திய அரசைத் தீர்மானிக்கும் மாநிலம் எனப்புகழப்படுவதாகும். இம் முறை உத்தரப்பிரதேசம் உண்மையாகவே டெல்லி அரசை தீர்மானிக்கப்போகிறது. கடந்த முறை (1999)தேர்தலில் மத்திய அரசை தீர்மானிப்பதில் உத்தரப்பிரதேசம் பெரும் பங்கு வகிக்கவில்லை. அம்மாநிலத்தின் மொத்தம் 80 தொகுதிகளில் பி.ஜே.பி பாரம்பரியமாக 50க்கு மேற்பட்ட தொகுதிகளை வென்று வந்துள்ளது. 1996 மற்றும் லோக்சபா தேர்தல்களில் இதுவே நடந்தது. ஆனால் 1999இல் பி.ஜே.பியின் உத்தரப்பிரதேச எம்.பிக்கள் எண்ணிக்கை 27 ஆக வீழ்ந்தது.

சோனியாவின் வருகைக்குப்பின் பிராமணர்கள் பி.ஜே.பியை விட்டு காங்கிரசை பரவலாக ஆதரிக்கத் தொடங்கியது ஒரு காரணமாகும். 1998 இல் உத்தரப்பிரதேசத்தின் 80 தொகுதிகளில் ஒன்றைக்கூட காங்கிரசால் வெல்ல முடியவில்லை. ஆனால் அடுத்து வந்த 1999 தேர்தலில் சோனியா முதன்முறையாக தேர்தலில் பிரவேசித்தார். பயன் 80இல் பத்து தொகுதிகளை காங்கிரஸ் வென்று உத்தரப்பிரதேசத்தில் தனது பழைய செல்வாக்கை ஓரளவு நிலைநாட்டியது. அதில் சோனியா வென்ற அமேதியும் அடங்கும்.

1992இல் பாபர் மசூதி இடிப்பை அடுத்து பிராமணர் பி.ஜே.பி யை ஆதரிக்க மசூதி இடிப்பை தடுக்க முயலாத காங்கிரசின் தவறினால் முஸ்லிம்களும் காங்கிரசுடன் கோபமுற்று முலாயம்சிங்கின் சமாஜவாதிக் கட்சியை ஆதரிக்க காங்கிரசின் ஆதரவுத் தளம் தகர்ந்துபோனது. இம் முறையோ நிலைமை தலைகீழ். முலாயம் யாதவ் மறைமுகமாக பி.ஜே.பிக்கு ஆதரவு கொடுப்பதாலும் மசூதி இடிப்பை முஸ்லிம்கள் 12 ஆண்டுகளில் மறந்துவிட்டதாலும் முஸ்லிம்கள் மீண்டும் காங்கிரசை நோக்கி திரும்பி வரத் தொடங்கியுள்ளனர்.

யாதவர்களுடனும் தலித் கட்சியான மாயாவதியுடனும் பி.ஜே.பி குலாவுவதால் எரிச்சல் அடைந்துள்ள உயர்சாதி பிராமணர் மீண்டும் காங்கிரசுக்கு வாக்களிப்பதாலும் காங்கிரசின் பலம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இதைவிட ராகுல், பிரியங்கா பிரவேசம் உத்தரப்பிரதேசத்தில் காங்கிரசின் வாய்ப்புகளை அதிகரித்துள்ளது என்பது நிச்சயமான உண்மையாகும். மாநிலத்தில் மற்றொரு முக்கிய சாதியினரான ராஜ்புத்திரர்கள் முலாயமின் சமாஜவாதி கட்சிக்கு செல்வதாலும் பி.ஜே.பி யின் வாக்கு வங்கி மிகவும் நலிவடைந்துவிட்டது. இதனால் இம் முறையும் 25 வரையான இடங்களே பி.ஜே.பிக்கு கிடைக்கலாம்.

கடந்த வாரம் இப்பத்தியில் கூறியது போல் பி.ஜே.பி கூட்டணி அறுதிப் பெரும்பான்மை கிடையாது போனால் காங்கிரஸ் அணியிலுள்ள சில கட்சிகளை கவர்ந்து ஆட்சியமைக்க நேரிடும் என்ற விடயமும் உண்மையாகியுள்ளது. தேர்தலுக்குப்பின் அணி மாற்றங்கள் உண்டு என வாஜ்பாயே இவ்வாரம் பகிரங்கமாக கூறியுள்ளார். அஸாமில் முன்னர் ஆளும் கட்சியாக இருந்த அஸாம் கணபர்ஷித் அஸாமில் 5–6 ஆசனங்களை வெல்லலாம் எனத் தெரிகிறது. இக்கட்சி பி.ஜே.பி கூட்டணியில் இல்லை. எனவே இக்கட்சியும் காங்கிரஸை எதிர்ப்பதற்காக பி.ஜே.பி அணியில் சேரலாம். இதைவிட ராமதாஸ், சரத்பவார் என மேலும் பலரும் பி.ஜே.பி அணியில் இணைந்து ஆட்சியில் பங்கேற்கலாம்.

-எஸ். சுரேந்திரஜித்-

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சக்தி செய்திகள் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல்/பாடல்கள் 7.20 | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒரு கதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவி |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலன்கள் ரசித்தவை | ரிலாக்ஸ்டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | இடைநிரப்பு நிகழ்ச்சி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | பிளக் பூஸ்டர் மூவி |
| 2.00 | (றொமேன்ஸ்) | சக்தி மேட்னி | (கொமடி) | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | 1ஆம் பகுதி | 1ஆம் பகுதி | 1ஆம் பகுதி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | கில்லி | மதியபோன இடைவேளை | மதியபோன இடைவேளை | மதியபோன இடைவேளை | ஜீபூம்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி – மேன் | தமிழ் கார்ட்டூன் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | ஓ போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | 2ஆம் பகுதி | 2ஆம் பகுதி | 2ஆம் பகுதி | வேலன் |
| 5.15–5.30 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | 5.45 அன்பு மடல் 6.00 |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | தேனீர் இடைவேளை 6.40 | தேனீர் இடைவேளை 6.40 | தேனீர் இடைவேளை 6.40 | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | 3ஆம் பகுதி | 3ஆம் பகுதி | 3ஆம் பகுதி | அக்ஷன் சீரியல் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | (24) |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | இளைய கானம் |

# மீண்டும் ஒரு பொதுத்தேர்தலுக்கு தயாராகும் 'மகாஜனங்கள்'

மகாவலி அமைச்சு தொடர்பாக ஜே.வி.பியுடன் நிலவிவந்த சர்ச்சைகளும் இழுபறிகளும் ஒருவாறாக தற்காலிகமாகவேனும் தீர்க்கப்பட்டதையிட்டு ஜனாதிபதியும், பிரதமரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கலாம். ஜே.வி.பி அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் பதவியேற்றுவிட்டனர். ஜே.வி.பி. ஏற்றுள்ள அமைச்சுப் பொறுப்புக்களுக்கூடாக அந்தக் கட்சி மிகப்பலமான வேலைத் திட்டங்களை மக்கள் முன்வைத்து உறுதியான அரசியல் ஆதரவை மேலும் வளர்க்கப் போகிறது.

அந்த வளர்ச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இருபெரும் கட்சிகளின் அரசியல் ஆதரவை நிச்சயமாகத் தேய்த்து விடப்போகிறது. ஏற்கனவே தர்மராஜ்ஜியம் என்ற பரப்புரையுடன் வளரத் தொடங்கியுள்ள பௌத்த பிக்குகளின் ஜாதிக ஹெல உறுமயவும் இலங்கையின் இரு பெரும் பாரம்பரியக் கட்சிகளுக்கும் பிரச்சினையான விடயங்களே.

ஏற்கனவே பெரும்பாலான விடயங்களில் ஒத்த கருத்துக்களைக் கொண்ட ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரு கட்சிகளும் தற்பொழுது தமக்கிடையே நிலவும் முரண்பாடுகளை மறந்து சிங்கள அரசியலில் ஒன்றிணைவதற்கான சாத்தியங்கள் தோன்றுமெனில் அந்த ஒன்றிணைவின் மூலம் மேலும் ஸ்ரீலங்கா சு.க., ஐ.தே.க. என்பன அரசியல் தேய்வுக்கு உட்படலாம்.

ஜே.வி.பியின் அரசியல் செல்வாக்கு வளர்ந்து உச்சம்பெறுவது என்பது சிலவருடங்கள் எடுக்கப்போகும் பிரச்சினை. ஆனால், அரசாங்கம் அடுத்த சில வாரங்களில் தொடங்கி அடுத்த சில மாதங்களுள் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் அதிகம் உள்ளன?

## ஜனாதிபதிக்கும் ஹெல உறுமயவின் ஆதரவு இல்லை


சபாநாயகராக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் லொக்கு பண்டார தெரிவு செய்யப்பட்டமை அரசாங்கத்துக்கு விழுந்த முதல் அடியாகும். அதில் மிகவும் அவதூறாகப் பேசப்பட்ட விடயம் ஜாதிக ஹெல உறுமயவின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களான பிக்குகளை 'பதுக்கி வைத்து' சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பில் பயன்படுத்தியமை ஆகும்.

இவ்விவகாரத்தால் ஏற்பட்ட சர்ச்சைகள் காரணமாக ஜாதிக ஹெல உறுமயவின் ஏனைய ஏழுபேரின் ஆதரவை இனிமேல் கோரமுடியாத துரதிஷ்டமான நிலை ஜனாதிபதிக்கு எழுந்துள்ளது. முன்னர் ஜனாதிபதிக்கு தாம் அரசாங்கத்துக்கு ஓரளவு வெளியிலிருந்து ஆதரவு தெரிவிக்க தயாராக இருப்பதாக ஜாதிக ஹெல உறுமய கூறியது. அது இனிமேல் சாத்தியப்படுமா என்பது சந்தேகமே.

## சந்திரிகாவின் சமாதான ஆவலும் அவசரமும்

அரசாங்கம் தனது பெரும்பான்மை பலத்தை நிருபிப்பதற்கு முன்பதாக விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அல்லது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும்என்றஉறுதியானநம்பிக்கையை ஏற்படுத்த தீவிரமான முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதனடிப்படையில் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தனது கூட்டாளிக் கட்சிகளுடன் தெளிவான உடன்பாடுகள் எதையும்எள்ளளவும்எட்டாத ஜனாதிபதி,நோர்வே அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிக்க முன்முயற்சிகளை எடுக்கும்படி ஆவலும் அவசரமும் கலந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அதற்கு நோர்வே இவ்விடயத்தில் விடுதலைப்புலிகளின் விருப்பம் பற்றிய அறிவிப்பும் அவசியம் என்று வலியுறுத்தியுள்ளது. இதனையிட்டு உதயன் – சுடர்ஒளி செய்தி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட விடுதலைப்புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம், அமைந்திருக்கும் அரசாங்கத்தின் அரசியல் ஸ்திரப்பாடற்ற தன்மை, அகமுரண்பாடுகள் தொடர்பில் விடுதலைப்புலிகள் தொடர்பாக ஜே.வி.பி. கொண்டுள்ள நிலைப்பாடுகள் என்பன பற்றி தயக்கமான தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.



அதிகார பீடத்தில் தனது ஆணிவேரை இன்னமும் பதிக்கமுடியாமல் ஈடாடும் புதிய அரசு உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் தனது அரசு ஒரு புதிய தென்போடு செயற்படுகிறது என்பதைக் காட்டவும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதன் மூலம் உள்ளூர், சர்வதேச ஆதரவுகளை மீட்டுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடனும் நோர்வே ஊடாக விடுதலைப்புலிகளுடன் சமரசத் தொடர்புகளை மீட்டுக்கொள்ள எத்தனிக்கிறது. இதன்மூலம்சர்வதேசபொருளாதார உதவிகள் தடையின்றி கிடைக்க முடியும் எனவும் ஜனாதிபதி நம்புகிறார்.

மேலும் சிறுபான்மை இனத்தவரின் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளின் கவனத்தையும் தம்பக்கம் ஈர்க்கலாம் எனவும் இதன் மூலம் நாடாளுமன்றத்தில் ஒருவாறு 113 ஆசனங்களை நிலைநாட்டி விடலாம் எனவும் ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானித்திருக்கலாம்.

ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களைத் தொடக்குவதில் அவசரம் காட்டுகிறார் என்பது இலகுவில் எவராலும் விளங்கிக் கொள்ளக் கூடிய விடயமென்பதனால் விடுதலைப்புலிகள், ஜனாதிபதியின் ஆவல், அவசரங்களுக்கு உகந்த அட்டவணையொன்றின் அடிப்படையில் தொழிற்படுவதில் தயக்கமும் எச்சரிக்கையும் உடையவர்களாகவே இருக்கின்றனர். என்பது அன்டன் பாலசிங்கத்தின் கருத்திலிருந்து வெளிவருகிறது.

## ஜே.வி.பியிடம் அதிசயமாற்றம் நிகழுமா?

ஜே.வி.பியினர் அனைவரும் ஆச்சரியப்படத்தக்க வகையில், முன்பு கூறிவந்த விடாப்பிடியான புலிகளுக்கு எதிரான போக்கை முற்றாகக் கைவிட்டு விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் தொடர்பாக பேசுவதற்கு இணங்குவதுடன் விடுதலைப்புலிகளின் ஏகோபித்த பிரதிநிதித்துவத்தையும் அரசியல் இராணுவத் தலைமைகளையும் ஏற்றுக்கொண்டால் புதிய அரசாங்கத்துக்கு இருபத்திரெண்டு தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவும் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் உருவாகலாம். ஆனால், ஜே.வி.பி எவ்வளவு தூரம் இவ்விடயத்தில் செயற்படும் என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

## புதிய அரசாங்கத்தின் ஆயுள் நீடிக்குமா?

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா அதிக தலையீட்டை மேற்கொள்ள வேண்டும் என்ற தொனி கொண்ட ஜே.வி.பியும் எடுத்த எடுப்பிலேயே இந்தியா தலையிடும் தகுதி கொண்ட நாடு தான் என அடித்துக் கூறிவந்த புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், புதிய அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் கதிர்காமரும் தமது இராக ஆராதனையை தற்போதைக்குக் கைவிட்டு விட்டவர்கள் போலத் தோன்றுகின்றனர்.

தமது புதிய அரசாங்கத்தின் ஆயுளைக் காப்பாற்றக் கிடைத்த ஒரு நல்ல துரும்பாக புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை பயன்படுத்த ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்க சகபாடிகளும் விரும்புகின்றனர். பிரதமர் மகிந்த அமைச்சர் கதிர்காமர் போன்றோர்கூட – ஏன் இந்திய இராஜதந்திரிகள் கூட – அரசாங்கம் தனது ஆயுளைக் காப்பாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை வரவேற்கவே செய்வர் என்பதை அவதானிக்க முடிகிறது.

நோர்வே அரசாங்கம் தனது பிரதிநிதிகளை இவ் வாரம் இலங்கைக்கு அனுப்பி ஜே.வி.பியையும், விடுதலைப்புலிகளையும் நாடிபிடித்துப் பார்க்கிறது. எனினும் மிகக் கவனமாக சூழ்நிலைகளை எடைபோட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, தனது அரசியல் இருப்பையும், தனது கட்சியின் எதிர்கால அரசியலையும் தக்கவைத்துக்கொள்வதற்கான வியூகங்களை வகுப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார். அரசாங்கத்தை அமைத்துக் கொள்வதற்கான தெளிவான நிலை தன்னை நாடிவரும் வரை அவர் அவசரம்காட்டப்போவதில்லை.

## துரித வேலைவாய்ப்பும் சம்பள உயர்வும்

இச்சந்தர்ப்பத்தில் பெரும்பான்மையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிருபிக்க முடியாமற் போனாலும் – ரணிலுக்கு அடுத்து ஒரு அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டாலும், மீண்டும் விரைவில் – தான் ஜனாதிபதியாக இருக்கும்போதே – 14 ஆவது நாடாளுமன்றத்தேர்தலை நடத்தி, அரசாங்கம் அமைக்கக்கூடிய அளவு பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளகூடிய வகையில் இடையில் கிடைக்கும் காலத்தைச் சாதகமாகப் பயன்படுத்த ஜனாதிபதி முயல்கிறார்.

பொதுமக்கள் மீண்டும் ஒரு தேர்தல் ஓராண்டுக்குள் வரும் என உறுதியாக நம்புகின்றனர். பொது மக்களுக்கான சமூக நலன்புரி நடவடிக்கைகளை துரிதமாக முடுக்கி விரைவுபடுத்த ஜனாதிபதி கங்கணம் கட்டிவிட்டார். அடுத்த தேர்தலில் மக்களின் ஆதரவை மேலும் திரட்டுவதற்கான முயற்சிகளே இவை என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் திட்டங்கள், விவசாயிகள் மீனவர்களுக்கான நலன்புரித்திட்டங்கள், புதிய கிராமிய நகர மட்டங்களிலான துரித அபிவிருத்தித்திட்டங்கள், அதிவேகபயண நெடுஞ்சாலைகளை அமைத்தல் போன்றவற்றை உடனேயே அமுலாக்க ஜனாதிபதி அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தான் முன்பு அமைத்த திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் குறிப்பிட்ட சில பகுதிகளின் கீழ் அரசாங்க ஊழியர்களுக்கு மற்றுமொரு கவர்ச்சிகரமான சம்பள உயர்வை வழங்கவும் பொது நிர்வாக அமைச்சுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். அந்தச் சிபாரிசுகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெறப்பட்டபின் இந்த மேலதிக கொடுப்பனவை அரச ஊழியர்களுக்கு வழங்குவதன் மூலம் நாடெங்கிலும் உள்ள அரசாங்க ஊழியர்களின் ஆதரவு தனக்கும், தனது கட்சிக்கும் கிடைத்துவிடும் என ஜனாதிபதி கனவு காண்கிறார்.

அவரது முயற்சிகள் எவ்வாறாக இருப்பினும், அவர் நினைத்த இலக்கை எட்டுவ்தற்கு தற்போதிருக்கும் குறைந்தபட்ச பெரும்பான்மையையாவது தக்கவைத்துக்கொள்ள அவரால் முடியுமா?

எதிர்வரும் 18ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் பிரதிச் சபாநாயகர் தேர்வு நடைபெறும் போது தனது கட்சியின் சார்பில் ஒருவரை நிறுத்தி அவர் அப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட வேண்டும். அந்த முயற்சியும் தோல்வியில் முடியுமானால், தனக்கு ஆதரவான நாடாளுமன்றம் பற்றி கற்பனையை அத்துடன் அவர் மறந்துவிட வேண்டியதுதான்.

– யாழ்ஆத்மா –

# வீடியோ கேம்ஸ் மியூசியம்

தற்போது பள்ளிமாணவ, மாணவியரிடையே கம்பியூட்டர் மற்றும் வீடியோ கேம்ஸ் மிகவும் பிரபலமாகி வருகின்றது. வீடியோகேமுடன் தான் பல மாணவர்களின் பொழுது போகிறது. வீடியோ கேம்ஸில் மாணவர்கள் அநேக விதங்களை எதிர்பார்க்கின்றார்கள்.

மணவர்களின் ஆசைகளை நிறைவேற்றும் வகையில் இன்டர்நெட்டில் நிறைய வீடியோ கேம்ஸ் தொடர்பான வெப்சைட்டுகள் உள்ளன. அதில் WWW.COMPUTERAND-VEDOGAMES.COM என்பது முதன்முதலில் கம்பியூட்டர் மற்றும் வீடியோ கேம்ஸிற்கென தொடங்கப்பட்ட பத்திரிகையின் ஒன்லைன் வடிவமாகும்.

முதலில் பிரிண்டில் தொடங்கப்பட்ட இந்த வெப்சைட் காலத்தில் மாற்றம் கருதி இப்போது இன்ட்ர்நெட்டில் ஒன்லைன் வடிவம் பெற்றுள்ளது.

இந்த வெப்சைட்டில் பொழுதுபோக்கும் வகையிலும் அதே சமயத்தில் அறிவுத்திறனையும், சூழ் நிலைக்கு ஏற்றாற் போல உடனடி முடிவு எடுக்கும் கலையையும் வளர்க்கும் வகையில் நிறைய வெப்சைட்டுகள் உள்ளன.

குழந்தைகளுக்கு வீடியோகேம் சாதனம் வாங்கிக் கொடுத்தால் அதில் 'default' ஆக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்களை மட்டுமே விளையாட முடியும். குழந்தைகள் இன்டர்நெட்டில் ஒவ்வொரு நாளும் புதிது புதிதான விளையாட்டுக்களை விளையாட பிரியப்படுகின்றனர். இதற்கு WWW.VGMU-SEUM.COM என்ற வீடியோகேம்ஸின் ஒன்லைன் மியூசியத்தைப் பயன்படுத்தலாம். வீடியோ கேம்ஸ் எனும் 'concept' தோன்றிய காலம் முதல் இன்றைய நவீன வளர்ச்சி வரை இந்த வெப்சைட்டில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

கம்பியூட்டர் மற்றும் வீடியோ கேம்ஸை பொறுத்தவரை பெற்றோர் கற்றுக்கொள்ள நிறையவே உள்ளன என்பதை வெப்சைட்டிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

# தன் இயல்புத் தடம் பதித்த 13ஆவது தேர்தலும் நாடாளுமன்றமும்

பொதுவாகவே இலக்கம் 13 நன்மை தரும் இலக்கமாக அங்கீகரிக்கப்படவில்லை. இந்த விடயத்தில் உடன்பாடுகளும் முரண்பாடுகளும் இருக்கலாம். ஆனால் இலங்கை நாட்டில் அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத்துக்கான 13ஆவது தேர்தலும், அதன்பின்பு கூடிய 13ஆவது நாடாளுமன்றமும் இந்த இலக்கத்தின் இயல்புகள் பற்றி வெளிப்படுத்தப்படும் விடயங்கள் சரியானவை தானா என்று வியப்புடன் வினவ வைத்திருக்கின்றன.

இலங்கை, பிரித்தானிய நிர்வாகத்திலிருந்து விடுபட்ட பின்னர், நாட்டை சுதந்திரப் பிரகடனம் செய்த சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் நாடாளுமன்றத்துக்கான ஏழு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. 1948, 1952, 1956, 1960—மார்ச், 1960— ஜூலை, 1965, 1970.

முதலாவது குடியரசு அரசமைப்பு 1972இல் அமுலுக்கு வந்த பின்பு அதன்கீழ் 1977இல் ஒரு தேர்தல் நடைபெற்றது.

புதிய குடியரசு அரசமைப்பு 1978இல் அமுலுக்கு வந்தபின்பு 1989, 1994,2000, 2001,2004 ஆகிய ஐந்து தேர்தல்கள் இடம்பெற்றன. அந்த வகையில் 2004 ஏப்ரல் 2இல் நடைபெற்ற தேர்தல் 13ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் ஆகின்றது.

## தேர்தலுக்கு முன்பு

நாடளாவிய ரீதியில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் பின்வரும் பிரதான கட்சிகள் அல்லது கூட்டமைப்புக்கள் தேர்தலுக்கு முகம் கொடுத்தன.

அ) ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி), மக்கள் ஐக்கிய முன்னணி(எம்.ஈ.பி), தேசிய ஐக்கிய முன்னணி(நு ஆ), போன்ற பிரதான கட்சிகள் இணைந்த ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு.

> தூய வெள்ளைத்துணி விரிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்திருந்து எவர் முன்பும் எழுந்திராது அமர்ந்திருந்தபடியே ஆசியும் அறிவுரையும் வழங்கும் பௌத்த பிக்குமார் நாட்டின் அதிஉயர் பீடமான நாடாளுமன்றத்துக்குள் வைத்து அவமரியாதை செய்யப்பட்டது வரலாற்றில் முதலாவது சம்பவம்.

ஆ) ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (சில இடங்களில் தனியாகப் போட்டியிட்டது.), மலையக மக்கள் முன்னணி(சில இடங்களில் தனியாகப் போட்டியிட்டது.), மேல் மாகாண மக்கள் முன்னணி என்பவை இணைந்த ஐக்கிய தேசிய முன்னணி.

இ)தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், தமிழ் ஈழ விடுதலைக்கழகம்(ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ் — சுரேஸ் அணி) என்பவை இணைந்த தமிழ் அரசுக்கட்சி.

ஈ)பௌத்த பிக்குகளை மட்டும் போட்டிக்கு நிறுத்திய ஜாதிக ஹெல உறுமய.

உ) ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)

இவை தவிரவும், புளொட் அமைப்பு உட்பட வேறு சில கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் போட்டியிட்டன. ஆசனங்கள் எதையும் பெறவில்லை.

மேலே.சுட்டிக்காட்டப்பட்ட ஐந்து கட்சிகள் அல்லது கூட்டமைப்புக்கள் நாடாளுமன்ற ஆசனங்களைப் பெறக்கூடியனவாகும். தம் செல்வாக்கை நாடாளுமன்றத்தில் செலுத்தக் கூடியனவாகவும் அமைந்தன.

## கவனத்தைக் கவர்ந்த திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்

அம்பாறை நிர்வாக மாவட்டம் எனப்படும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் 13 ஆவது தேர்தலின்போது சில காரணங்களால் அதிகளவு முக்கியத்துவம் பெற்றது. ஏழு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கவேண்டிய இந்த மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு, தமிழ் அரசுக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி எனும் பிரதான கட்சிகளும் நாடளாவிய வகையில் எண்ணிக்கையில்

# சில அவதானத் தொகுப்புக்கள்

அதிகளவான சுயேச்சைக்குழுக்களும் போட்டியிட்டன. இலங்கைத் தேர்தல் வரலாற்றிலே இதுவரை அச்சிடப்படாத அளவில் 26 அங்குல நீளத்தைக் கொண்ட வேட்பாளர்களுக்கான வாக்களிப்புப் பத்திரம் இந்த மாவட்டத்துக்கே அச்சிடப்பட்டது.

இலங்கை வாழ் முஸ்லிம்களின் பிரதான தலைமைத்துவங்கள் இந்த மாவட்டத்தில் போட்டியிட்டன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம், நுஆ தலைவி திருமதி பேரியல் அஷ்ரப், அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல் அதாவுல்லா ஆகியோர் போட்டியிட்டனர். தேர்தலில் மூவருமேவென்றனர்.

## மரணங்களைக்கண்ட மட்டக்களப்பு மாவட்டம்

தேர்தலையொட்டிய வன்செயல்களுள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த வன்செயல்கள் அதிகளவிலான பாரிய விளைவுகளை ஏற்படுத்தியதை நிராகரிக்க முடியாது.

வாழைச்சேனையில் இருவர் சுடப்பட்டனர். மட்டக்களப்பு நகரில் தேர்தலுக்கான தெரிவத்தாட்சி அலுவலரும், அந்த மாவட்டத்தில் அரசாங்க அதிபருமான மோன குருசாமி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் அரசுக் கட்சி முன்னணி வேட்பாளர்களுள் ஒருவரான இராஜன் சத்திய மூர்த்தி தேர்தலுக்கு முன்பே சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் அரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும், நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக அண்ணளவாக 14 ஆண்டுகளை நிறைவு செய்தவருமான ஜோசப் பரராஜசிங்கம் தேர்தலுக்கான உச்சக்கட்டத் தினங்களின் போதே தனது பிரசாரப்பணிகளில் ஈடுபட முடியாது முடக்கப்பட்டார்.

நாடளாவிய வகையில் நினைவில் குறித்து வைக்கக் கூடிய அளவுக்கு ஏனைய மாவட்டங்களில் முக்கிய நிகழ்வுகளை நாம் கூற முடியாது.

## தேர்தலுக்குப்பின்பு

13ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்பு நாடு கண்ட சில விளைவுகள் மகிழ்ச்சிக்குரியவையும் மனக்கசப்பானவையுமாக அமைந்தன. சுருக்கமான வகையில் அவற்றை நாம்இனம் காட்டலாம்.

1) நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்பில் இரண்டு ஆண்டுகள் நிலைப்புடன் செயற்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி மாவட்ட மட்ட எண்ணிக்கைகளின் அடிப்படையில் எதிர்பாராத தோல்வியைக் கண்டது.

2) வடக்கு— கிழக்கு தமிழ் மக்களின் விடுதலை வேட்கையை விமர்சனம்செய்து அரசாங்கத்தின் சமாதான முயற்சியை சாடி அவர் தம் முயற்சிகள் அனைத்தையும் தொடர்ந்து கடுமையாக எதிர்த்து வந்த மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.)பக்கபலத்துடன் தேர்தலுக்கு முகம்கொடுத்த அடிப்படையில் 160 தொகுதிகளுள் 106 தொகுதிகளிலும் மாவட்ட அடிப்படையில் 14 மாவட்டங்களிலும் சுதந்திரக் கூட்டமைப்பு வென்று 105 ஆசனங்களை வெற்றி கண்டது.

> சபாநாயகர் என்பவர் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்பு, 'சமன் செய்து சீர் தூக்கும் கோல்' போன்று சம நோக்குடையவர்.
>
> இந்த பாரம்பரிய எடுகோள் இந்த 13 ஆவது நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கான வேட்பாளர்கள் இருவரும் பெற்ற சமனான வாக்குகளால் மாத்திரமே மரியாதை பெற்றது.

3) தமிழர் தம் தாயக பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யாழ் மாவட்டம், வன்னிமாவட்டம், திருமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தமிழ் அரசுக்கட்சி எதிர்பார்த்த முழுமையான வெற்றியை இருபது பிரதிநிதிகளையும் இரண்டு தேசியப்பட்டியல் உறுப்பினர்களையும் பெற்றதன் மூலம் மொத்தமாக 22 ஆசனங்களை அடைந்து நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரும்பான்மை சக்தியாக அமைந்தது.

4) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து தமது 39 வேட்பாளர்களை நிறுத்திய ஜே.வி.பி 36 ஐ வெற்றி கொண்டது.

05)தமது சொந்த மாவட்டமான கண்டி மாவட்டத்தை விடுத்து தனது தலைமைத்துவத்துக்கான அங்கீகாரத்தை நிரூபிக்க முற்பட்டு திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் அந்த மாவட்டத்தில் போட்டியிட்டு தெரியப்பட்ட அத்தனை பிரதிநிதிகளையும் — குறிப்பாக சகல முஸ்லிம் பிரதிநிதிகளை விடவும் மிக அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றமை(68ஆயிரத்துக்கு அதிகம்) குறிப்பிடத்தக்கது.

6)வடக்கு —கிழக்கில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில்— குறிப்பாக— வன்னி பெருநிலப்பகுதியிலிருந்து மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

7) மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுமே

கலாநிதி
ஜெ.திவ்வியநாதன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிக்கும் புதுமுகங்கள் ஆவர்.

8) வடக்கு, கிழக்கு பிரதேசத்திலிருந்து முதன்முறையாக இரு பெண் உறுப்பினர் (யாழ்ப்பாணத்தில் ஒருவரும், மட்டக்களப்பில் ஒருவரும்) தெரியப்பட்டனர். இருவருமே தமிழ் அரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்களே நாடாளுமன்றத்துக்காக தேர்தலுக்கான தமிழர் தரப்பு வரலாற்றில் தெரியப்பட்ட முதல் பெண் உறுப்பினர்கள். முன்பு திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் எனும் தமிழ்ப்பெண் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்தில் அங்கம்பெற்றிருந்தபோதும் அவர் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர் அல்லர்.

9) இலங்கையின் நாடாளுமன்றத்தில் முதன்முறையாக 9 பௌத்த குருமார் ஆசனம் பெற்று வரலாறு படைத்தனர்.

மேலே காட்டப்பட்ட நினைவில் கொள்ளத்தக்க தடயங்களைப் பதித்துக் கொண்ட 13ஆவது நாடாளுமன்ற தேர்தல் மறக்க முடியாத மற்றும் சில நிகழ்வுகளையும் வெளிக்கொணர்கின்றது.

## இலக்கம் 13 இப்படித்தானோ?

13ஆவது நாடாளுமன்றத் தேர்தல்முடிந்த பின்பு நிகழக்கூடியன அல்லஎன்று நினைக்கப்பட்ட சில நிகழ்ந்தன. 13இன் இயல்பு என்று நியாயம் கூறி ஆறுதல் காண்பதா?

ஐக்கிய தேசிய முன்னணி தனக்குக் கிடைத்த தேசிய பட்டியல் உறுப்பினர்கள் 11 பேரில் 7 இடங்களை தமிழர்களும் முஸ்லிம்களுமான சிறுபான்மை இனத்தவருக்கு ஒதுக்கியது. ஆயினும் புறந்தள்ள முடியாதவர்கள் என்று கணிக்கப்பட்ட அக்கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான முன்னாள் அமைச்சர் டிரோன் பெர்னான்டோவும் அக்கட்சிக்கான பிரசார பீரங்கிகளுள் ஒருவரான முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வரும் தேசியப்பட்டியலிலிருந்து புறந்தள்ளப்பட்டமை உடன்பாடாக பலரால் அங்கீகரிக்க முடியாததாயிற்று.

நாடாளுமன்றத்துக்கென தெரியப்பட்டு சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு முன்பாகவே தமது பதவியை இராஜினாமாச் செய்த ஒரு நிகழ்வும் இந்தத் தேர்தலின் பின்பு நிறைவேறியது. இதுவும் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே நிகழ்ந்தது. இந்த மாவட்டத்தில் தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட கிங்ஸ்லி இராசநாயகம் பதவி ஏற்காமலே இராஜினாமாச் செய்தார்.

நாடாளுமன்றத்தின் முதல்அமர்வின் போதே சத்தியப்பிரமாணம் செய்து ஒரு நாள் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து இராஜினாமாச் செய்த நிகழ்வும் இந்தத் தேர்தலின் பின்பே நடந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேசியப்பட்டியல் மூலம் இடம்பெற்ற ஜனதாஸபீரிஸ்(ஜனாதிபதியின் ஊடகத்துறை பணிப்பாளர் நாயகம்) இந்த ஒரு நாள் அமர்வின் பின்பு தனது பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறார்.

## வாக்கெடுப்பில் மட்டும் சரிசமமானவர் எனக் காட்டப்பட்ட சபாநாயகர்(வேட்பாளர்)

2004 ஏப்ரல் 2இல் நடந்த பொதுத் தேர்தலுக்குப்பின்பு 2004 ஏப்ரல் 22இல் நாடாளுமன்றம் தனது முதல் அமர்வில் கூடியது. அரசமைப்பின்படி முதல் அமர்வின் முதல் நிகழ்வாக அமையவேண்டியது, நாடாளுமன்றத்துக்கான சபாநாயகரைத் தெரிவு செய்வதாகும்.

அறுதிப் பெரும்பான்மையை நிரூபணம் செய்ய முடியாத இரண்டு பிரதான கட்சிகளுமே சபாநாயகரைத் தெரிவு செய்யும் விடயத்தில் போட்டிக்கு முகம் கொடுக்க முனைந்தமை, தமது பலப்பரீட்சையில் வெற்றி காண முனைந்தமை நாடாளுமன்றத்தின் உள்ளார்ந்த யுத்தமாகியது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனக்குக் கிடைத்த 105 ஆசனங்களுடன் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவையும் இணைத்துக்கொண்டு , 106 ஆசனங்களுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற முனைப்புடன், முயற்சியை மேற்கொண்டது.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

# கென்யா ஆதிக் குடிகளின் வரலாற்றுத் தேடல்!



கென்யாவின் வனப்பகுதிகளில் ஆதிகுடிகள் இன்றும் பெருமளவில் வாழ்கின்றார்கள். மனிதநாகரீகம் பற்றி அறியாதவர்களும் அதிகம் அங்கு இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. நைரோபியில் வாழும் நாகரீகம் தெரிந்த ஆபிரிக்கர்கள் பல்வேறு ஆதிகுடிகளைக் சேர்ந்தவர்கள். அவர்களில் நான்கு பேர் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தமது ஆதிகுடி இனங்களின் வாழ்க்கை முறைகள் பற்றி இவர்கள் அமெரிக்க ஆய்வாளர்களுக்கு விளக்குவார்கள்.

# நகம் வளர்த்து விட்டால் நந்தவனம் ஆகிவிடும்!

சிலர் தமது நகங்களை நீளமாக வளர்த்து அதில் ஒரு திருப்தியைக் காண்பார்கள். அல்பெனியாவைச் சேர்ந்த மார்க்ரெட்டா என்னும் ஆசிரியை தனது நகங்களை வளர்த்தது மாத்திரம் அல்ல, தனது கைகளை நந்தவனங்களாகவும் மாற்றிவிட்டார். வளர்த்த நகங்களில் மலர்களைப் பதித்து தனது பாலர் வகுப்பு குழந்தைகளைக் கவர்ந்து விடுகிறார் இவர்.



மசாலா மிக்ஸ்

# உயர்ந்த இனத்தை உருவாக்க முயற்சி



உலக மாந்தரில் உயர்ந்த இனத்தவர்கள் ஜெர்மனியர் என்று வலியுறுத்தியவன் ஜெர்மன் சர்வதிகாரி ஹிட்லர். ஜெர்மனியர்கள் உயர்ந்த ஜாதியினர் என்று உறுதி படுத்துவதற்காக உலகையே அழிக்கப் புறப்பட்டவன் அவன். ஆனால், 1910 ஆம் ஆண்டே ஜெர்மனியில் டாக்டர் ருடொல்ப் மார்ட்டின் என்னும் மருத்துவ ஆய்வாளர். ஜெர்மனியர் மத்தியில் இன ஆய்வு நடத்தியிருக்கிறார். அவர் அன்று பிடித்து வைத்திருந்தபோட்டோக்களில் ஒரு பிரதி தற்போது வெளியில் வந்திருக்கிறது.

# கம்பளி ஆடுகளின் முக்கிய பங்களிப்பு




கம்பளி ஆடுகளின் மீது மலை ஜாதி மக்களுக்கு தனியான பிரியம் உண்டு. காரணம், அந்த மக்கள் குளிர் கொடுமைகளில் இருந்து விடுபடுவதற்கான கம்பளி ஆடைகளை அவை தருகின்றன. அத்துடன் வயிற்றுப்பசியையும் அவையே தீர்த்து வைக்கின்றன. பேரனஸ் அயர்ஸ் மலை வாழ் மக்களுக்கு அபயம் அளிப்பவை லாமா இன கம்பளி ஆடுகளே. அந்த மலை ஜாதி இனக் குழந்தை ஒன்று லாமா குட்டி ஒன்றுடன் கூடிக்களிப்பதைப் படத்தில் காணலாம்.

# கருவிழிகளைக் காட்டி அன்பைப் பெறும் வழி



இமைகளின் வெளியில் கருவிழி தெரியும் வண்ணம் உருவாக்கப்பட்ட முகமூடியை அணிந்தவாறே இருவர் டோக்கியோ வீதியில் நடந்து வந்தனர். எதிரில் வந்த சிறுமிக்கு அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறினர். ஜப்பானில் வசந்த காலம் வந்ததும் கலைநிகழ்ச்சிகள் பெருமளவில் நடைபெறும். கருவிழிகளால் வாழ்த்துக் கூறும் இந்த விளையாட்டு, குழந்தைகளைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஏப்ரல் 19 , சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் ரகுவரனுடையது. சரியான விடையைக்கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

*1. து.ரெணோஷ், கணக்கர் வளவு, கந்தரோட்டை றோட், வவுனியா. 2. எஸ்.பத்மசிவம், இல.11 போதிருக்காராம றோட், களுபோவில், வத்தளை. 3. இ.ஜெகதீபன், நட்டாங்கண்டல். 4. சு.திருக்குமார், லொயினோள் தோட்டம், பொகந்தலாவ. 5. கு.குமார், திருகோணமலை.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்குஎமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் ஒரு பாடகி மட்டுமல்லாது, தமிழ்திரையுலகின் நீல நிற கண்களையும் உடைய நடிகை.

இந்த முகத்திற்குரிய நடியைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# மாகாணசபைத் தேர்தலும் நம்பிக்கை இழக்கும் மக்களும்

முன்னதாக வரும் என எதிர் பார்க்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல், எதிர்பாராத நாடாளுமன்றக் கலைப்பால், பின்னராக வந்தது.

நாடாளுமன்றக் கலைப்பிற்கு முன்னால், தனது பதவிகாலத்தை நிறைவு செய்த வடமேல் மாகாண சபைக்கான தேர்தல், கடந்த 24 ஆம் திகதி நடைபெற்று முடிந்திருக்கிறது.

ஏனைய 6 மாகாணங்களிலும் தேர்தலை நடத்துவதற்குதற்போது தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வடக்கு – கிழக்கு தவிர்ந்த இந்த 6 மாகாணங்களுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்த திட்டமிட்டுள்ளது. அப்படி நடத்துவதானால் நாடாளுமன்றத்தில் இதற்கான புதிய சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த நிலையில் நடத்து முடிந்த வடமேல் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 31 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசிய முன்னணி 19 உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2 உறுப்பினர்களையும் பெற்றுள்ளன.

குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த மாகாணத்தில் வாக்குகள் தொகுதி வாரியாக எண்ணப்பட்டன. குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் தொகுதி தவிர்ந்த ஏனைய தொகுதிகள் அனைத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே வெற்றி பெற்றுள்ளது.

இந்த தேர்தல் முடிவுகள் மூலமாக, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு முன்வைத்துவரும் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொண்டதாகவே அது தற்போது பிரசாரங்களை அடிக்கிக் கொண்டு வருகின்றது.

அவர்களது இந்த கொள்கை திட்டங்களில் கடந்த அரசு முன்னெடுத்துச் சென்ற சமாதான வழி முறைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லைஎன்பதும்குறிப்பிடக்கூடிய ஒன்று.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான எதிர்காலம் எந்தக் கோணத்தில் நகரும் என்பது கேள்விக்குரியதே.

முதற் கோணல் முற்றிலும் கோணல் என்பதற்கு ஏற்றாப்போல் சபாநாயகர் தெரிவில் கோட்டை விட்ட ஐக்கிய சுதந்திர முன்னணியின் எதிர்காலம் குறித்து மக்கள் சலனமடைந்திருப்பார்கள் என பலராலும் நம்பப்பட்டது.

இருப்பினும் வடமேல் மாகாண சபைத் தேர்தல் வெற்றி தமக்கு சாதகமாக அமைந்திருப்பதையிட்டு வரிந்து கட்டிக் கொண்டு அரசு இப்போது பிரசாரங்களை தொடங்கியுள்ளது.

ஆனால், இந்த மாகாணத்தில் பொதுத் தேர்தலின் போது செலுத்தப்பட்ட வாக்குகளையும் மாகாண சபை தேர்தலில் செலுத்தப்பட்ட வாக்குகளையும் ஆராயும் போது மக்கள் இந்த தேர்தல்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழந்துள்ளார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இராமன் ஆட்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? நமக்கொரு கவலையும் இல்லை என்ற நினைப்பிலே மக்கள் இருக்கிறார்கள் என்பதே நிதர்சனம்

நாச்சியூரான்

# கவிதைப் புனல்

## நேருமா இது?

ஆத்மாக்கள்
அவதிப்படும் நேரம் இது.
மானுடம் மயங்கி
மறுஜென்மம் எடுக்க
ஆத்மாக்கள்
அவதிப்படும் நேரம் இது.
சமாதானம்...
சமாதானம்... சமாதானம்...
சமாதான தானம் செய்யுங்கள்.
துப்பாக்கி முனையில்
தானம் செய்யுங்கள்.
குருதியை அல்ல.
ஆத்மாவின் வலி
அதிகமாகிறது.
வீணே கருங்கற்கள்
தொறுக்கப்பட்டு
கல்லறைகள்
கட்டப்படவில்லை.
கண்ணீர் வடிக்கவுமில்லை
மனிதத்தின்
சிறகுகள் வெட்டப்பட்டு
உறவுகளின் உயிர்கள்
பறித்து எரித்தும்
பரிகாசம் செய்யப்பட்டதால்
காரை நகர் முதல்
காலி நகர் வரை -
கல்லறைகள்.
நாட்டிற்குள் மட்டுமல்ல
வீட்டுக்குள்ளும்
கல்லறைகள்.
அதிகாரத்தேர்தல் காய்ச்சலில்...
வரண்டு போய்
வாழ்விழந்து கிடக்கும்- நம்
தேசத்து வீ(வி)திகள்.
ஊசி முனையில்
தேசிய அரசுகள்.
எயிட்ஸ் நோயாளிக்கு
இன்று வயசு ஐம்பத்தைந்து
தாசியருக்கு நராசு தூக்கும்
அரசியல்
அம்பியூலன்ஸ்கள்.
பாலப்பட்டது
நாங்கள் மட்டுமா...?
பாலஸ்தீனமும்...
போஸ் கொடுக்கும்
புஷ் நிலமும் தான்.
தானம் செய்வோம்
ஆத்மாக்கள் அழுகிறது
அழிகின்றது.
மனிதத்துக்கு
மனதைக் கொடுத்து
மானுடத்துக்கு
உயிர் கொடுப்போம்.
சமாதானத்தை
சத்திரசிகிச்சை செய்யாதீர்
சமாதானத்துக்காய் - எம்
விழி நனைகிறது -நம்
தேசம் முழுக்க வலிக்கிறது.
தானம் செய்யுங்கள்.
துப்பாக்கி முனையில்
குருதியை அல்ல
உயிர் பிழைக்கும்...
உயிர் பிழைக்கும்
என்ற சோகம் உயரட்டும்.
.............
ஆ! என்ன...
அம்பியூலன்ஸ்கள் இன்னும்
அவசர சிகிச்சைப்பிரிவுக்கே
வரவில்லையாம்.
அதற்கிடையில்
இடுகாட்டுக் கூலிக்காய்
இப்போதே போட்டியாம்.
ஐயையோ டாக்டர்களே
ஒப்பரேஷன்
ஒப் கொழும்புக்கு
அனுப்பியது.
பேய் அரசா
பென்டங்கன் பிலைட்டா
ஆ... வலிக்கிறது.
உலகத்தவரே பாரீர்
உன்னில் ஓர் உறுப்பு
துடிக்கிறது...
வடிக்கிறது நெஞ்சம்
எரிகிறது தீ
என்ன செய்யப்போகிறீர்கள்?
ஆத்மாக்கள்
அவதிப்படும் நேரமிது
தானம் செய்வோம்
வாருங்கள்...
இது தான் நேரம்
நேருமா இது?

துவரிகா,
மஸ்கெலியா.

## எச்சரிக்கை

ஓ பேரினவாதமே
கடந்த காலமெல்லாம்
நீ
எரிந்து கொண்டிருந்த
இனவாதத் தீயில்
குளிர்காய்ந்து கொண்டு
இருந்தாய்.
பொங்கி எழுந்த
தமிழன் உணர்வுகளை
அடக்கி ஆண்டாய்.
நீ கண்ட யுத்தத்தின்
முடிவில் ஒரு
நீண்ட
புரிந்துணர்வுக்கு
எம் தலைவன்
கைச்சாத்திட்டான்.
இப்புரிந்துணர்வில்
உனக்கு வேண்டாத
வேலையால்
சிங்கத்தமிழனொடு
சீண்டிப்பார்க்காதே
சிதைந்து விடுவான்.
நீ கண்ட யுத்தத்தை
இன்றோடு குழி தோண்டி
புதைத்துவிட்டு
எம்மினத்தோடு
கைகோர்.
இன்றேல்
எம் வீர மறவர்களோடு
நீ செம்மணியில்
புதைத்த
சோதரர்கள் உன்னை
குற்றுயிராக்கி விடுவார்கள்.
இது எம்மினத்தின்
புலம்பலல்ல.
மானத்தமிழன்
மானத்தோடு
உனக்கு விடும்
எச்சரிக்கை.

எஸ்.பி.சக்தி
உடுவில்.

## நீ உணரவில்லையா?

சூரியனின் வதனத்தில்
உன் கண்கள்
இருப்பதனாலேயோ
அது என்னை
எரிக்கிறது.
வீசும் காற்றில்
உன் சுவாசம்
கலந்ததாலேயோ
அது என்னைச்சுடுகிறது.
என் உயிரில்
உன் உயிர்
கலந்திருப்பதாலேயோ
என் உயிர்
உருகுகிறது.
என் இதயத்தில்
உன் காதல்
பூத்திருப்பதாலேயோ
என் இதயம்
வாடிக்கிடக்கிறது- அன்பே
உன் ஒவ்வொரு
செய்கையும்
என்னைப்பாதிக்கும்போது
தினம் நான்
அர்த்த ராத்திரியில் விடும்
அர்த்தமுள்ள
இரத்தக் கண்ணீர்
உன்னை ஒன்றும்
செய்யவில்லையா?

ம. சங்கீதா,
யாழ்ப்பாணம்.

## நிழலல்ல நிஜம்

கண்களை மூடினேன்...
கனவினில் நீ வந்தாய்..
நிஜத்தினில் தேடினேன்...
நிழலாய் தோன்றினாய்...
நட்பெனும் பாலத்தில்
இணைந்த நாம்- இப்போது
பிரிவெனும் நிலையத்தில்
நின்று
துயர் எனும் பஸ்ஸில்
பயணிக்கின்றோம்...

நிம்மி,
நாரகேன்பிட்டி.

## வாழவிடு

கன்னியரைக் கரம்பிடித்து
கல்யாணச் சந்தையில்
கட்டாகப் பணம் கேட்கும்
கட்டிளம் காளையரே
மனதில்நினைத்தவளை
மனதார நேசித்து
மாங்கல்யம் கொடுக்காமல்
மன்னித்து விடு என்றாய்.
பணம் இருக்கும்
இடத்திலேயல் இளித்து நிற்கும்
பண்பு கெட்ட பாதகரே
பத்து மாதம் சுமந்து
பாரினில்உன்னை ஈன்ற
பத்தினியும் பெண் தானே
அன்பினை அடகு வைத்து
ஆயிரம் லட்சம் பெற்று
அரண்மனை வீட்டினிலே
அமைதியாய் வாழ்வாயா
அனாதரவாய் அழிவாயா?

அ. அமலிகா
ஆனந்த புரம்.



## மழை

பூமியில் நிகழும்
கொடுமையை
தாங்க முடியாமல்
வருண பகவான்
சிந்தும் கண்ணீர்.

## காற்று

சோகத்தில் வாழும்
மானிடனை
தூங்க வைக்க
வாயுபகவான்
பாடும் தாலாட்டு.

## தாய்

பிள்ளைக்காக உருகும்
மெழுகுவர்த்தி.

பா. றமேஸ்,
கல்மடு.

## சிந்திக்க வைப்பவை

இதயத்துள் ஆயிரம்
மின்னல்களாய்
ஜொலித்துக்கொண்டிருக்கும்
நினைவெனும் நட்சத்திரங்கள்...
கனவாகிப் போய்விடாமல்
என்றென்றும்
கண் முன் தோன்றி
நிழலாடும்
உறவெனும் தொடர்கதைகள்...
வாழ்வை அர்த்தப்படுத்தவென
இறைவன் எமக்குத் தந்த
பரிசுகளாய் நட்பெனும்
வண்ண மலர்கள்...
இவை யாவும்
எம்மைச்சிந்திக்க வைக்கும்
சிறுகதைகள்!

எஸ். பிரசன்னா,
சாவகச்சேரி.

## நில் நிதானி

களம்பல கண்டும்
கருத்தொருமிக்கார்
தமிழரிடை ஒற்றுமை
என்பது அத்திப்பூ- ஆடிப்பிறை.
தமிழினம் பிளவுபட்ட சேதி
போதும் போதும்
வரலாற்று புகழ் கூறி
பழம்பெருமை பேசி
வாய்ச்சொல் வீரம் பேசியதை
மறப்போம் மன்னிப்போம்,
களம் தனில் நிற்கும்
கர்ம வீரன்
வழிச்சென்று
உளம் தனை உறுதி செய்வோம்
ஒரு கொடியில்
வலம் வரும் இயற்கை
அன்னை வழி நிறைய
வஞ்சகர் போயினர்
வாய்மையர் கூடினர்
தமிழன் தலை குனிந்தும்
தன் மகளை முத்தமிட
தன்மான தமிழன்
தனை இழக்கமாட்டான்.
நிலைகுலையா
பெருஇனமே
நில் நிதானி
கடமை கண்ணியம்
கட்டுப்பாடு
உன் கையில் தான்.

கலைமாறன்,
திருமலை.

# பித்தன் பதில்கள்

*ஏ.வானதி— மருதனார்மடம்.*

**கேள்வி:—** பித்தன் அண்ணா! என்னை எனது கணவர் எப்போதும் கொடுமைப் படுத்திக்கொண்டே இருக்கிறார். அவர் திருந்தக்கூடியதாக ஒரு சூடான வார்த்தை சொல்லித்தாரும்?



**பதில்:—** இனிமேலும் என்னைக் கொடுமைப்படுத்தினால் நான் விதவையாகி விடுவேன் என்று சொல்லிப்பாரும்.

*செ. துவாகரன்— கற்குளி.*

**கேள்வி:—** பித்தன் மாமா... நீங்கள் சிறுவனாக இருந்தபோது கிடைக்க வேண்டும் என்று நினைத்த, ஏதாவது இப்போது நிறைவேறி உள்ளதா?

**பதில்:—** ஆம். நான் சிறுவனாக பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது சரியான குழப்படி. நான் குழப்படி செய்யும்போதெல்லாம் ஒரு ஆசிரியர் எனது தலைமுடியை பிடித்து இழுத்து எனக்கு அடிப்பார். அப்போது தலையில் முடி இல்லாமல் இருந்தால் எவ்வளவு நல்லது என்று அடிக்கடி நினைப்பேன். அது இப்போது நிறைவேறி உள்ளது.

*வை.தர்ஷினி—மணற்காடு.*

**கேள்வி:—** பித்தா! எனக்கு தூக்கத்திலே குறட்டை விடுபவர்களை துண்டாகப் பிடிக்காது. ஆனால், இப்போது என்னை திருமணம் செய்ய உள்ளவர் சரியாக குறட்டை விடுபவர். நான் அவரிடம் இருந்து எப்படித் தப்புவது?

**பதில்:—** இரண்டு காதுகளுக்கும் பஞ்சு வைத்துக்கொண்டு படுக்கலாம், ஹெல்மட் போட்டுக் கொண்டுபடுக்கலாம் அல்லது அவரது வாயை பிளாஸ்டரால் ஒட்டிவிடலாம். இவ்வாறு தப்புவதற்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. அது சரி இன்னும் திருமணம் முடிக்கவில்லை என்கிறீர் —



அப்படியென்றால் அவர் குறட்டை விடுபவர் என்று உமக்கு எப்படித் தெரியும்?

*இ. சுந்தரேசன்— கல்கிஸ்ஸ.*

**கேள்வி:—** பித்தா! உம்மை நினைத்து நான் வெட்கப்படுகிறேன். நீர் ஆண்குலத்துக்கே இழுக்கான ஆள். ஏனென்றால் உமது மனைவிதாக்கும்போது திருப்பி தாக்கத்தெரியாத உமக்கெல்லாம் எதற்கு மீசை... தூ...

**பதில்:—** ஐயா... நானும் முன்னர் இப்படியாக வீரம்பேசியவன்தான். பத்திரிகையொன்றில் வந்த நகைச்சுவைத் துணுக்கு ஒன்றை வாசித்துப் பார்த்த நாளில் இருந்து அடங்கி ஒடுங்கிவிட்டேன். இவ்வாறான ஒரு நிலை எனக்கும் ஏற்பட்டு விடுமோ என அச்சமடைந்துள்ளேன். அந்தத் துணுக்கை கீழே தருகிறேன். வாசித்துவிட்டு முடிவெடும்.பொலிஸ் நிலையம் ஒன்றுக்கு ஒருவன் பயப் பீதியுடன் ஓடிவந்தான். என்னைக் கைது செய்யுங்கள். என்னை உடனடியாக கைது செய்து கூண்டில் அடையுங்கள் என்று கூக்குரலிட்டு அழுதபடி ஓடிவந்தான். அவனைப் பரிதாபமாகப் பார்த்த பொலீஸ்காரர்கள் ஏன் என்ன நடந்தது என்று விசாரித்தனர். ஐயாமாரே எனது மனைவிக்கும் — எனக்கும் இன்றும் வழமை போல் சண்டை வந்தது. கோப மிகுதியால் அருகே இருந்த பூந்தொட்டியை எடுத்து அவள் மீது வீசிவிட்டேன் என்று சொல்லியபடி அழுதான் அவன் இடையே ; நீ எறிந்த பூந்தொட்டி உனது மனைவியின் மீது பட்டு அவள் இறந்து விட்டாளா என்று கேட்டனர் பொலிஸார். அதற்கு அவன் சொன்னான். ஐயா... இல்லை ஐயா... குறி தவறிவிட்டது என்று மேலும் அவன் அழத் தொடங்கினான்.

இது போன்ற நிலை எமக்கு வர வேண்டுமா... அதனை விட மீசை இருந்துவிட்டுப் போவது நல்லது அல்லவா ! ஆற அமர சிந்தித்துப்பாரும்.

*நீந்தமிழ்— புதுக்குடியிருப்பு.*

**கேள்வி:—** பித்தா! கருணாவின் பிரச்சினை பெரிசாக இருக்கும் என்று எதிர்பார்த்தோம். இப்படி சுமுகமாகத் தீர்ந்து விட்டதே?

**பதில்:—** நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேனே.. விடுதலைப்புலிகளுக்கு இதெல்லாம் சின்னப்பிரச்சினை என்று — எமக்குத் தான் இதெல்லாம் பிரச்சினை, அவர்கள் தினமும் பிரச்சினைகளை சாப்பிட்டு, பிரச்சினைகளில் குளித்து.... பிரச்சினைகளால் போர்த்துக்கொண்டு படுப்பவர்கள்.... எனவே இவையெல்லாம் அவர்களுக்கு பிரச்சினையே அல்ல. நீந்தமிழ காதைக்கொண்டுவாரும். ஒரு ரகசியம்.... இந்தப்பிரச்சினை.... பிரச்சினை எதுவும் இல்லாமல் தீர்க்கப்பட்டு விடும் என்று நான் நினைத்தது உண்மைதான். —ஆனால் இவ்வளவுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் தீர்க்கப்பட்டு விடும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. என்னத்தைச் செய்தாலும் அவர்கள் அவர்கள் தான்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேடகும் கேளவிகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து வரியிலான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை மே9ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



*முத்தமிழ் — ஊரெழு.*

**கேள்வி:—** பித்தா! பெண்கள் நவீன ஆடை அணிவதன் மூலம் எதைச் சொல்ல விரும்புகிறார்கள்?

**பதில்:—** தம்மிடமும் ஏதோ வித்தியாசமான ஒன்று உள்ளது என்பதைகாட்டுவதற்கு.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில்மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

*செ.பிரதீபன்— தெகிவளை.*

**கேள்வி:—** பித்தா! திருமண வாழ்க்கை பற்றி சுருங்க விளக்கும் பார்ப்போம்?

**பதில்:—** திருமணமான முதல் ஆண்டில் கணவன் பேசுவான்— மனைவி கேட்பாள்.

இரண்டாம் ஆண்டில் மனைவி பேசுவாள். கணவன் கேட்பான்.

மூன்றாம் ஆண்டில் கணவனும்— மனைவியும் பேசுவார்கள். பக்கத்து வீட்டுக்காரர் கேட்பார்கள்.

*பேபி- முழங்காவில்.*

**கேள்வி:—** பித்தா! உங்களை நாங்கள் சார் என்று அழைப்பதா? அங்கிள் என்று அழைப்பதா? தாத்தா என்று அழைப்பதா? எவ்வாறு அழைப்பது?

**பதில்:—** கண்ணுங்களா...! இந்த சேர், அங்கிள், தாத்தா, மாமா, பெரியப்பா, சித்தப்பா என்று அழைப்பதெல்லாம் நான் ஏதோ குடு குடு கிழவன் ஆகிவிட்டதைப் போல் எனக்கு உணர்த்துகிறது. நான் பழசு தான். அதனை ஒத்துக்கொள்கிறேன்.. ஆனால் நீங்கள் நினைக்குமாற்ப போல் நான் கிராதப் பழசு அல்ல. எனவே மச்சி, டியர், கண்ணு, டார்லிங் இவ்வாறு அழைப்பது என்னை ஒரு இளைஞனாக நினைத்துக்கொள்ளத் தோன்றும். அதற்காக பித்துக்குட்டி என்றெல்லாம் கூப்பிடாதீர்கள். எனது அலுவலகத்தில் என்னைப்பார்த்து உமக்கு ஒரு குட்டி என்ற நினைப்போ என்று படுகேவலமாக கேட்கிறார்கள். அவமானமாக இருக்கிறது.

*வை.குணாளினி— கிரான்பாஸ்*

**கேள்வி:—** ஜோக்... ஜோக்...



**பதில்:—** இரவு நேரம் தூக்கத்தை விட்டு திடீரென "ஆ" என்று அலறியவாறு எழுந்த மனைவியைப் பார்த்து கணவன் கேட்டான். " என்ன ... என்ன நடந்தது? மனைவி சொன்னாள். "நான் ஒரு கெட்ட கனவு கண்டேன் அது தான் திடுக்கிட்டு முழித்தேன்..."

கணவன் கேட்டான் " என்ன கனவு?"

மனைவி சொன்னாள். "அந்தக்கனவில் ஒரு சந்தை வந்தது. அந்த சந்தையில் ஆண்களை ஏலம் போட்டு விற்றுக் கொண்டிருந்தார்கள். ஏராளமான பெண்கள் — அடிபிடிப்பட்டு ஆண்களை ஏலத்தில் வாங்கி கொண்டிருந்தார்கள். உனது தோழி ஒருத்தியின் கணவன் ஐந்து லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனான். பக்கத்து வீட்டுக்காரர் மூன்று லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனார். உங்கள் நண்பர ஒரு லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டார்.

இதனைக்கேட்ட கணவன் "அட அவர்களெல்லாம் இவ்வளவு மலிவாகத்தான் விற்கப்பட்டார்களா? சரி சரி அவர்களெல்லாம் சோதா பயல்கள் — அவர்கள் அந்த விலைக்கு போனதே பெரிய காரியம் அதனைவிடு..... திடகாத்திரமான புத்தி சாலியான நானும் அங்கே ஏலத்தில் விடப்பட்டேனா? அப்படியென்றால் நான் என்ன விலைக்கு விற்கப்பட்டேன்? என்று கேட்டான் ஆவலாக..

மனைவி சொன்னாள் "உங்களுடன் சேர்த்து பத்து பதினைந்து பேரை ஒன்றாக இருத்தி வைத்து விட்டு எலவதயெடுத்தாலும் இருபது ரூபா என்று விற்றுக் கொண்டிருந்தார்கள். அதனை பார்த்துத் தான் நான்அலறினேன்" என்றாள்.

*பெ.சதீவுன் —பெரிய நிலாவனை.*

**கேள்வி:—** பித்தா! என்ன சபாநாயகர் தெரிவு குழம்பமாகிவிட்டதே! அடுத்த கட்டம் என்ன?

**பதில்:—** முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்கள். சபாநாயகர் தேர்வே உலகுக்கு பல உண்மைகளை தெரியப் படுத்திவிட்டது. தமிழ் கூட்டமைப்பின் பலம், ஹெல உறுமயவின் சந்தர்ப்பவாதம், ஆளும் கட்சியினரின் அடாவடித்தனம், எதிர்க்கட்சியினர் ஒருவர் மீது ஒருவர் கொண்ட சந்தேகம் சாதாரண சபாநாயகர் தெரிவிலேயே இவ்வளவு பிடுங்குபாடு என்றால்.... சமாதானப் பேச்சு வார்த்தை என்று வந்தால் வெட்டிக் குத்துத்தான் போவங்கள்.

*ப.மலர்விழி— ஆனைக்கோட்டை.*

**கேள்வி:—** எனது கணவர் குடிப்பதை நிறுத்திவிட்டதாக சத்தியம் செய்துள்ளார். அவரை நம்பலாமா?



**பதில்:—** குடிப்பதை நிறுத்திவிட்டதாக சத்தியம் செய்வதை ஏற்றுக்கொள்வதற்கு முன்— அவர் பொய்ச்சத்தியம் செய்வதை நிறுத்திவிட்டாரா என்று பாரும். ஏனென்றால்குடிகாரன்பேச்சுவிடிந்தால்போச்சு.

*..ராதி—சன்விலேஜ்*

**கேள்வி:—** பித்தா! உமது மனைவியை — நீர் சமையல் காரியை போல் நடத்துவதாக நான் அறிந்தேன் உண்மையா?

**பதில்:—** தப்பு... அவரவர்கள் அவர்களது வேலைதான் பார்ககவேண்டும். மாணவர்கள் படிக்கின்ற வேலை பார்க்க வேண்டும். அரசியல்வாதிகள் —அரசியல் வேலைகளை பார்க்க வேண்டும். மாணவர்கள் — அரசியல் வேலையில் ஈடுபட்டால் பின்னர் அரசியல் வாதிகள் தாங்கள் படிக்கும் வேலையை பார்க்க புறப்பட்டுவிடுவார்கள். நாடு தாங்காதுப்பா....

*சு.மைதிலி—வெள்ளவத்தை.*

**கேள்வி:—** எனது கணவர் தான் வேலை செய்யும் நிறுவனத்தில் பல பெண்கள் தன்னைச் சுற்றுவதாக தம்பட்டம் அடிக்கிறார். என்ன செய்யலாம்?

**பதில்:—** அது சும்மாவாக இருக்கும். நீர் பொறாமை கொள்ள வேண்டும் என்பதற்காக சுய தம்பட்டம் அடிக்கிறார் போலும். நம்பாதேயும்.

*அ.செந்தூரன் — ஆனைக்கோட்டை.*

**கேள்வி:—** கருணாவின் பிரச்சினை சுமுகமாக தீர்ந்தால் எங்கள் ஊர் கோவிலுக்கு ஏதாவது வாங்கி தருவதாக வேண்டுதல் வைத்திருந்தேன். என்ன வாங்கிக் கொடுக்கலாம் பித்தா?

**பதில்:—** ஒரு கோடரி வாங்கிக் கொடும். அது தான் ஏற்றது. ஏனென்றால் நீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கும் ஆயுதம் அதுதானே.

**பித்தனின் கேள்வி**

கேள்வி:— கண்களே பெண்களை நம்பாதே என்ற பாடல் எதனால் வந்தது பித்தா?

**வாசகர் பதில்கள்**

*க.கண்ணன் — திருகோணமலை.*

காதலில் தோல்வியுற்ற கவிஞர்கள் பலபேர் திரையுலகில் இருப்பதனால்.

*க. சுகந்தன் — கொழும்பு.*

பெண்ணானவள் கானல் நீருக்கு ஒத்தவளாக காணப்படுவதனால்.

*சுசிலா — கொச்சிக்கடை*

இறைவனால் படைக்கப்பட்ட எம கண்ணுக்கு நல்லது, தீயது தெரியா அதனால் தான்.

*தி.யோகராஜ் — கிளிநொ*

இவ்வுலகில் தெய்வத்திற்கு நிக பெண் போற்றப்படுவதனால் அத் வத்தை இரண்டு கண்களையும் கொ அறியமுடியாது என்பதனால்.

*கு.அருள் — வவுனி*

பெண்மனமானது வங்கக் கடலி ஆழம்கூடியதாககாணப்படுவதால்அதனை இருகண்களைக்கொண்டு அளக்கமுடியாது என்பதால்தான் என்னவோ.

*ரா.துஷாந்தன்—கோவளம்.*

**கேள்வி:—** பித்தா! வாழ்க்கையில் முன்னேற கொஞ்சம் அறிவுரை சொல்லுங்கள்.

**பதில்:—** + :— நல்லவற்றை கூட்டு.

— :— தீயனவற்றை கழி.

x :— அறிவைபெருக்கு.

÷ = நேரத்தை பிரித்து செயல்படு.

< = செலவைக்குறை.

> = அன்பை அதிகரி.

= = இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக கருது.

*பே.பகீரதன் — அலம்பில்*

**கேள்வி:—** பித்தா! என்னிடம்எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருக்கின்றன. ஆயினும் என்னை ஒரு பெண் விரும்புகிறாள். அவளுக்கு நான் ஏதாவது ஒரு நல்லது செய்யவிரும்புகிறேன். என்னசெய்யலாம்?

**பதில்:—** அவருக்கு நல்ல ஒரு மணமகனைப் பார்த்து திருமணம் செய்து வையும்.

*தை.வர்ணன் — திருகோணமலை.*

**கேள்வி:—** அண்மையில் வந்த படங்களை பற்றி?

**பதில்:—** குத்து—வழமையான சிம்புவின் மசாலா.

கில்லி — வழமையான விஜய் படம்.

அருள் — ஆஹான் எதிர்பார்க்கப்படுகிறது. Sorry எனக்கு இன்னும் அதனை பார்க்கக் கிடைக்கவில்லை.

*செ கோபாலகிருஷ்ணன் — கல்விளான்.*

**கேள்வி:—** "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு" என்பது முதுமொழி. ஆனால் ஆண்கள் மட்டும் எவ்வளவு சாப்பாட்டையும் வெளுத்து கட்டலாமா பித்தா...

**பதில்:—** உண்டு சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு— என்பது போல் தொப்பை வைத்தால் ஆண்கட்கழகு— ஆனால் இப்போ அப்படியெல்லாம் எங்கே நடக்கிறது !



ஆண்கள் உண்டி சுருங்கி அலைகிறார்கள்— பெண்கள் தொப்பையுடன் அலைகிறார்கள்... ஐயா....



'கில்லி'
- விஜய், த்ரிஷா-

# 'கில்லி' பட விமர்சனம்

பொலீஸ் உதவி கமிஷனர் சிவசுப்பிரமணியத்தின் மகன் வேலு. கபடி வீரன். தந்தைக்கு கபடி பிடிக்காததால் போட்டிகளில் ஜெயித்து வாங்கும் கோப்பைகளை வீட்டில் மரப்பெட்டிக்குள் ஒளித்து வைக்கிறான். அரை இறுதிப் போட்டி மதுரையில் நடக்கிறது. அதில் பங்கேற்க பெற்றோரிடம் பொய் சொல்லி செல்கிறான்.

ரயில் நிலையத்தில் இறங்கும் போது கண் எதிரே அந்தப் பயங்கரம்... மந்திரி மகனான தாதா முத்துப்பாண்டி, உறவுப் பெண் தனலட்சுமியை கட்டித்தர மறுத்த அவள் அண்ணனை ரயில் பயணிகள் முன்னிலையில் குத்திக் கொல்கிறான். இன்னொரு அண்ணனையும் சாகடிக்கிறான்.

முத்துப்பாண்டியிடம் சிக்காமல் தப்பி வீட்டை விட்டு ஓடுகிறாள் தனலட்சுமி. ஆனாலும் மாட்டிக் கொள்கிறாள். அவள் தலைமுடியை கொத்தாக இழுத்து காரில் ஏற்றும் போது.... எதிரில் ஆக்ரோஷமாய் வேலு.. முத்துப்பாண்டிக்கு ஒரே அடி. பொறி கலங்கி தொலைவில் போய் விழ... தனலட்சுமியை காப்பாற்றி இழுத்துக் கொண்டு ஓடுகிறான். வேலுவை முத்து பாண்டியின் அரிவாள் படை விரட்டுகிறது. அவர்களிடம் சிக்காமல் தனலட்சுமியை சென்னைக்கு அழைத்து வந்து வீட்டில் தன் அறையில் ரகசியமாய் மறைத்து வைக்கிறான்.

அவளை கண்டு பிடிக்கும் பொறுப்பு வேலுவின் தந்தை சிவசுப்பிரமணியனிடம் விடப்படுகிறது. ஒரு கட்டத்தில் தனலட்சுமியை தன் வீட்டிலே மகன் மறைத்து இருப்பது அவருக்கு தெரிய வர அதிர்ச்சி.... தனலட்சுமியை இன்னொரு மறைவிடத்தில் தங்கவைக்கிறான்.. முறைப்பெண்ணை கடத்தியது பொலீஸ் அதிகாரி மகன் என்பது முத்துப்பாண்டிக்கு தெரிய வர உச்சக்கட்ட வெறி.. இரு வரையும் துரத்த. ஓட .. கிளைமாக்ஸ். கபடி வீரன் வேலுவாக விஜய்.

வீட்டில் அடக்கமான பிள்ளை வெளியே விளையாட்டுப் பிள்ளை என வெளுத்துள்ளார். கிரிக்கெட்டை போல் கபடியை யும் விறுவிறுப்பான விளையாட்டாக்கி ஒளிர்கிறார்... ஊரே நடுங்கும் பிரகாஷ்ராஜை தொட்டு தனலட்சுமியை விடச் சொல்லும் போது படம் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் திக்.. திக்.. அடியாட்கள் துரத்த காரில் தனலட்சுமியுடன் தப்புவது பிரளவைக்கும் காட்சி...

வீட்டுக்குள் தனலட்சுமியை ஒளித்துவைத்து அப்பா, அம்மாவை சமாளிக்கும் போது சிரிப்பு.. கிளைமாக்சில் அவளை அமெரிக்காவுக்கு தப்பிக்கவைக்கும் தவிப்பு ஒரு புறம்... லட்சிய கனவான கபடி இறுதி போட்டியில் பங்கேற்பது இன்னொரு புறம் என.. நடிப்பில் அனுதாபத்தை வாரியுள்ளார்.

கபடி மைதானத்தில் நடக்கும் சண்டை வேகம். முத்துப்பாண்டியின் வர்ம அடியில் கைகால் பிசகி விழுந்து பிறகு ஆவேசமாய் கைகால்களை சுழற்றி சரி பண்ணித் தாக்குகிறாரே... தியேட்டரே கைதட்டுகிறது. தனலட்சுமியாக திரிஷா நடிப்பில் மெருகு... பஸ்சில் விஜய் தோள் மீது சாய்ந்து காதலை மென்மையாக வெளிப்படுத்தும் போது மனசுகளை பறிக் கிறார்....

வில்லனுக்குப் பயந்து முக்கால் பகுதி சோகமாக வரும் அவர் கடைசியில் ஊரில்தான் உன் ரவுடித்தனம் தில் இருந்தா வேலுவை ஜெயிச்சிட்டு என்னை கூட்டிப்போ என்று முத்துப்பாண்டியை சண்டைக்கு உசுப்பேற்றி ஒரு காபி போடு என்று டீ கடை காரரிடம் கேட்பது.. ஜீவனுள்ள நடிப்பு.

பிரகாஷ்ராஜுக்கு முதுகெலும்பு பாத்திரம் முத்துப்பாண்டியாக படம் முழுக்க கலக்குகிறார். இரட்டை ஜடையில் ஒட்டேரி நரியாக தாமு சிரிக்க வைக்கிறார். படத்துக்கு உயிர் கொடுக்கும் ஒளிப்பதிவும் இசையும் கைக்குலுக்கப்பட வேண்டியவை. விஜய், தரணி, ஏ.எம். ரத்தினம் ஆகிய மூவர் அணி சினிமா களத்தில் வென்றிருக்கிறது.

கில்லி... வேகம், விறுவிறுப்பு படம்.

# 'காதல் அரங்கம்'

கடவுள், புரட்சிக்காரன் போன்ற படங்களை இயக்கியவர் வேலு பிரபாகரன். இவர் இப்போது ''காதல் அரங்கம்'' என்ற படத்தை இயக்கி வருகிறார். படத்தில் ஒரு ஆணும், பெண்ணும் பழகினால் அதற்கு 'காதல் — காமர்' என்று முத்திரை குத்தி விடுகிறோம். வெளிநாடுகளில் ஆண்களும், பெண்களும் நெருங்கிப் பழகுகிறார்கள். கைகுலுக்கிக் கொள்கிறார்கள். முத்தம் கொடுக்கிறார்கள் அது 'காமம்' அல்ல. உண்மையான 'சிநேகம்' மட்டுமே! ஆனால், இங்கு அப்படியல்ல ஒரு பெண் நடந்து சென்றால் ஆண்கள் அவளை முறைத்துப் பார்க்கிறார்கள். அல்லது ஜொள்ளுப் பார்வை பார்க்கிறார்கள். அவர்களது பார்வையிலே 'காமம்' இருக்கிறது.

ஆண்களுக்குப் பொதுவாய் பெண்கள் மீது ஆபாசப் பார்வைதான் இருக்கிறது இதைப் போக்க வேண்டும். ஆண்களின் ஆபாசப் பார்வையிலிருந்து பெண்களை விடுவிக்க வேண்டும். இதனை மையகமாகக் கொண்டே இ ப் ப ட ம் உருவாக்கப்படுகிறது. என்று அவர் கூறுகிறார்.



'ஏய்'
-சரத்குமார், நமீதா-

# சினி டி



'போஸ்'
-சினேகா-

சிம்ரன் இடத்தை சீக்கிர
படும் சொக்கவைக்கும் அ
திருக்கும் நடிகை யார் 
ரைப் போல இந் தியா
அ
ராம
கிறா

கள்ளானில் தனுக
கிளப்பும் ஆட்டம் போட்டி
ரெடி. நீங்க ரெடியா பாட்
படம் பெயர் வாங்கித்தரும்
ருக்கிறார். இந்நலையில்
தீவிரமாக மாப்பிள்ளை பார்த்து
கன்னடத்து பைங்கிளியான அவருக்கு
பிள்ளை தேடுகிறார்கள்.


•••

நடிகர் விக்ரம் தான் அழகு, கம்பீரம் என்று
அவரை விட அழகாகவும், கம்பீரமாகவும்
தொடர்ந்து அப்பாவுக்கும் சினிமா ஆசைவந்து
வேடத்தில் நடித்துள்ளார். தொடர்ந்து அவரைத் தங்கள்
இயக்குனர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.

பேரழகனில் சூர்யா கூனனாக நடித்து கலக்குவது ஒ
புரோக்கராக வந்து கலக்குகிறாராம் வி படத்தில்
சூர்யாவுக்குகாக அவர் பெண் தேடி அலையும் காட்சிக
மாம். ''குழந்தை வேண்டும் என்றால் திருமணம் செய்
குழந்தையிடம் வாரீர்'' இது படத்தில் விவேக் பயன்படு
வாசகம்.

•••

ரசிகர்கள் எப்படி அழைத்தாலும் கோடம்பாக்கத்
வேண்டியவர்கள் அவர்களை ஒரு பெயர் சூட்டி அ
அஜீத்துக்கு நெருக்கமானவர்கள் தற்போது சிங்கம் என



# அல்டிமேட் ஸ்ரார் பிறந்ததினம் -

தமிழ்த் திரையுலகில் அடுத்த சூப்பர் ஸ்ரார் என்று
அஜித்குமாரின் பிறந்த தினம் மே 01 ஆம் திகதி ஆகும்.

இவர் 1993 ஆம் ஆண்டு அமராவதி படத்தின்மூலம்
நடித்து வந்தாலும் இவருக்கு ஆரம்பகாலப் படங்கள் பெ

பின்னர் கே.ஜே.சூர்யாவின் வாலி படத்தில் இரட்
தமிழ்த் திரையுலகை இவர்பால் திரும்பவைத்தார். இ
வாய்ப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கின. அதன்பின்ன
போன்ற பல மாறுபட்ட வேடங்களில் நடித்து அடுத்த சூப்
அளவுக்கு முன்னேறியுள்ளார். இவருக்கு சுடர்ஒளியின்

| | |
|---|---|
| பெயர் | - அஜித்குமார் |
| பிறந்த திகதி | - 01 மே ..... |
| நடித்த முதல் படம் | - அமராவதி (19 |
| மனைவி | - நடிகை சாலினி |
| திருமணம் | - 28 ஏப்ரல் 2000 |
| தற்போது நடித்து வரும் படங்கள் | — ஜனா, |
| பொழுதுபோக்கு | - கார் ரேஸ் |



ந சீக்கிரம் பிடித்துவிடுவார் என்று பேசப்
க்கும் அகர்வால் தன்முன் மாதிரியாக எடுத்
யார் தெரியுமா?. மாதுரி தீட்ஷித். அவ
தியாவெங்கும் புகழ்பெறும் நிலையை
அடைய தன் இஷ்ட தெய்வமான ஸ்ரீ
ராமனை அனுதினமும் வேண்டி வரு
கிறார்.

* * *

தயாவுக்குப்பிறகு தமிழில்
அவ்வளவு பரபரப்பு இல்
லாமல் பிரகாஸ்ராஜ் அந்நி
யன் எப்போது ரிலீசாகும்
என்று ஆர்வமுடன்
எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறா
ராம். காரணம்
அந்தப்படத்தில்
விக்ரமைப்
போன்று
பிரகாஷ்
ராஜுக்கும்
பவர்புல் கேரக்டராம்.


* * *

டன் இணைந்து சூட்டைக்
ருக்கிறாராம் சங்கவி. நான்
டைப்போல தனக்கு, இந்தப்
என்று நம்பிக்கை கொண்டி
சங்கவிக்கு அவர் தாய்க்குலம்
வருகின்றாராம்.
தெலுங்கு தேசத்தில் மாப்

பார்த்தால் அவர் அப்பா
காட்சி அளிக்கிறார். மகனைத்
சவந்துவிட கில்லி படத்தில் ஒரு முக்கிய
த் தங்கள் படங்களில் நடிக்க வைப்பதற்கு

நவது ஒருபுறம் இருக்க மறுபுறம் கல்யாண
படத்தில் அவரது பெயர் குழந்தை. கூனன்
காட்சிகள் வயிறு வலிக்க சிரிக்க வைக்கு
ம் செய்வீர். திருமணம் வேண்டுமென்றால்
யன்படுத்தும் காரில் எழுதப்பட்டிருக்கும்

பாக்கத்தில் ஒவ்வொரு நடிகர்களுக்கும்
சூட்டி அழைப்பார்கள். அந்த வகையில்
ங்கம் என்று அழைக்கின்றனராம்.



-அஜித்-

ார் அஜித்தின்
- மே 01

என்று அழைக்கப்படும் அல்டிமேட் ஸ்டார்
பூகும்.
மூலம் அறிமுகமாகி பல்வேறு படங்களில்
ள் பெரிதாகக் கைகொடுக்கவில்லை.
இரட்டை வேடம் ஏற்று நடித்ததன் மூலம்
ார். இதனைத் தொடர்ந்து இவருக்கு 'பட
பின்னர் அமர்க்களம், வில்லன், சிட்டிசன்
த்த சூப்பர் ஸ்டார் என்று வர்ணிக்கப்படும்
ரியின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

ார்

(1993)
லினி
2000
னா, அட்டகாசம், மகா, ஜி.



'எதிரி'
- மாதவன், சதா, விவேக் -

# ரஜனியைத் தொடர்ந்து விஜயகாந்த்

ஏனோ.. சமீப காலங்களாக 6 கோடி தமிழக ஜனங்களும் விஜயகாந்த் மீது ஒரு கண் வைத்தபடியே இருக்கிறார்கள்.

காரணம், கடந்த சில ஆண்டுகளாக ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவார் என்று எதிர்பார்த்தது ஒரு வேளை விஜயகாந்த் வருவாரோ? என்கிற ஆருட கணக்காக இருக்கலாம்.

இன்றைய தேதியில் பேசினாலே பெரிய செய்தி என்கிற ரேஞ்சில் ரஜினிக்காந்துக்கு அடுத்த இடம் விஜயகாந்துக்கு.

சினிமா, பொதுவாழ்க்கை இரண்டிலுமே பரபரப்பாகப் பேசப்படுகின்ற இதே விஜயகாந்த் தனது வாழ்க்கையில் நூற்றுக்கணக்கான தோல்விகளைக் கண்டவர்.

ஒரு படம் கூட கையில் இல்லாத நிலையில் சுமார் 2 ஆண்டுகளாக தனது அறையில் சுருண்டு கிடந்தவர் என்றால் உங்களால் நம்ப முடியுமா?

அரசியலில் வைகோ ஒரு பீனிக்ஸ் பறவை என்றால் சினிமாவில் விஜயகாந் ஒரு பினிக்ஸ் பறவை.

மதுரையில் விஜயகாந்தின் தந்தைக்கு சொந்தமாக ஒரு ரைம்மில் இருந்தது. அதை விஜயகாந்த்தும், விஜயகாந்தின் அண்ணனும் நிர்வகித்து கொண்டிருந்தார்கள்.

சிறு வயது முதலே சினிமா ஆசை தொற்றிக் கொண்ட விஜயகாந்துக்கு மதுரையைச் சேர்ந்த ஒரு பட விநியோகஸ்தர் நண்பர். அவரிடம் தனது விருப்பத்தைச் சொல்ல அவர் டைரக்டர் எம்.ஏ. காஜாவிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

1979 ஆம் ஆண்டில் இந்தச் சம்பவம் நடந்தது.

எம்.ஏ.காஜா இயக்கிய 'இனிக்கும் இளமை' படம் தான் விஜயகாந்தின் முதல் படம். இதில் வில்லனாகத்தான் நடித்தார்.

இந்தப் படம் திரைக்கு வந்த சில மாதங்களில் 'தூரத்து இடி முழக்கம்' படத்தில் கதாநாயகனாக ஒப்பந்தம் ஆனார். கே.விஜயன் தானே சொந்தமாக தயாரித்து இயக்கிய படம்.

'வல்லரசு', 'ரமணா', 'எங்கள் அண்ணா' என்று வரிசையாக வெற்றிப் படங்களை சமீபகாலமாகத் தந்துகொண்டிருக்கும் இதே விஜயகாந்தின் அந்த முதல் படம் படு தோல்வியடைந்தது.

சோதனை விடவில்லை. தொடர்ந்தது. ''நூலறுந்த பட்டம்'' என்ற அடுத்த படத்தில் கதாநாயகன் ஆனார். முற்றிலும் முடிவடைந்த நிலையில் அந்தப் படம் இன்று வரை ரிலீஸ் ஆகவில்லை.

அந்தப் படத்தை தயாரித்த சம்பத் என்பவர் இப்போது கம்பத்தில் விவசாயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இருந்தாலும் விஜயகாந்துக்கு சினிமா அதிர்ஷ்டம் தொடர்ந்தது.

எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கத்தில் வடலூரான் கம்பைன்ஸ் தயாரித்த 'சட்டம் ஒரு இருட்டறை' படத்தில் மீண்டும் கதாநாயகன் வேடம் கிடைத்தது.

ஏராளமான விநியோகஸ்தர்கள் விஜயகாந்தை வைத்து படம் எடுத்தால் ஓடாது என்ற முன் உதாரணங்கள் சொன்ன போதிலும் வடலூரான் கம்பைன்ஸ் பட அதிபர் சிதம்பரம் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

'சட்டம் ஒரு இருட்டறை' படம் 100 நாட்களையும் தாண்டி சக்கை போடு போட்டது. விஜயகாந்த் வெற்றிப்பட கதாநாயகன் ஆனார்.

சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளைப் பயன் படுத்தி ஒரு கதாநாயகன் எப்படி தப்பிக்கிறான் என்கிற கதைக் கருவை இயக்கிய எஸ்.ஏ. சந்திரசேகரனும் பரபரப்பாக பேசப்பட்டார்.

இப்போதுள்ள தனுஷ் ரேஞ்சில், அப்போது விஜயகாந்துக்கு மளமளவென்று படங்கள் புக் ஆகின.

'சாதிக் கொரு நீதி', நெஞ்சிலே துணிவிருந்தால்', நீதி பிழைத்தது', பட்டணத்துராஜாக்கள்', சட்டம் சிரிக்கிறது', 'ஆட்டோ ராஜா' என வரிசையாக விஜயகாந்த் நடித்த படங்கள் வெளி வந்தன.

இதில் விசேஷம் என்ன தெரியுமா? எந்தப் படமுமே வெற்றி படங்கள் இல்லை. லாபமும் சம்பாதிக்கவில்லை. இது போதாதா? மூட்டையாகக் கட்டப்பட்டார் விஜயகாந்.

பாண்டிபஜாரில் உள்ள ரோகிணி ஹோட்டலில் ஒரு அறையில் தங்கியிருந்த விஜயகாந்த் வேதனைக்குள்ளானார். அவரது வாழ்க்கையின் மிகப் பெரிய இருண்ட காலம் அது.



'குளு குளு'
- நவ்யா நாயர் -

## 'காத்திருப்பேன்' படத்திற்கு பவதாரணி இசையமைக்கிறார்

இசையமைப்பாளர் இளைய ராஜாவின் வாரிசுகளான அவருடைய மகன்கள் கார்த்திக் ராஜா, யுவன்சங்கர்ராஜா ஆகிய இருவரும் பலபடங்களுக்கு இசையமைத்து வருகிறார்கள்.

இவர்களைத் தொடர்ந்து, இளையராஜாவின் ஒரே மகள் பவதாரணியும் இசையமைப்பாளர் ஆகிறார். இவர் ஏற்கெனவே பல படங்களில் பின்னணி பாடியிருக்கிறார். முதன் முதலாக அவர் ஒரு படத்துக்கு இசையமைக்கிறார்.'' காத்திருப்பேன், ஐ.ஜே.கிரியேசன்ஸ், இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. சுஜிதா இதில், ரிஷி குமார் கதாநாயகனாக அறிமுகம் ஆகிறார். மற்றும் நாசர் டெல்லி கணேஸ், எம்.எஸ். பாஸ்கர், கிரேன்மனோகர், சந்தானம், அல்வா வாசு, செம்புலி ஜெகன், மீரா கிருஷ்ணான், அருள்நளினி ஆகியோரும் நடிக்கிறார்கள். டைரக்ஷன் கதை. திரைக்கதை– வசனம் எழுதி டைரக்டராக அறிமுகம் ஆகிறார், எல்.டி.கார்த்திக். பாடல்களை பா.விஜய், சினேகன், நா.முத்துக்குமார், அழகிரி ஆகியோர் எழுதி உள்ளனர்.

# மண்ணில் வந்த சொர்க்கம்

''என்னது, எயிட்ஸ் நோயின் கோரப் பிடிக்குள் நீயுமா...?'' சபாநாதன் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியில் உறைந்து போனார், ஆயர் தேவசகாயம். சீராகப் பறந்து கொண்டிருக்கும் விமானம் நிலை குலைந்து அப்படியே தரையை நோக்கி விழுந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு!

''என்னோட உருக்குலைஞ்சு போயிட்ட தேகத்தைப் பார்த்ததுக்கப்புறமும் உங்களால நம்பமுடியலையா....! என் ஆயுளின் இறுதியாண்டுகள் ஒவ்வொரு நாளாக எண்ணப்பட்டுக்கொணடிருக்கு பாதர். வாழ்க்கையின் முடிவு நெருங்கி வருகிறதைப் பற்றி நான் எள்ளளவும் கவலைப்படேலை. ஆனால், அருகிலிருந்து ஆறுதல் தரவோ கண்ணீர் உகுக்கவோகூட எவருமில்லாமல் – அநாதையாகப் போவதுதான் நெருடலாயிருக்கிறது.'' சபாநாதன் தனக்காகக் கழிவிரக்கப்பட்டான்.

'ஓ, ஆண்டவரே..... எங்கே தவறு நடந்தது? மானிட உயிர்ப்பை மகிழ்வுக்கும் சிறப்புக்கும் உரியதாகப் படைத்த நீர் மறைவின் பின் தீராத சோகங்களை சுமக்க வைப்பதேன்...?' போப்பாண்டவரினால் ஆசீர்வதிக்கப்பட்ட சிலுவையை நெஞ்சிலிருந்து வெளியே எடுத்து கண்களை இறுக மூடினார். உலகில் வாழ்வின் சுக துக்கங்களிலிருந்து எப்போதோ விடுபட்டிருந்த அவர்கூட புலன்வழிச் செல்லாது பிரார்த்தனையில் ஒன்றிப்போக இயலாது சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

இரு தசாப்தங்களின் முன் யூட்சபாநாதன் மிசனரியின் வழிகாட்டலின் கீழ் யாழ்நகரில் இயங்கிய கல்லூரியில் அவரது கண்டிப்பு மிகுந்த கற்பித்தலில் புடம் போடப்பட்டவன். காலச் சுழற்சியில் இவ்வாறானதோர் அவலத்தினுள் – சகதிக்குள் அமிழ்ந்து போவானென எவர் நினைத்தார்....?

கல்வியில் ஒரு விண்ணனாக... விளையாட்டில் ஒரு புலியாக.... எவ்வளவு அபரிமிதமான ஆற்றல்கள் அவனுள் முகிழ்த்திருந்தன! உதைபந்தாட்டக் குழுவின் தலைவனாகவிருந்து மாவட்ட ரீதியிலும் தேசிய மட்டத்திலும் அவன் வென்றுவந்த வெற்றிக்கிண்ணங்களை கையேற்றபோது அதிபராயிருந்த அவர் உள்ளம் களிகூர்ந்ததே!

''எதிர்காலத்தில் என்னவாக வர ஆசைப்படுகிறாய் – வைத்தியராகவா, ஆசிரியராகவா....?'' என்று ஒரு சமயம் அவனிடம் பேச்சுவாக்கில் வினவியபோது என்ன சொன்னான்....?

''உங்களைப் போல ஓர் அருட்குருவாக....'' என அழுத்தந்திருத்தமாக உச்சரித்தவன் இன்று எதிர்காலமே சூனியமாகி நிற்கும் கோலம்! உலகை இரட்சிக்கக் கனவுகண்டவன் அவர்முன் பாவமன்னிப்புக் கோரும் பாவியாக....

ஏறக்குறைய இப்படியான ஒரு நிலையில் முன்பும் ஒரு தடவை அவர் முன்னால் குறுகிப்போய் நின்றிருக்கிறான். அவனின் கல்லூரி வாழ்க்கை முற்றுப்பெற்ற பின் நாளில் அது நடந்தது.

''பாதர்... நான் 'கொன்வென்ட் ஸ்கூலில்' படிச்ச மாணவி தமயாவை உளப்பூர்வமாக விரும்புறேன். இதை உங்களுக்குத் தெரியாமல் மறைச்சதுக்கு வருத்தப்படறேன்.....'' என்று வாக்குமூலமளித்தவனை தடித்த மூக்குக் கண்ணாடியினூடாக ஊடுருவிப் பார்த்தார்.

'இவனின் எதிர்கால இலட்சியம் என்னவாயிற்று....?' அவர் உதட்டோரம் ஏளனப் புன்னகை நெளிந்தது. அவன் மாணவனாக கற்றுக்கொண்டிருந்தசமயம் இப்படி நடந்திருந்தால் அவனைக் கல்லூரியிலிருந்தே விரட்டியிருப்பார். சகோதரப் பாடசாலையின் அந்த மாணவிக்கும் அதேகதிதான் நடந்திருக்கும்! அலைபாயும் எண்ணங்களுக்கு அணைபோட்டு பெருமூச்செறிந்தார்.

''சபா, நீ விரும்பின காதல் வாழ்க்கை உன் கைக்கெட்டின பிற்பாடு இன்னும் அதிக பொறுப்புணர்வோடு நடந்திருக்கணும்; ஒருவருக்கொருவர் விட்டுக் கொடாமல் சிறு சச்சரவுகள் பெரிதாகி கணவன் – மனைவி இடையே இந்தளவு தூரம் விரிசல் விழ அனுமதிச்சிருக்கக் கூடாது.''

அவனிடம் நீண்ட மௌனம்.

''தமயா உன் அன்பு என்ற ஒன்றுக்காக தன்சுகபோகங்களை, உறவுகளை உதறிட்டு வந்தவ. அவள் அப்பா புரொக்ரர் பஞ்சலிங்கத்தின் பெயரைக் கேட்டாலே அவரை எதிர்த்து வாதிட எவனும் துணியமாட்டான் தில்லை!''

''என்னைக் கட்டுப்படுத்தி திருந்த ஆரம்பத்திலேயே முயற்சித்தேன் பாதர், தமயாவிற்கு உண்மையானவனாக நடந்தேன். அவளுடைய வற்புறுத்தலுக்காக குடிப்பழக்கத்தைக்கூட படிப்படியாகக் குறைக்க ஆரம்பிச்சேன்.

தொழில்தேடி ஐரோப்பாவில காலடி வைத்த பிறகு ஏற்பட்ட தனிமை, இயந்திரங்களோடு இயந்திரமாக ஒன்றிப் போய்விட்ட அன்றாட பொழுதுகள், தட்டிக் கேட்க யாருமற்ற துணிவு.... இவற்றின் விளைவாக கணக்கில்லாமல் குடிக்கவும் போதை மருந்து பாவிக்கவும் ஆரம்பிச்சேன்.''

''ஆனாலும் உன்னை நம்பி மனைவி, பிள்ளை மற்ற உறவுகள் இங்கு ஏங்கித் தவிப்பதை மறந்து எப்படி இன்னொருத்திக்கு உன்வாழ்வில் இடமளித்தாய்....? நம் பண்பாட்டில் மனைவிக்கு மட்டுமில்லை



கணவனுக்கும் கூட அதே பொறுப்புக்களும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருக்கிறதை எப்படி உன்னால் புறக்கணிக்க முடிஞ்சுது.....?''

''மார்க்கிரெட்..... அவகூட ஏறக்குறைய என்போன்ற நிலையில் – கணவன் மற்றும் இரு குழந்தைகளையும் விட்டுப்பிரிந்திருந்ததனால் நாமிருவரும் சேர்ந்து வாழ ஆரம்பிச்சோம். எம்மிருவரின் தனிமைக்கு அது நல்ல வடிகாலாக அமைஞ்சுது''

''பிதாவே..... அவள்கூட பெத்த பிள்ளைகளை உதறிவிட்டா உன்னுடன் வந்து ஒட்டிக்கொண்டாள்! எப்படியான கல்நெஞ்சக்காரி அவள்!''

சபாநாதன் உணர்ச்சியில்லாமல் சிரித்தான். ''அவர்கள் கலாசாரத்தில் தேவைப்படின் ஏற்றுக்கொள்ளவும் பிடிக்காது போனால் உதறிவிட்டுப்போகவும் இயலும் – சட்டம் கூட அதை அனுமதிக்கிறது.''

''பிறகெதற்கு உன்னுடைய உறவையும் இடையில் கத்தரித்துக்கொண்டாள். ஒருவேளை உனக்கேற்பட்டுள்ள கொடிய நோய்தான் அதற்குக் காரணமா....?''

அவசரமாகத் தலையாட்டி மறுத்தான். ''அவளுக்கு தன்னுடைய பிள்ளைகளின் நினைப்பு வாட்டத்தொடங்கிவிட்டது. முதுமையில் தனிச்சுப் போயிடுவோ மென்று பயந்துட்டா! அவள் விட்டுவந்த உறவை தொடரப்போறதாகச் சொன்னபோது என்னால மறுப்புச்சொல்ல முடியேலை.....''

''ம்....ஏதோ இந்தளவிலாவது உனக்கு குடும்பத்தைப் பற்றி அருமை புரிந்ததே! காதலித்து மணமுடித்த பின்பும் காத்திருக்கும் மனைவியின் ஏக்கம் விளங்கியிருக்குமே....! நடந்தவைகளை மறந்து அவர்களுடன் சென்று புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்க முயற்சிசெய்.''

''அது சாத்தியப்படுமென்று தோணலை பாதர். இடைப்பட்ட இவ்வளவு ஆண்டுகளில் தொடர்பைத் துண்டிச்சிட்டு பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் மனம்போன போக்கில் வாழ்ந்திட்டிருந்த எனக்காக தமயா காத்துக் கொண்டிருப்பாளா...? தோளுக்குமேல வளர்ந்த விபரமறிய ஆரம்பிச்சிட்ட என்பிள்ளை மனதால என்னை ஏத்துக்குவானா....? என் சுயரூபம் மெல்ல வெளித்தெரிய வருகிறபோது சுற்றம் என்னைத் தூற்றாதா....?''

''சபா, உனக்குத் தேவையான மகிழ்ச்சியும் அமைதியும் கிடைக்கக்கூடிய இடம் உன் குடும்ப நிழல் ஒன்றுதான்! நீ உரிமை கொண்டாடக்கூடிய உறவுகளும் அவர்கள் மட்டுமே! அதனால் மீள அவங்களோட இணைந்து கொள்வதுதான் அனைத்துக்கும் நல்லது.''

விமானநிலையச் சோதனைகளை முடித்துக் கொண்டு இருவரும் உடமைகளைக் கையிலெடுத்துக் கொண்டனர்.

''சபா, உன்மனதுக்கு உடனடியாக ஒரு மாற்றம் தேவைப்படுகுது. புதுச் சூழலை எதிர்கொள்ள தென்பு தேவை. விரும்பினால் என்னுடன் காலிக்குவந்து இரண்டொரு தினங்கள் தங்கியிருந்து பார்... அங்க என் பராமரிப்பிலுள்ள ஆதரவற்றவர்களையும் நோயாளர்களையும் சந்தித்து அவர்களுடன் அளவளாவினால் வாழ்க்கையின் மீது ஒரு பிடிப்பு வரும்; உன் வாழ்க்கைக்கான செல்நெறியை வகுத்துக்கொள்ள உனக்கு உதவியாகவிருக்கும்.''

சபாநாதனும் சரியென்று ஆயருடன் வாடகைக் காரில் தொற்றிக்கொண்டான். ஆயர் இல்லத்திற்கு சென்று பார்த்தபோது உண்மையில் அவனுள் புது உற்சாகம் ஊற்றெடுத்தது. தேவாலயத்தில் ஆராதனைதவிர்ந்த நேரங்களில் தேவாலய வளாகத்தினுள் இயங்கிய ஆதரவற்றோர் இல்லத்திலேயே ஆயரின் பெரும் பொழுது கழிந்தது. அங்கக்குறைபாடுகளால் குடும்பங்களிலிருந்து ஒதுக்கப்பட்டோர், மூப்புப் பிணி ஆட்கொண்டு மரணத்தின் வாயிலில் நிற்போர் என அத்தனை பேரையும் அரவணைத்து பராமரிக்கும் ஆயரை நினைந்து மனம் கசிந்தான். பற்றறுத்துப் பொதுப்பணியாற்றும் இவ்வாறான சில ஆத்மாக்களால் தான் மனிதநேயம் இன்னும் உயிர் வாழ்வதாக நினைத்துக்கொண்டான்.

சபாநாதனுக்கு தான் இழைத்த தவறுக்கு பிராயச்சித்தமாக இறுதிக்கணம்வரை மனைவி பிள்ளையுடனே இருக்க வேண்டும்போல் தோன்றியது. அவன் தொலைத்துவிட்ட குடும்பம் என்ற சிறு உலகத்தின் அருமை புரிந்தது.

மெருகிடப்பட்டிருந்த கண்டிவீதியில் அலுப்புத் தெரியாதவகையில் 'டொல்பின்' வாகனத்தில் பயணித்தாலும் மனதில் தமயாவையும் குழந்தையையும் எதிர் கொள்ளப்போகும் பரபரப்பு.....

குழந்தையும் இவனைப் போலவே நெடுநெடுவென்று வளர்ந்திருப்பானா.....? அப்பாவின் குரக்கன்மா நிறத்தை ஒத்த தேகக்கட்டும், தடித்தமூக்கும், அகன்ற கண்களுமாக இருப்பானோ.....! இல்லாவிட்டால் அவன் அம்மாவைப் போல மாம்பழ நிறத்திலும் அடர்த்தியான கருமையான கேசத்துடன் துருதுருவென்றிருப்பானா.....?

கற்பனைச்சுழலுள் சூழ்ந்திருந்தவனுக்கு குழந்தைக்கு என்ன பெயர் வைத்திருப்பார்களென்பதே தெரியவரவில்லையென்றதை நினைக்க வெட்கமாகவிருந்தது.

பல்கலைக்கழக முன் ஒழுங்கையால் வந்து பலாலிவீதியில் மிதந்தபோது வாகனத்தை நிறுத்தச் சொன்னான். பரமேசுவராச் சந்தியில் முன்னர் அவனுக்குத் தெரிந்த மார்க்கண்டுவின் சாப்பாட்டுக்கடை இருந்த இடத்தில் பெரியதொரு அடுக்குமாடி எழுந்து நின்றது. அதன் முகப்பில் கணினி வகுப்புக்களுக்கான விளம்பரப்பலகை பளிச்சிட்டது. முற்றம் கூட்டிக்கொண்டிருந்த கிழவரை அணுகி விசாரித்தான் சபாநாதன்.

''தம்பி, நீங்கள் தேடிவந்த வீட்டில இப்போ பஞ்சலிங்கம் ஐயா இல்லையே! சாகும் தறுவாயில அவர் ஒதுக்கிவைச்சிருந்த வீட்டை மகள்பேரில எழுதிக்கொடுத்திட்டார்... அங்கே இப்போ அவங்தான் குடும்பமாக வாழுறாங்க....''

''என்ன, குடும்பமாகவா....?'' என்றான் திகைப்போடு. அந்த மார்கழித் திங்களின் குளிரிலும் அவனுக்கு வியர்த்தது.

''பின்னே என்ன தம்பி, ஆயுள் காலம் வரை அருகிலிருந்து கண்கலங்காமல் காப்பாற்றுவான் என்று நம்பியிருந்தவனோ பிழைக்கப்போன இடத்தில் என்ன ஆனான் என்பதே தெரியவில்லை!''

''அதனால....'' நா வரண்டுபோய் வார்த்தைகளை உதிர்க்க சிரமப்பட்டான்.

''பஞ்சலிங்கம் ஐயாவோட அக்காவின் மகன் சுதாகரை கணவனாக ஏத்துக்கிட்டா. அவன் தங்கமான பிள்ளை. இல்லேன்னா தன்னை உதறிட்டுப் போனவளை – அதுவும் கைக்குழந்தையோடு பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டானே.... !'' அவனை அணு அணுவாக வதைத்துக் கொண்டிருக்கும் மரணம் இப்போதே முழுமையாக ஆட்கொண்டுவிடக் கூடாதா என்று ஏங்கினான்.

''நான் தேடிவந்தவங்க இப்போ இங்கே இல்லை. நாம் வந்தபடியே திரும்பி காலிக்கே போயிடுவோம்.'' அயர்வுடன் சாரதியிடம் கூறியவன், 'நேர்ஸிங்கோம்' முன்னால் செல்லும் பாதைவழியே போகச்சொன்னான்.

சிவன்கோயிலைக் கடந்ததும் வீதியின் வலதுபக்கம் பார்வையைக் கூராக்கினான் சபாநாதன் அதோ–

படபடக்கும் நெஞ்சோடு மூச்சை உள்ளெடுக்கவும் மறந்து கறுப்பு 'ஸ்ரிக்கர்' ஒட்டிய கண்ணாடியினூடே பார்த்தான். பழைய அடையாளங்கள் அத்தனையையும மாறி புதுமெருகுடன் சுற்றுமதில்களினுள் அடக்கமாயிருந்த வீட்டினுள்ளிருந்து புத்தக மூட்டையுடன் வெளியேறும் சிறுவன்... ஓடிவந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு பின்னால் வந்து நின்ற சுதாகரிடம் விரல் காட்டி ஏதோ சிலேடையாகப் பேசிச் சிரிப்பவள் – அதே தமயாதான்!

ஆயர் தேவசகாயம் வகுப்பில் அடிக்கடி சொல்லிக்கொள்ளும் வேதவாக்கு நினைவுக்கு வந்தது. ''கையிலகிடைச்ச சந்தர்ப்பத்தையும் வாழ்க்கையையும் தவறவிட்டு – உதாசீனப் படுத்திட்டு இன்னும் இன்னும் அதிகம் கிடைக்கவேணுமென்று ஆசைப்படுகிறோம். எங்களைச் சுற்றியிருக்கிற ஆதரவற்றவர்களை அரவணைத்து அவர்களெல்லாம் ஆண்டவன் குழந்தைகள் என்கிற பேருண்மையை மறந்து அவர்களுக்கு உபகாரம் செய்ய தவறிவிடுகிறோம். உண்மையில இவையெல்லாவற்றினது பேறாகக் கிடைக்கின்ற திருப்தியைவிட அந்தப் பரலோகத்தில கிட்டப்போற பேறு பெரிதல்லவே!'

நீண்ட கொடிய கோடையின் பின் அந்த இல்லத்தில் வசந்தம் துளிர்விட தொடங்கியிருக்கிறது. இந்த அமைதி இவன் வரவால் குலைய வேண்டாம். இவனுக்காக ஆயரின் இல்லக்கதவுகள் என்றும் திறந்தேயிருக்கும். அது போதும்... தன் வாழ்க்கைப்படகு செல்லவேண்டிய திசையை தீர்மானித்துக்கொண்டான். சாரதி பார்த்துவிடாதிருக்க கண்ணீர் கோர்த்த கண்களை குளிர்கண்ணாடியினால் அவசரமாக மறைத்துக் கொண்டு ஆயரின் இல்லத்திற்கு வண்டியைச் செலுத்தும்படி சாரதியிடம் கூறினான் சபா.

– வாசுகி கந்தசாமி –

# 'சிக்' கென்ற உடம்பிருந்தா....

அழகை ரசிக்க யாருக்குத்தான் விருப்பமில்லை? அழகாக இருக்க யாருக்குத்தான் ஆசையில்லை? அதனால் அழகாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் என்ன வழிமுறைகளைப் பின்பற்றினால் வெற்றி பெற முடியும் என்பதைப்பற்றிக் கொஞ்சம் பார்ப்போமா?



•கொழுப்புச்சத்துள்ள உணவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

•உணவில் புரதச்சத்து மற்றும் விட்டமின்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். பருப்பு, தயிர், காய்கறி, மோர், சப்பாத்தி, பழங்கள், சாலட் போன்றவை உடல் எடையைக் கூட்டுவதில்லை.

•இனிப்பு வகைகள் உடற் பருமனை உடனடியாக அதிகரிக்கக்கூடியவை. கொழுப்பு நீக்கிய பால் அருந்துங்கள். தேநீர், கோப்பி போன்ற பானங்களைக் குறைவாக அருந்துங்கள்.

•காலையில் எழுந்ததும் உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்குங்கள்.

•நாள்முழுதும்வீட்டு வேலை செய்வதே உடற்பயிற்சி என்று நினைப்பது தவறு. அதே போல் சாப்பிடுவதை விட சாப்பிடாமல் இருப்பதே உடற் பருமனைக்குறைக்க சிறந்த வழி என்று நினைப்பதும் தவறு.

•தினமும் பத்துத் தம்ளர் தண்ணீர் குடியுங்கள்.

•துரித உணவுகளைச் சாப்பிடுவது உடல் பருமனுக்கு அழைப்பு விடுவது போன்றதாகும். எனவே சமச்சீரான உணவு வகைகளையே உண்ணுங்கள்.

•முகப் பருவுக்கு மருந்து பூசுபவர்கள் அவ்வப்போது தண்ணீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இதனால் முகத்தில் படியும் எண்ணெய் நீக்கப்பட்டு சருமம் தூய்மையாக இருக்கும்.

•மதியச் சாப்பாட்டில் பருப்பு, காய்கறி, தயிர் அல்லது மோர் சேர்த்துக் கொள்ளுங்கள்.

•பழ ரசங்களுக்குப்பதிலாக பழங்களைக் கடித்துச்சாப்பிடுவது சிறந்தது.

•எண்ணெயில் பொரித்த உணவுகளைப் பார்த்ததும் நாக்கில் நீர் ஊற ஓடாதீர்கள்.

•இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது நாம் அழகாக இருக்கிறோம் என்று நினைத்துக் கொள்வதே ஆகும்.

உலகத்திலுள்ள சந்தோஷமான நபர் நான்தான்என நினைத்து எப்போதும் சந்தோஷமாக இருங்கள். சந்தோஷமாக யார் இருக்கிறார்களோ, அவர்கள் தான் உண்மையான பணக்காரர்கள்.

ஆம். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தகுதியுள்ள ஒருவரே வாழ்க்கை என்னும் ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற முடியும்.

எனவே சகோதரிகளே, கனவுகள் மட்டுமே வாழ்க்கை இல்லை. கனவுகளுக்குள் தொலைத்துவிடும் உங்கள் வாழ்க்கையை நனவுலகுக்குள்ளும் கொண்டுவாருங்கள். அதுவே சிறந்த வாழ்வுக்கான அடிப்படை!

****

> உடலைக்கச்சிதமாக வைத்திருப்பது ஒரு கலை. சரியான வழிகாட்டுதலுடன் அதைச் செய்யும்போது தான் உரிய பலனைக் கொடுக்கும்.

# அழகு முகத்துக்கு சில ஆலோசனைகள்

நாம் ஒவ்வொருவரும் அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் தான். ஆனால் அந்த அழகை மெருகூட்டவோ பாதுகாக்கவோ மட்டும் எம்மில் பலர் எந்த முயற்சியும் எடுப்பதேயில்லை. எனவே இன்று நாம் எமது முகத்தை முடியுமானவரை எவ்வாறு பாதுகாத்து அழகூட்ட முடியும் என்பது பற்றிப் பார்ப்போம்.



தண்ணீரில் முகம் கழுவப்போகிறீர்கள். முதலில் உங்கள் கை சுத்தமாக இருக்கிறதா என்று பாருங்கள். பலர் தங்கள் கையில் இருக்கும் அழுக்கைக் கண்டு கொள்ளாமலேயே முகம் கழுவ அந்தக் கைகளைப் பயன்படுத்துவார்கள். இதனால் கையில் உள்ள அழுக்கு முகத்தில் உள்ள நுண்ணிய துவாரங்கள் வழியாக தோலுக்குள் சென்று சருமப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

சிலர் சுடுதண்ணீர்தான் சுத்தமானது என்று கருதி அதனால் முகம் கழுவுவார்கள். இது தவறு. இதனால் முகத் தோலில் உள்ள மென்மை பாதிக்கப்படும். இதையே தொடர்ந்தால் முகத்துக்கே உரித்தான அந்த மென்மைத்தன்மை மாறி தோல் கரடுமுரடாகிவிடும். பச்சைத் தண்ணீரில் முகம் கழுவ யோசிப்பவர்கள் வெதுவெதுப்பான தண்ணீரில் முகத்தைக் கழுவலாம். அதனால் முகத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

முகத்தை எப்போதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க நீராவி பிடிக்கலாம். ஆனால் தினமும் நீராவி பிடிப்பது தவறு. வாரத்துக்கு ஒரு முறை பிடிக்கலாம். நீராவிக் குழியலும் தொடரலாம். முகத்திலுள்ள நுண்ணிய சருமங்கள் மூலம் உட்செல்லும் நீராவி, முகத்தின் இரத்த ஓட்டத்தை சுறுசுறுப்பாக வைத்துக்கொள்கிறது. முகமும் பளிச் சென்று ஆகிவிடுகிறது.

முகம் கழுவுவதில் கூட எந்த மாதிரி கழுவினால் நல்லது என்கிற ஒரு விஷயம் இருக்கிறது. சிலர் நெற்றியில் இருந்து, சிலர் இமையில் இருந்து, சிலர் கன்னப் பகுதியிலிருந்து கழுவ ஆரம்பிப்பார்கள்.

முன்தாடைப்பகுதி, பிறகு கன்னம், பிறகு கண்கள், அதன் பிறகு நெற்றி என்கிற ஏறுமுக பாணியில் முகம் கழுவுவதே முக ஆரோக்கியத்துக்கு சிறந்தது. முகத்தில் உள்ள நுண்ணிய நரம்புகள் இந்த ஒழுங்கில் தங்கள் பணியை சிறப்பாகச் செய்யும் என்பது இது பற்றி ஆய்வு செய்த மருத்துவர்கள் கருத்தாகும்.


சிலருக்கு நன்னீர் கிடைக்காது. கடினநீர் தான் கிடைக்கும். இந்த தண்ணீரில் முகம் கழுவுகிறார்கள். இவர்கள் தினமும் நாலைந்து தடவையாவது கழுவினால் சிறந்தது. குறிப்பாக சுகாதாரக் கேடுள்ள இடங்களில் வாழ்ந்தேயாகவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள், வாகனத்தில் தினமும் 50கிலோ மீட்டராவது பயணம் செய்து முன்னால் போகிற வண்டியின் கரும் புகையை சுவாசிப்பவர்கள் எல்லாம் தினமும் 4 தடவைகள் முகம் கழுவியாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்கள்.

எண்ணெய் வழியும் முகம் உடையவர்கள் முகத்தை அதிகமாய்க் கழுவுதல் கூடாது. அவ்வாறு மேற்கொண்டால் தோலில் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

எனவே முகத்தை அழகாக வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒவ்வொருவரும் மேற்கூறப்பட்ட ஆலோசனையைப் பின்பற்றி பயன்பெறுவீர்களாக.

# உங்கள் கவலை நியாயமானதா?

கவலைப்படுவது எமக்குப் பழக்கமாகிவிட்ட ஒன்று. வேலைக்காரி வரவில்லை, குழந்தைகள் வீட்டுப்பாடம் முடிக்கவில்லை, உறவினரின் திருமணத்துக்கு அணிய சரியான நகையில்லை...



இப்படி எமக்குத்தேவையில்லாத கவலைகள் எத்தனை எத்தனையோ! ஆனால் நாம் ஒரு நிமிடம் சிந்திக்க வேண்டும். கவலைப்படுவதால் வேலைக்காரி வந்துவிடுவாளா? அல்லது குழந்தைகள் தான் வீட்டுப் பாடம் முடித்துவிடுவார்களா?, அல்லது நாம் விரும்பிய நகை தான் கிடைத்துவிடுமா? எதுவும் இல்லை. இருந்தும் நாம் கவலைப்படுகிறோம்.

கவலைப்படாமலேயே இருக்க முடியாது தான். ஆனால் தேவையில்லாதவற்றுக்குக் கவலைப்படாமல் இருக்க முடியும் அல்லவா?

சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் கவலைப்படாமல் இருப்பது எப்படி? கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போமா?

அனைவரையுமே எம்மால் திருப்திப்படுத்த முடியாது.

மற்றவர்களின் பேச்சு எம்மைச் சுற்றி எப்போதும் இருந்துகொண்டே தான் இருக்கும். அதற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் எமக்கு எது தேவை என்பதை முடிவெடுக்க வேண்டும். மகிழ்ச்சியாக வாழ என்ன தேவை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் மகிழ்ச்சியாக வாழ்வது முக்கியமானது. அதைத் தவிர்த்து எல்லோரும் போற்றும் பெண்ணாக வாழ வேண்டும் என்று முயற்சி செய்து வீண் கவலைகளுக்கு உட்படாதீர்கள். மற்றவர் விருப்பப்படி, அவர்கள் எது சரி என்று நினைக்கிறார்களோ அதன்படி வாழ நினைத்தால் நிச்சயம் உங்கள் கவலைகள் தான் அதிகரிக்கும்.

கவலைப்பட ஆரம்பித்தவுடன் இப்போது நான் கவலைப்படுவதால் என்ன பயன்? என்று உங்களை நீங்களே கேளுங்கள். ஒரு பயனும் இல்லை என உங்களுக்குத் தோன்றினால், என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள்.

நடந்தவை, நடக்க இருப்பவை ஆகியவற்றைப் பலமுறை சிந்தித்து நேரத்தை வீணாக்குவது மட்டுமன்றி கவலைகளையும் அதிகப்படுத்திக்கொள்வதை நிறுத்திக்கொள்ளுங்கள்.

மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம், கவலை ஆகியவற்றை விட்டு உங்களுக்குச் சரி என்று தோன்றினால் மட்டுமே எதையும் செய்யப்பழகுங்கள்.

எதை எப்போது செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கும் திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள்.

இந்தப் பழக்கங்கள் நீங்கள் தேவையற்றுக் கவலைப்படுவதைத் தவிர்க்கச் செய்யும்.

ஒரு பேப்பரும், பேனாவும் எடுத்து இரண்டு பட்டியல்களைத் தயார் செய்யுங்கள்.

முதல் பட்டியலில் நீங்கள் செய்து முடிக்க விரும்பும் வேலைகளை எழுதுங்கள்.

அடுத்த பட்டியலில இந்த வேலைகளைச் சரியாக முடிக்கும் பெண்ணின் பெயரை எழுதுங்கள். அனைத்தையும் ஒரே பெண்மணி செய்து முடிக்கின்றாரா என்பதைக் கவனியுங்கள்.

உங்கள் எதிர்பார்ப்புக்கள் நியாயமானவையா? நீங்கள் கவலைப்படுவது நியாயமானதா என்பது உங்களுக்கே புரியும்.

## பெண்

சசி

## அவல் மிக்சர்



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| அவல் | 100கிராம். |
| வேர்க்கடலை | 50கிராம். |
| சோம்பு | 1/2 தேக்கரண்டி. |
| கறிவேப்பிலை | 8 |
| கடலைப்பருப்பு | 50கிராம். |
| வறுத்த எள் | 1மேசைக்கரண்டி. |
| உப்பு, மிளகாய்ப்பொடி | தேவையான அளவு. |
| சர்க்கரை | 1மேசைக்கரண்டி. |
| உலர்திராட்சை | 1 மேசைக்கரண்டி. |
| பாதாம் | 1 மேசைக்கரண்டி. |
| எண்ணெய் | தேவையான அளவு. |
| இனிப்பு சோடா | தேவையான அளவு. |

### செய்முறை

கடலைப்பருப்பைக் கழுவி முதல் நாள் இரவே ஊற வைக்கவும். அடுப்பில் எண்ணெயைச் சூடாக்கி அவல், பருப்பு, வேர்க்கடலை, எள், கறிவேப்பிலை மற்றும் திராட்சை என்று தனித்தனியே வறுத்தெடுத்து பேப்பரின் மீது பரப்பி ஆற வைக்கவும். ஓர் அகலமான பாத்திரத்தில் அவல், பருப்பு, வேர்க்கடலை, எள் போன்றவற்றைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். வறுத்த கறிவேப்பிலையைக் கையால் நசுக்கி மிக்ஸரில் போடவும். சர்க்கரை மற்றும் சோம்பை இடித்துச் சேர்க்கவும். சுவைக்கேற்ப உப்பு, மிளகாய்ப்பொடி, இனிப்புச் சோடா மற்றும் உலர் திராட்சை ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். பின்பு பாதாமைத் தூவி அனைவருக்கும் பரிமாறி உண்டு மகிழுங்கள்.

# அகந்தை அழிந்தது

அடர்ந்த காட்டின் நடுவே இருந்தது அந்தப் பெரிய ஆலமரம். அதன் அடியில் அமர்ந்திருந்தார் நரியார். அவரைச் சுற்றி கரடி, மான், யானை, புலி, ஓநாய், காட்டெருமை, கழுதை, வரிக்குதிரை என மிருகங்களின் கூட்டம். நரியாரின் பேச்சுக்கு எல்லா மிருகங்களிடமும் நல்ல மரியாதை உண்டு. மிருகங்களுக்கு சிரமமோ துயரோ ஏற்படும் போதெல்லாம் தன் புத்திசாலித்தனத்தாலும், தந்திரத்தாலும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த பெருமை நரியாருக்கு உண்டு. எனவே, பிரச்சினை என்று ஏதாவது வந்தால் எல்லா மிருகங்களும் நரியாரின் தலைமையில் ஒன்று கூடுவது வழக்கம்.



அன்றும் அப்படி ஒரு பிரச்சினை.

சில தினங்களுக்கு முன் பக்கத்து ஊர் காட்டிலிருந்து இந்தக் காட்டுக்கு ஒரு சிங்கம் வந்தது. கண்ணில்பட்ட மிருகங்களை எல்லாம் அடித்துக் கொல்வதும், அதில் கொஞ்சம் தின்றுவிட்டு தூக்கி எறிவதும், மறுபடியும் வேறு மிருகத்தை அடித்துக் கொல்வதுமாக அதன் தொல்லை எல்லை மீறிப் போய்க் கொண்டிருந் தது. இதனால் ஒரே நாளில் பல மிருகங்கள் உயிர் இழக்கும் நிலை.

நீங்கள் உங்கள் ஆலோசனைகளைச் சொல்லலாம் என்றார் நரியார்.

மான் முதலில் பேசியது "தினமும் உயிரைப் பிடித்துக் கொண்டு நடமாட வேண்டியுள்ளது. நேற்று சுனையில் தண்ணீர் குடிக்கச் சென்ற என் கணவரை சிங்கராஜா கொன்று தின்று விட்டார்." அதன் கண்களில் கண்ணீர்.

"இரை தேடிச் சென்ற என் இரு குழந்தைகளையும் அநியாயமாக சிங்கராஜா வேட்டையாடி விட்டார்." என்று துயரத்துடன் கூறியது முயல்.

"சரி! சரி! உங்களுடைய வேதனை எனக்குப் புரிகிறது. இதற்கு விரைவில் தீர்வு காண்பது என் பொறுப்பு. அதுவும் ஒரு வாரத்தில் தீர்வு காண்போம்" என்று நரியார் உறுதியோடு சொல்ல.

கூட்டம் கலைந்தது.

மறுநாள் சிங்கராஜாவின் முன் போய் பணிவுடன் நின்றார் நரியார்.

"என்ன நரியாரே! விஷயம் இல்லாமல் வர மாட்டீரே!" என்று கேட்டார் சிங்கராஜா.

"ஆமாம் சிங்கராஜா" என்று வருத்தத்துடன் கூறிய நரியார்

"உங்களைப் போல் உருவம் உடைய ஒரு சிங்கராயர் எங்களிடம் வந்து தான் தான் மகாராஜா என்று கூறினால் எங்களுக்கு கோபம் வருமா? வராதா?"

"வரும்! வர வேண்டும்! ஆமாம். யார் அந்த சிங்கராயர்?" கோபத்துடன் கேட்டார் சிங்கராஜா.

"தெரியவில்லை. நீங்களே வந்து பாருங்கள்."

"அப்படியா? வா, போகலாம்."

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

காட்டின் நடுவே- ஒரு புதை குழி.

அந்தப் புதைகுழியில் தவறி விழுந்தால் அவ்வளவுதான்.

மெல்ல மெல்ல தன்னுள்ளே இழுத்துக் கொண்டு விழுந்தவர்களைக் கொன்று விடும் அந்தக் குழி.

சிங்கராஜாவும் நரியாரும் அந்த புதை குழியின் ஒரு கரையில் வந்து நின்றனர். எதிரே, மறு கரையில் ஒரு பெரிய நிலைக் கண்ணாடி.

சிங்கராஜாவின் உருவம் எதிரே நிலைக் கண்ணாடியில் தெரிய-"அவர்தான் நான் சொன்ன சிங்கராஜர் என்றார் நரியார்."

சிங்கராசா.. கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்து வேறொரு சிங்கம் என்று நினைத்து கோபத்துடன் கர்ஜிக்க, அந்த உருவமும் கர்ஜித்தது.

"நீ யார்?" என்று கோபத்தோடு சிங்கராஜா கேட்க, கண்ணாடியில் இருந்த உருவம் அதையே கேட்டது.

"நான் இந்தக் காட்டுக்கு ராஜா" என்ற சிங்கராஜாவிடம், அந்த உருவம் அதையே சொல்ல-

கோபம் தலைக்கேறியது சிங்கராஜாவுக்கு.

மறுகணம்-

வெறிகொண்டு வேகத்தோடு எதிரே இருந்த உருவத்தை நோக்கிப் பாய்ந்தார் சிங்கராஜா.

அடுத்த வினாடி-

கண்ணாடியின் மீது பயங்கரமாக மோதி கண்ணாடி தூள் தூளாக நொறுங்க, சிங்கராஜா தொபீரென்று புதை குழியில் விழுந்தார்.

ஆபத்தை உணர்ந்த சிங்கராஜா, மரண பயத்தில் ஓ வென்று ஓலமிட்டார்.

நியாயமின்றி, தானென்ற அகந்தையில் ஆட்சி புரிந்தால் இதுதான் முடிவு என்று நரியார் சொல்ல அதைக் கேட்கக்கூட அவகாசமின்றி புதை குழியில் மூழ்கினார் சிங்கராஜா.

நிம்மதியாக வந்த வேலை முடிந்த திருப்தியில் காட்டின் உள்ளே நடக்கத் தொடங்கினார் நரியார்.

# சிறார்களின் கைவண்ணம்




# விநோத உயிரினங்கள்

| | | |
|---|---|---|
| அதிக நீர் அருந்தும் பறவை | - | புறா |
| மிகச் சிறிய முட்டையிடும் பறவை | - | தேன் சிட்டு |
| சத்தமிடாத விலங்கு | - | ஒட்டகச் சிவிங்கி |
| ஞாபகசக்தி கூடிய விலங்கு | - | யானை |
| மிகப் பெரிய வாயுள்ள விலங்கு | - | நீர் யானை |
| பல்லில்லாத முலையூட்டி | - | தேவாங்கு |
| பித்தப்பை இல்லாத முலையூட்டி | - | எலி |
| பறக்கும் போதே தூங்கும் பறவை | - | அல்பட்றாஸ் |
| நீல நிற இரத்தத்தை உடைய கடல் உயிரினம் | - | இறால், நண்டு |
| கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவை | - | பென் குயின் |

வ. சுமதி
தரம் 9
யா/ மெதடிஸ்த பெண். உ. பாடசாலை

# விஞ்ஞானக் கருவிகள்

1. அல்டி மீட்டர் :- விமானம் பறக்கும் போது உயரத்தை அளவிடும் கருவி.
2. அமீட்டர் :- மின்னோட்டத்தை அளக்கப் பயன்படும் கருவி.
3. அனிமோ மீட்டர் :- காற்றின் வேகம், திசை என்பவற்றை அளவிடும் கருவி.
4. ஆடியோ மீட்டர் :- ஒலியின் அளவை, வலிமையை அளவிடும் கருவி.
5. பரா மீட்டர் :- காற்றின் அமுக்கத்தை அல்லது நழுவு வீதத்தை அளக்கும் கருவி.
6. கலோரி மீட்டர் :- வெப்பத்தின் அளவை அளக்கும் கருவி.
7. காடியோ கிராப் :- இருதயம் வேலை செய்வதை காட்டும் கருவி.
8. பைனா குலர் :- தூரத்தில் உள்ள பொருட்களை பெரிதாக காட்டும் கருவி.
9. குரோனோ மீட்டர் :- கப்பலில் வடதிசையை சரியாகக் காட்டும் கருவி.

*எஸ். நீருஜன்,*
*தரம் 11.*

# உங்கள் சிந்தனைக்கு

| | | |
|---|---|---|
| மிகமிக நல்ல நாள் | — | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | — | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | — | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | — | சமயோசித புத்தி |
| மிகக்கொடிய நோய் | — | பேராசை |
| மிகவும் சுலபமானது | — | குற்றம்காணல் |
| கீழ்த்தரமான விடயம் | — | பொறாமை |
| நம்பக்கூடாதது | — | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | — | அதிகபேச்சு |
| செய்யக் கூடாதது | — | உபதேசம் |
| செய்ய வேண்டியது | — | உதவி |
| விலக்க வேண்டியது | — | விவாதம் |
| உயர்வுக்கு வழி | — | உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | — | வாய்ப்பு |
| இளமையில் தேவை | — | கல்வி |
| முகத்தில் கண்ணுள்ளவர் | — | கல்வி கற்றோர் |
| கோபம் வரும்போது காக்க வேண்டியது | — | பொறுமை |

வக்சாயினி
தரம் 10
மு/மல்லாவி மத்திய கல்லூரி.



# சமாதானம் குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பின் பின்னணியில்...!

சமாதானப் பேச்சு வார்த்தையை மீண்டும் எப்போது ஆரம்பிப்பார்கள் என்ற ஆதங்கத்தினை தமிழ் மக்கள் மட்டுமின்றி தென்னிலங்கை மக்களும் கூட கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த அரசின் காலத்தின்போது இடம்பெற்ற சமாதான முயற்சிகள் போன்று இந்த அரசின் காலத்திலும் அதனை முன்நகர்த்திச் செல்லமுடியுமா என்ற பிரச்சினையும் இவ்விடயத்தில் கவனத்திற்குரிய ஒன்றாக உள்ளது.

கடந்த அரசின் காலத்தின்போது நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள், புலிகளுடன் போரிட்டு வெற்றி பெற முடியாது என்ற ஒரு அச்ச நிலைமைக்குள், சிங்கள தேசம் மட்டுமல்ல சிங்கள இனவாதிகளும் உள்ளாகிய நிலைமைக்குள் விடுதலைப்புலிகளுடன் இனியும் போரிடுவதில் பயனில்லை என்ற நிலையில்தான் தொடரப்பட்டன.

யுத்தம் மூலமான அழிவுகளை தமிழ் மக்கள் முகம்கொடுத்த அதே அளவுக்கு சிங்கள தேசமும் எதிர் கொண்ட நிலையில், தொடர்ந்து தமது சிங்களப் புதல்வர்களை பலி கொடுக்க முடியாது என்ற சிங்கள மக்களின் எதிர்ப்புணர்வும் கூட அப்போது நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஊன்றுகோலாக இருந்தன.

தற்போதுள்ள ஜனாதிபதியின் அரசு, சமாதான முயற்சிகளை அது எதிர் கொண்டுள்ள நிலைமைகள், சூழல்கள் என்பன தலைகீழாகவே உள்ளன.

உறுதியான அரசாக ஜனாதிபதியின் கட்சியால், தனது பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்க முடியாத நிலமைகள், புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைக்கான வழிமுறை தொடர்பில் எவ்வித இணக்கப்பாட்டையும் கொண்டிராத ஜே.வி.பியுடன் கூட்டினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலமைகள், சமாதான முயற்சிகளிலே தாம் ஆர்வமாக இருப்பதாக காட்டிக் கொள்வதன் மூலம், சர்வதேச சமூகத்தின் நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் மறுபுறத்தே விடுதலைப்புலிகளை யுத்தத்தில் தோற்கடித்த பின்பே அவர்களுடன் பேச வேண்டும் என்கின்ற இனவாதிகளை திருப்திப் படுத்த வேண்டிய நிலை என்பன போன்ற பல சிக்கலான நிலைமைகளின் கீழேயே ஜனாதிபதி தனது எதிர்கால சமாதான முயற்சிகளை கொண்டு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்.

இந்த குழப்ப நிலமைகளின் மத்தியிலேயே அவர் விரும்பியோ விரும்பாமலோ நோர்வே அரசையும் அழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார். மறுபுறத்தில் புதிய பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சி பற்றி குறிப்பிடும் போது, இந்தியாவின் பங்களிப்பு சமாதான பேச்சு வார்த்தைகள் விடயத்தில் போதாமல் இருப்பதாகவும், முறையான பங்களிப்பை இந்தியா வழங்குவதற்கான ஏற்பாட்டை அவசியம் மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதுமட்டுமின்றி இந்திய அரசை தமிழ் மக்களின் இனப்பிரச்சினை விவகாரத்தில் எப்படியாவது தலையிட ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்பதில் ஜனாதிபதியின் பின்னால் நிற்கும் இனவாத அமைப்புக்களான ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி ஆகிய கட்சிகளும் மிகவும் ஆர்வமாக இருக்கிறன.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிருப்தியைப் பயன்படுத்தி புலிகளுக்கு எதிரான போரில் எப்படியாவது இந்தியாவையும் தொடர்புபடவைத்து புலிகளை தோற்கடித்து விடலாம் என்பதில் இந்த இனவாத அமைப்புக்கள் மிகவும் நப்பாசை கொண்டிருக்கின்றன.

இந்தியா இதுவிடயத்தில் ஆர்வமாக இல்லை என்பதையும், ஏற்கனவே தமிழ் மக்கள் விடயத்தில் மூக்கை நுழைத்து அடிவாங்கிக் கொண்டதை இந்தியா மறந்திருக்க முடியாது என்பதையும் இவ்விடயத்தில் கூறியாக வேண்டும்.



இந்திய விஜயத்தின்போது இந்திய வெளியுறவு அமைச்சர் யஸ்வந் சிங்காவை ஆரத் தழுவும் லக்ஷ்மன் கதிர்காமர்

அண்மைக் காலங்களில் இந்திய அரசு தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கைகளில் இந்திய அரசுக்கு நேசக்கரம் நீட்டியே தமது அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இந்திய அரசை நோக்கி நீட்டியுள்ள ஆதரவுக் கரத்திற்கு பதிலாக தற்சமயம் வெளிப்படையான தமது ஆதரவை இந்திய அரசு விரும்பினாலும் அதனை வெளிப்படுத்த முடியாத நிலமைகளும் உள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலை அளிப்பதாக இருந்தால், விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டும். அவ்வாறு நீக்குவதென்பது, இலங்கை அரசுடனான இந்தியாவின் இராஜதந்திர உறவுகளில் அது விரிசலை ஏற்படுத்தும் என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி, விடுதலைப்புலிகள் கோரியுள்ள வடக்கு கிழக்கிற்கான தன்னாட்சி அலகு என்ற விடயத்திலும் இந்தியா அதிக கரிசனை செலுத்தும் என எதிர்பார்க்கலாம். இந்த தன்னாட்சி அலகு வேண்டி நிற்கும் அதிகாரம், இந்திய அரசுக்கெதிராக போராடிவரும் கொலில்லாக் குழுக்களுக்கு உற்சாகத்தை கொடுக்கும் விவகாரமாகவும் போய்விடுவது மட்டுமல்லாமல், மாநிலங்களுக்கான கூடுதல் அதிகாரங்களை வேண்டி நிற்கும் மாநில அரசுகளுக்கும் இவ்விவகாரம் உற்சாகத்தை ஏற்படுத்திவிடும் என்பதையும் எனவே இந்தியா இதனைக் கவனத்தில் கொள்ளும் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

நிலமை இவ்வாறிருக்க தத்தமக்குள்ளேயே கணிசமான முரண்பாடுளைக் கொண்டுள்ள இனவாத அமைப்புக்களுடன் கூட்டினை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஜனாதிபதியின் அரசு, அதுவும் விடுதலைப் புலிகள் விடயத்தில், கறாரான எதிர்ப்பினை வெளிக்காட்டும் இனவாதிகளுடன் கைகோத்துக் கொண்டுள்ள ஜனாதிபதி கூடவே, எந்த நேரத்திலும் தற்போது கொண்டிருக்கும் சாதாரண பெரும்பான்மைப் பலம் கூட நாடாளுமன்றத்தில் எந்த நேரத்திலும் தடம் புரண்டு போய்விடலாம் என்ற நிலையில் ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளின் போக்கை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

-மகாமுனி-

## சொற்சிலம்பம் போட்டி இல.106

சொற்சிலம்பம் 106 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் மே 10ஆம் திகதி ஆகும். விடைகள் மே17ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே24ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.104க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாரசய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.106

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | |
| 6 | | ■ | 7 | | | | ■ |
| 8 | | 9 | | | ■ | 10 | 11 |
| ■ | 12 | | | ■ | 13 | | |
| 14 | | | ■ | 15 | | | ■ |
| | ■ | 16 | | | | ■ | 17 |
| 18 | 19 | | ■ | | ■ | 20 | |
| 21 | | ■ | 22 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல 104

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ரு | ப் | 3 ப | 4 தி | ■ | 5 ப | 6 சு |
| 7 கை | து | ■ | 8 தி | ரு | ம | க | ள் |
| ப் | ■ | 9 த | க | டு | ■ | 10 வா | ளி |
| 11 பு | 12 தி | ன | ம் | ■ | 13 மா | ன் | ■ |
| ■ | 14 வா | து | ■ | 15 க | ட | ■ | 16 வி |
| 17 க | ல் | ■ | 18 அ | ல | ம் | 19 ப | ல் |
| மு | ■ | 20 ச | ய | ம் | ■ | 21 க | ல |
| 22 கு | ம் | ப | ல் | ■ | 23 வீ | ர | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.106

**இடமிருந்து வலம்**

1. இரண்டாவது அல்ல.
5. உதவி.
6. இரண்டு.
7. நித்திரை.
8. மாமன் மகனாக இருப்பவர்.
10. மாறுபட்டு நிற்றல்/ பெருமைப்படல்/மென்மையாக முரண்படல்.
12. கொடுக்கும்.
13. கோது/பிழிந்த பின் எஞ்சுவது.
14. ஒரு பக்கம் மாத்திரம் செல்ல விடுவது. இந்த ஆங்கிலச் சொல்லே பாவனையில் உள்ளது.
15. இளம்பெண்.
16. ஒரு பறை வகை.
18. மிஞ்சிப்போதல்.
20. கூட்டல் குறி.
21. மரத்தின் பாகம்.
22. ஒரு மான் வர்க்கம்.

**மேலிருந்து கீழ்**

1. வயோதிபம்.
2. தாகப்படல்/ அந்தரப்படல்.
3. பல சொற்கள் ஒன்று சேர்ந்து நிறைவு பெற்றால் உருவாவது.
4. கவலை.
5. யானைக்கு மட்டும் விசேடமாக உண்டு.
9. தேங்காயிலிருந்து பால் எடுப்பதற்கு செய்யும் வேலை இது.
11. கற்கால மனிதனின் வீடு.
13. கடல் பிராணியின் ஓடு இராஜ சின்னத்தில் ஒன்று.
14. இராமாயணத்தின் மூலக் கதாசிரியர்.
15. சனம்.
17. புத்திரன்.
19. கட்டு.
20. கச்சேரி.

## சொற்சிலம்பம்-103 பரிசு பெறுவோர்.

1. த.துஜிந்தன்,
மே/பா நர்மதன் ஸ்ரோர்ஸ்,
இராசேந்திரன் குளம், வவுனியா.
2. நகுலன் ஜெயசேகரா,
சக்தி அகம், சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு.
3. இ.புவனேஸ்வரன்,
இல—699,யோகபுரம் மத்தி,
மல்லாவி.

## பாராட்டுப் பெறுவோர்

1. வே.சரஸ்வதி,
அம்பன்,
குடத்தனை.
2. ஏ.பாலசிங்கம்,
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு.
3. திருமதி.பா.செல்வராணி,
மாவடி,
வட்டுக்கோட்டை.
4. சு.தவபாலன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
5. எஸ்.ஜீவா,
மூவ் றோட்,
கொழும்பு—06.
6. எஸ்.சத்தி ஆனந்த்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
7. சி.மனோகரன்,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
8. திருமதி. எம்.ஆர்.பாலேந்திரா,
உடங்காவ,
கொச்சிக்கடை.
9. து.கௌரி தாசன்,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
10. ஆ.சுரேந்தன்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

# ‘யாரையும் கொல்வேன் பெற்றார் என்றாலும் சரி!’

பொலிஸ் கூட்டம் மரங்களை முற்றுகை இடுகிறது. மைதானத்தைச் சுற்றி நிற்கிறது. வைட் ஹவுஸ் நோக்கி பொலிஸின் துப்பாக்கிகள் நீண்டிருக்கின்றன.

அது நீண்ட இரவு. மணித்தியாலம் மணித்தியாலமாக வெளியில் வந்து பார்த்தனர். இருள். கும்மிருட்டு. அமைதியான கட்டடங்கள். தற்போது எல்லாமே அடங்கி இருநதன.

கொக், வீட்டினுள் நுழைகிறார். அவருடன் அவரது மருத்துவ சட்ட ஆய்வுத்துறையினரும் சேர்ந்து வீட்டினுள் நுழைகின்றனர். நுழைந்தவர்களுள் டாக்டர் க்ரைக் இருக்கிறார். அவர் பொலிஸ் சார்ஜன்.

பாம்பர் குடும்பதலைத கொககிற்கு தெரியாது. வீடு வடிவாக இருநதது. அழகு இவைதான் கொக்கிற்கு தெரிநதவை. ''வீட்டு வாசல் வடிவென்றால் ஆட்களும் அழகாகத்தான் இருப்பார்கள்.''



வித்தியாசமான குரல் வெளியில் இருந்து வருகிறது. ஆம். அது ஒரு இளம் பெண்ணினது. பாம்பரின் மனைவின் சகோதரி . அவள் சைலா கப்பல்.

நவில் பாம்பர் கீழ் உள்ள ஏறுபடியில் சுடப்பட்டுக் கிடக்கிறாள். சுடப்படுவதற்கு முன் நையப் புடைக்கப்பட்டிருந்தாள். அடையாளம் காண முடியாதவாறு அவளது உடம்பு வீங்கிப் பெருத்திருந்தது.

படுக்கை அறையில் இரட்டைக் குழந்தைகளும் கொலை செய்யப் பட்டுக் கிடந்தனர். ஜீன் பாம்பரும் இறந்து கிடந்தனர்.

டாக்டர் கிரைக் பெண்ணின் சடலத்தை நெருங்கி சோதனை செய்தார். இரண்டு காயங்கள். இரண்டும் சூட்டுக்காயங்கள் . ஒரு காயத்தினால் கழுத்துப் பெரு நரம்பு பாதிக்கப்பட்டிருந்தது. மற்றைய சூடு தாடையைத் தாண்டி மூளையையும் பாதித்திருக்கிறது.

டாக்டர் யோசித்தார். இரண்டாவது சூடுதான் அவளைப் பலி கொண்டிருக்க வேண்டும். அவள் பின் புறத்தால் விழுந்திருக்க வேண்டும் என்றும் முடிவு செய்து அவ்விடம் இருந்து வலது காலைப் பின் வைத்து இரண்டு அடிகள் எடுத்து நகர்ந்தார். அவரின் இரு பாதங்களும் சாமாந்தரமாக ஒன்று மற்றையதை அண்மித்து இருந்தன. கையில் குறிப்பு. பதிவு செய்து கொண்டிருந்தார். ஏனையவர்கள் சுற்றி நிற்கின்றனர்.

முகத்தில் விராண்டிய அடையாளங்கள். வேறு தடயங்கள் இல்லை. கால்களும் பாதங்களும் நன்றாகத்தான் இருக்கின்றன. நீண்ட அவளின் விரல் நகமும் பாதிக்கப்பட வில்லை.

பொலிஸ் எப்போதும் மோப்பம் பிடிப்பவர்கள். சுற்றி வளைத்து தேடிப் பார்த்தனர். ஏதாவது கிடைக்கும் என்று.

வைட் ஹவுஸ் பண்ணையில் குடும்பத்தின் மூச்சும் காற்றும் சுவாசமும் அப்படி அப்படியே இருந்தன. ஜன்னல்கள் மூடிக் கிடந்தன. கதவுகளும் மூடியவாறே இருந்தன. ''இனம் தெரியாத யாரோ வீட்டினுள் புகுந்து கொள்ளையிட முனைந்திருக்க வேண்டும். கண்ட கிண்ட வற்றை எல்லாம் அடித்து நொறுக்கி உள் வந்திருக்க வேண்டும்.

அப்படி உள் வந்தபின்தான் 25க்கும் கூடுதலான வேட்டுக்களைத் தீர்த்திருக்க வேண்டும். இரட்டைக் குழந்தைகளையும் அலட்டாமல் கொலை செய்திருக்க வேண்டும்.''

கொக்கும் மில்லரும் ஒரே மாதிரித்தான் யோசித்தனர். டாக்டர் கிரைக் தனது மனதில் பட்ட வற்றைத் தெரிவித்தார்.

''இளம் பெண் அவளது குடும்பத்தையும் சுட்டுப் போட்டு தன்னையும் மாய்த்திருக்க வேணும்''. ''அப்படித்தான் இருக்க வேணும்.'' மில்லரும் உடன்பட்டான்.

''எதை வைத்துச் சொல்கிறீர்கள்.!''

''இங்கு உள்ளவை அப்படித்தான் சொல்கின்றன.''

''நானும் முதலில் அதைத்தான் நினைத்தேன்'' என்று உடன்பட்ட இடத்துக்கு வந்து நின்றான் மில்லர்.

பொலிஸார் இதனை உள்வீட்டுப்பிரச்சினை என்றிருந்தனர். வீட்டின் நிலைமையும் பொலிஸாரின் கண்ணில் பட்டது.

அறுவடை காலம் நெருங்குகிறது. பாம்பர் குடும்பம் வேலையில் மூழ்கியிருக்கிறது. வீட்டில் தரிப்பது குறைவு என்றாலும் தேவைக்கு உதவாத விடயங்களை எடுத்துக்கொள்ள பொலிஸார் அதிகம் அக்கறை காட்டவில்லை.

இப்படி இருக்கையில் குற்றத்தடுப்பு பிரதான அதிகாரி அங்கு வந்தார். பொலிஸாரின் பணி தரவுகளைப் பெற்று விடயத்தை முடிக்க வேண்டும் என்று பணித்தார்.

அத்தோடு கொலையும் தற்கொலையும் என்று குறிக்கப்பட்டது. அந்த அதிகாரி கடினக்காரர். அதோடு முடித்துக் கொண்டார். மேலதிக விரல் பதிவு ஆய்வுகளைச் செய்யவில்லை. குடும்ப அங்கத்தவர்களின் விரல் அடையாளம் பெறப்படவில்லை. அங்கு இருந்த துப்பாக்கியை அகற்றுவதற்கு பொலிஸார் கையுறை அணியுமாறு பணிக்கப்படவுமில்லை.

நிறைய விடயங்கள் மேலதிக விசாரணைக்



காக எடுக்கப்பட்டன. என்றாலும் கட்டடத்தின் பகுதிகள் அதன் உள்ளடங்கலான கபேட் போன்றன பட்டும் படாததுமாக பரிசீலனை செய்யப்பட்டன.

பண்ணைக்கு வெளியே பாம்பர் சோபை இழந்து அலைந்து திரிந்தார். கிளையில் இருந்து விடுபட்ட ஒரு மரக்குச்சி போல் அங்குமிங்குமாகத் திரிந்தார்.

பொலீஸார் அவரை உள்ளே நுழைய வேண்டாம் என்று கேட்டிருந்தனர். அப்படிப் போனால் உள்ள தடயங்கள் சகலதும் அழிந்து விடும் என்றும் எச்சரித்திருந்தனர்.

இரண்டு நாட்களின் பின்பு பொலிஸாரே. வந்து படிந்திருந்த இரத்தக் கறையைக் கழுவிப் போக்கினர்.

பெட்றூமில் பட்டிருந்த இரத்தம் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டது. இரட்டைக்குழந்தைகளின் வடிந்து போய்க்கிடந்த குருதியும் துப்புரவாக்கப்பட்டது.

மனதில் எல்லாம் படிந்திருந்தன. யார் அவற்றைச் சுத்தம் செய்வது?

இழப்புகளை ஏற்று வாழ்க்கைக்கு மீள வேண்டும். யார் செய்தது? ஏன் செய்தனர்? என்பன மட்டும் போதும்!.

''அவள் ஏன் கொலையுண்டாள்?'' பக்கத்துவீட்டுக்காரர் ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர்.

''அவள் நட்சத்திரக் கண்ணழகி'' மற்றொரு அயல் வீட்டார் வெளிப்படுத்தினார்.

''அவள் எல்லோரையும் வசீகரிப்பவள்'' மற்றொருவர் வாய்விட்டார்.

பத்திரிகைகள் தணிக்கை செய்து செய்தி வெளியிட்டன. பத்திரிகையாளர்கள் கிராமத்துக்கு விரைந்தனர். சைலா கப்பல் பற்றிய தரவுகளையும் தகவல்களையும் சேர்த்தனர்.

சைலா கப்பல் சுடக்கற்றிருந்தாள் என்ற உண்மை வெளிவந்தது. பொலிஸாரும் அப்படித்தான் ஊகித்திருந்தனர்.

என்றாலும் இருவர் நம்பவே இல்லை. ஒருவர்டேவிட் போட்புலோவ். இவர் பாம்பரின் மைத்துனர். மற்றவர் அவர் சகோதரி. திருமதி கிறிஸ்டின் ஈடோன்.

போட் புலோவ் ஒருவரைச் சந்தேகித்தார் எனறாலும் அது உண்மை அல்ல.

அவள் குடும்ப விடுமுறை ஒன்றின் போது தனக்கு சுடத் தெரியும் என்பதை வெளிப்படுத்தி இருந்தாள். ஒரு உரையாடலின்போது,'' இல்ல... இல்ல... அங்கிள், நான் யாரையும் கொல்வேன். பெற்றார் என்றாலும் சரி'' என்று அவள் கூறி இருந்தாள்.

- கா.திகிலன் -

# பிறவியில் இருந்த இரண்டுவாய்களை ஒரு வாயாக்கி சாதனை

**தமிழ்நாடு தேனீ** மாவட்டத்திலுள்ள ஒரு விவசாயக்குடும்பதைச் சேர்ந்த 12 வயதுடைய சிறுமி ஒருத்திக்கு பிறவியிலேயே இரண்டு வாய்கள் இருந்தன.




இரண்டாவது வாய் மேல் உதடு, கீழ் உதடு மற்றும் 7 பற்கள் கொண்டதாகவும், உமிழ் நீர்ச்சுரப்பி கொண்ட சதைச்சுவர்கள் உடையதாகவும் மேலும் 1 செ.மீ நீளமுள்ள சிறிய நாக்கு உடையதாகவும் காணப்பட்டது.

பிறவியிலேயே உள்ள இப்பிரச்சினைக்காக இவரது குடும்பத்தினர் இவரைப் பல் வேறு மருத்துவ மனைகளுக்கும் கூட்டிச் சென்று சிகிச்சை அளித்தனர்

இவ்வாறுஇவருக்கு இருப்பதால் இவருடைய பேச்சு துல்லியமாக இருக்கவில்லை. மேலும் பிறர் எதிரில் நின்று பேசுவதற்கும் பயந்து பேசுவதையும் தவிர்த்தார். தேனியிலுள்ள ஒரு மருத்துவரின் பரிந்துரைப்படி மீனாட்சி மிஷன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதை இப்படியே விட்டு விட்டால் இரண்டாவது வாயின் உள்பகுதியில் சதைகள் வளர்ந்து தொண்டைப் பகுதியை அமுக்கி மூச்சுத் திணறலை ஏற்படுத்தும். இதனால் நோயாளியின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்த மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை செய்வதென முடிவு செய்தனர்.

நோயாளி ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் அறுவைச் சிகிச்சைக்கு போதிய பணம் இல்லை என்பது மருத்துவமனையின் நிறுபுணரான டாக்டரிடம் எடுத்துரைக்கப்பட்டது. இந்த ஏழைச் சிறுமிக்கு இலவசமாக அறுவைச் சிகிச்சை செய்ய டாக்டர்களுக்கு நிறுவுணர் அனுமதித்தார்.

அதன்பின்னர் இச் சிறுமிக்கு பல் வைத்திய நிபுணர்கள் குழு சுமார் 4 மணி நேரம் அறுவைச் சிகிச்சை செய்து இரண்டாவது வாயை அப்புறப்படுத்தினர். பின்னர் முகச் சீரமைப்புசெய்து முகத்தையும் சீராக்கினர். தற்சமயம் இச்சிறுமி குணமாகி நல்ல நிலையில் உள்ளார்.

பேச்சு தெளிவாகவும், துல்லியமான உச்சரிப்புடனும் இருக்கிறது என்பதை உணர்ந்த குடும்பத்தினர் பெருமிதம் அடைந்தனர். இவ்வரிய சிகிச்சையை தமிழகத்தி யாரும் இதுவரை செய்ததில்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர்.



## ‘சுடர் ஒளி’ வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

# வாயில் புண் வருவது வைட்டமின் குறைபாடா?

கேள்வி:—பெண். வயது 28. திருமண மாகி 5 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் குழந்தை பெறும்பாக்கியம் கிட்டவில்லை. பல மருத்துவர்களிடம் காட்டினோம். பல பரி சோதனைகள் செய்தோம். எனக்கோ, என் கணவருக்கோ எதுவித குறைகளும் இல்லை என்று மருத்துவர்கள் சொல்கின்றார்கள். Test Tube Baby முறையில் குழந்தை பெற்றெடுக்கலாம் என்று ஆலோசனை தந்தார்கள். Test Tube முறையில் குழந்தை பெறுவது எப்படி?

பதில்:— டெஸ்ட் டியூப் பேபி என்றால் — பரிசோதனைக்குழாய்க்குள் குழந்தையை வளர்த்தெடுப்பது என்பதில்லை. சாதாரண மான முறையில் கருத்தரிக்க முடியாதவர்களுக்கு — மருத்துவ உதவியுடன் கருத்தரிக்கும் முறை இது. பெண்ணுக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு முட்டை சூலகத்திலிருந்து வெளியேறும். ஆனால், செயற்கை முறைக் கருத்தரிப்பு எனப்படும் IVF IN VITRO FERTILISATION என்ற முறைக்கு குறைந்தது 10 முட்டைகள் தேவை என்பதால் — ஆரம்பத்தில் இந்த சிகிச்சைக்கு வரும் பெண்ணுக்கு ஹார்மோன் ஊசி மருந்துகள் ஏற்றி பல முட்டைகள் உருவாக வசதி செய்யப்படும். முட்டைவெளிவரக்கூடிய காலப்பகுதியில் CHORIONIC GONADOTROPHIN ஹார்மோனைப் பெறுவதன் மூலம் — இம் முட்டைகள் முற்றாக வெளிவர ஆயத்தமாகும். இவ் வேளையில் — சிறுசத்திர சிகிச்சை மூலம் இம் முட்டைகளை அகற்றி — கணவனின் விந்தணுக்களையும் சேர்த்து INCUBATION அறையில் வைத்து அடைகாக்கப்படும். முட்டை விந்தணுவினால் சினைப்பட்டு—3 நாளில் இம் முட்டை பெண்ணின் கருப்பையில் வைக்கப்படும். இந்த முறையின் வெற்றியை அதிகரிக்க — 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு இரண்டு சினைப்படுத்தப்பட்ட முட்டைகளும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்று முட்டைகளும் கருப்பையில் வைக்கப்படும். அதன்போது மற்றக் கர்ப்பிணி தாய்மார்கள் போல் இவர்களும் கவனிக்கப்பட்டு 280 நாட்களில் குழந்தையைப் பெறுவர். இம்முறையில் பெறும் குழந்தையைத்தான் டெஸ்ட் ரியூப் குழந்தை என்பார்கள். சினைப்படுத்த முட்டை கருவாகஉருவாகும்வாய்ப்பை அதிகரிக்க இரு அல்லது மூன்று முட்டைகளை கருப்பையில் வைப்பதனால் இம் முறையில் சில வேளைகளில் ஒரு சூலில் இரட்டை அல்லது மூன்று குழந்தைகள் வளரவும் வாய்ப்பு உண்டு. முட்டை சினைப்படுத்தப்பட்டு முதல் மூன்று நாட்களும் பரிசோதனைசாலையில் கரு இருப்பதனால் பரிசோதனைக்குழாய் குழந்தை என்று இக்குழந்தைகளை அழைப்பதுண்டு.



**கேள்வி:— வயது 18. பெண். எனக்கு அடிக்கடி வாய்க்குள் ஓரிரு புண்கள் வருகிறன்றன. வந்தால் தாங்கொணாத வலி. ஒரு வாரத்தில் புண்கள் மறைந்துவிடும். அந்த ஒருவாரமும் நீர்ப்ப தார்த்தங்கள் தவிர எதுவுமே சாப்பிட முடியாது. வைட்டமின் குறைவு என்று B complex மாத்திரைகள் எடுக்கச் சொன்னார்கள். தொடர்ந்து எடுத்து வருகிறேன். ஆனால், புண்கள் அடிக்கடி வந்து கொண்டுதான் இருக்கின்றன. நிவாரணம் தருக.**

பதில்:—உங்களுக்கு வந்திருக்கும் வாய்ப் புண்ணுக்கு APTHOUS ULCERS என்று மருத்துவர்கள் கூறுவார்கள். அநேகமாக வாலிபப் பருவத்தினர்தான் இந்த நோயால் அவதிப்படுவார்கள். இதற்குக் காரணம் என்ன என்று இன்னும் தெரியவில்லை. ஆனால், புண்கள் ஏற்பட்ட பின்னர் பக்ரீறியாதொற்று அதன் மேல் ஏற்படுவதுண்டு. வயிற்றில் சமிபாடு சம்பந்தமான நோய்கள், இரும்பு, வைட்டமின், போலிக் அசிட் போன்ற உயிர்ச்சத்து குறைபாடுகள் என்பவற்றால் இவை ஏற்படுவதும் உண்டு. பெண்கள் மாதவிலக்குக்குக் கிட்டிய நாட்களில் இந்த புண்களால் பாதிக்கப்படுவதும் உண்டு. பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களிடையே மன நெருக்க(STRESS) சூழ்நிலையால், இந்த வாய்ப் புண்கள் ஏற்படுவதும் உண்டு. வினாகிரி சேர்த்த உணவு வகைகள், கறுவாப்பட்டை, கராம்பு, சாதிக்காய், ஏலரிசி போன்ற வாசனைத்திரவியங்கள் சேர்த்துச் சமைக்கப்பட்ட உணவு வகைகள் அஜினமோட்டோ என்ற வாசனைப் பொருட்கள் சேர்க்கும் சீன உணவு வகைகள் சிலருக்கு வாய்ப்புண்களை உருவாக்கும். மேற்கூறிய காரணிகள் உமது நோய்க்கு காரணமாக இருக்கின்றதா என்பதை அறிந்து அவற்றை தவிர்த்து பாருங்கள். சாதாரணமாக வாய்ப்புண் வந்தால் — ஒரு கிழமை தொட்டு இரண்டு கிழமை வரை மாறாமல் இருக்கும். இதற்கென்று மருந்துகள் இல்லை. தானாகவே குணமாகி விடும் தன்மை இந்த வாய்ப்புண்களுக்கு உண்டு என்றாலும் இதனால் பாதிக்கப்படும் காலங்களில்— வைட்டமின் B, C மாத்திரைகள், METRONIDAZOLE மாத்திரைகள் மருத்துவர்களால் கொடுக்கப்படுவதுண்டு. அஸ்பிரினை நீரில் கரைத்து வாய் கொப்பளித்தால் புண்களின் வலி குறையும்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராச்சி மாவத்தை
> கொழும்பு – 14

**கேள்வி:— ஆண். வயது.28. திருமணமாகவில்லை. ஒருசில மாதங்களுக்கு முன் ஒரு பெண்ணுடன் உறவு கொண்டதில் எனது ஆண் உறுப்பிலிருந்து சீழ் வடிந்தது. எனது மருத்துவர் கொனாரியா நோய் என்று பரிசோதித்துக் கண்டறிந்து மருந்து தந்தார். ஒரு வாரத்தில் சீழ் குறைந்துவிட்டது. பரிசோதித்துப்பார்த்ததில் கொனொரியா கிரிமிகள் இல்லை என்று தெரிய வந்தது. எனினும், காலையில் எழுந்ததும் உறுப்பிலிருந்து சீழ் வருகிறது. டாக்டர்பயப்பட வேண்டியதில்லை. காலகெதியில் சுகமாகிவிடும் என்கிறார். ஒரு மாதமாகியும் குணம் ஆகவில்லை. பயமாக இருக்கிறது. பரிகாரம் கூறவும்.**

பதில்:— உங்களுக்கு ஏற்பட்டிருப்பது NON GONOCOLOCCAL என்ற கொனொரியா அல்லாத சிறு நீர்க்குழாய் அழற்சி. கொனொரியாநோய் குணமான பின்னர் சிறு நீர் குழாய் பாதை அழற்சியுற்று கசிந்து கொண்டிருக்கும். அதன் மேல் பற்றீரியா மற்றும், பூசண தொற்றுக்கள் தொற்றிக்கொண்டு— அழற்சியை அதிகரிக்கும். இதனால்சீழ் மாதிரியான திரவம் வடிவதும் முற்றாக நிற்காது. மற்றும் வேறு பாலியல் தொற்றுக்கள் ஆண்களின் புரஸ்ரேற் சுரப்பிகளில் தொற்றுவதால் அச்சுரப்பிகள் அழற்சியுற்று சீழ்வடிய நேரிடும். நீங்கள் உடனடியாக ஒரு UROLOGIST ஐ சந்தித்து ஆலோசனை பெறவும்.

# ராசி பலன்

**பொ. சந்திரன்**
**இவ்வார 'ராசிபலன்' 03-05-2004 — 09-05-2004**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**
ராசிநாதன் செவ்வாய் மூன்றில் இருப்பது நல்லது. ஆனால் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்பல்ல. செவ்வாய், புதன் பரிவர்த்தனம் நல்ல பலனைச் செய்யும். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு.(2,7) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். தொழில் கிரகம் சனி மூன்றில் இருப்பது சிறப்பானது. தொழிற் துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். ராசியில் ராகுவும் 7இல் கேதுவும் இருப்பது நல்லதல்ல. மன அமைதி பாதிக்கும். தேவையில்லாத பிரச்சினைகள் வீடு தேடி வரும். இருப்பினும் குரு நல்ல நிலையில் இருப்பதால் ஆறுதல் உண்டு. நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**
ராசிக்குரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. ஆனால் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்பில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 12இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தருவதாக இருக்காது. நாலுக்குரிய சூரியன் 12இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழில் கிரகம் சனி இரண்டில் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். குரு சுகம் குறைவு. ராசிநாதனுடன் சனி சேருவது நல்லதல்ல. அவதானம் தேவை.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**
ராசிக்குரியதும் நாலுக்குரியதுமான புதன் 12இல் இருப்பது நல்லது. ஆனால் கேதுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பக்க உதவிகள்கிடைக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். (6,11) உரிய செவ்வாய் ராசியில் அதாவது செவ்வாய் புதன் பரிவர்த்தனம் நல்ல பலனைச் செய்யும். செவ்வாய் பூமி காரகனானபடியால் பூமியில் லாபம் உண்டு. (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழிற்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. ராசியில் சனி இருப்பதால் மன அமைதி பாதிக்கலாம். அவசர புத்தியால் வர வேண்டிய நன்மையான பலன் தாமதமாகலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**
ராசிக்குரிய சந்திரன் மகரம் முதல் மீனம் வரை அதாவது (7,8,9) ஏழு, எட்டு, ஒன்பதாம் வீடுகளைக்கடந்து செல்வது 7,9 நல்ல பலனையும் 8 இல் கூடாத பலனையும் செய்யும். வார மத்திய பகுதியில் நன்மை இருக்காது. இரண்டுக்குரிய சூரியன் 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 12இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். இருப்பினும் குரு இரண்டில் இருப்பதால் பலனில் மாறுதல் ஏற்பட இடமுண்டு. 10க்குரிய செவ்வாய் 12இல் இருந்தாலும் 10ஆம் வீடு பலம் பெறுவதால் தொழிற்துறை முன்னேறும். குரு சுகம் இருப்பதால் நல்ல பலனைத் தரும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**
ராசிக்குரிய சூரியன் 9இல் இருப்பது விசேஷம். அங்கு புதன் இருப்பதும் நல்லது. ராகு இருப்பது கூடாது. சூரியன் தன் சொந்த நட்சத்திரமான கார்த்திகையில் இருப்பது விசேஷம். வார மத்தியில் பத்தாம் வீட்டுக்கு மாறுவது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய புதன் 9இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரம் நல்லாயிருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (4,9) உரிய செவ்வாய் 11இல் இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பத்துக்குரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் தொழிற் துறை முன்னேறும். ராசியில் குரு இருப்பது நல்லதல்ல.

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | புதன்<br>சூரியன்<br>ராகு | | செவ்வாய்<br>சுக்கிரன்<br>சனி |
| | செவ்வாய் திருவாதிரை ராகு<br>சுக்கிரன் திருவாதிரை ராகு<br>புதன் அச்சுவினி கேது<br>சூரியன் கார்த்திகை சூரியன்<br>குரு பூரம் சுக்கிரன்<br>சனி திருவாதிரை ராகு | | |
| | | | குரு |
| | | கேது | |

சந்திரன் மகரம்முதல் மீனம்வரை

சூரியன் மேடம் முதல் இடபம் வரை

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**
(1,10) உரிய புதன் 8இல் சூரியனோடு இருப்பது நல்லது. ராகு அங்கு இருப்பது நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். புதன் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் ஒரு பின்னடைவே. (2,9) உரிய சுக்கிரன் 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,7) உரிய குரு 12இல் இருப்பது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். 10இல் சுக்கிரன் செவ்வாய் சனி இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். 4ஆம், 7ஆம் வீடுகளை சனி பார்ப்பது நல்லதல்ல. குரு மறைவதும் நல்லதல்ல. அவதானம் வேண்டும். ராசிநாதன் புதன் செவ்வாயோடு பரிவர்த்தனம் அடைவது நல்லது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**
ராசிநாதன் சுக்கிரன் 9இல் இருப்பது சிறப்பானது. ஆனால் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பக்க உதவிகள் கிடைக்கும். (2,7) உரிய செவ்வாய் 9இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். குரு 11இல் இருப்பது நல்ல பலனைக் கொடுத்தாலும் கேது ராசியிலும் 7இல் ராகு இருப்பதும் நல்லதல்ல. நல்ல பலனைத் தாமதப்படுத்தக்கூடும்.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**
ராசிக்குரிய செவ்வாய் 8இல் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். (2,5) உரிய குரு 10இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கு நல்லதல்ல. (7,12) உரிய சுக்கிரன் 8இல் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 10க்குரிய சூரியன் 6இல் இருந்தாலும் 10இல் குரு இருப்பதால்தொழிற்துறை முன்னேறும். ராசிநாதன் செவ்வாய் சுக்கிரனோடு 9இல் இருப்பதால் எக் குறையையும் தீர்க்கும் ஆற்றல் உண்டு.


**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**
(1,4) உரிய குரு 9இல் இருப்பது மிகவும் நல்ல பலனைக் கொடுக்கும். மேலும் சுக்கிரனின்நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். (2,3) உரிய சனி 7இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். இளைய சகோதரம் உதவி செய்யும். (7,10) உரிய புதன் 5 இல் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. தொழிற்துறை முன்னேறும். 7இல் சனி இருப்பது நல்லதல்ல. குடும்பத்தில் அமைதி இருக்கவிடாது. 7இல் சுக்கிரன் இருப்பதால் சனியின் தாக்கம் குறையலாம். 10இல் குரு இருப்பதால் எந்த நிலைமையையும் சமாளிக்கும் ஆற்றல் இருக்கும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,**
ராசிநாதன் சனி 6இல் இருப்பது நல்லது. ஆனால் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. மேலும் அங்கு சுக்கிரன் இருப்பது சிறப்பானது. செவ்வாய் அங்கு இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இரண்டாம் அதிபத்தியமும் சனிக்கே உரியதால் பணப்பற்றாக்குறை இருக்கும். 4க்குரிய செவ்வாய் 6இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும். திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் குரு மறைவதால் நல்ல பலனைப் பாதிக்கலாம். 10க்குரிய சுக்கிரன் 6இல் மறைவதால் தொழிற்துறையில் பின்னடைவு வர வாய்ப்புள்ளது.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**
ராசிநாதன் சனி 5இல் இருப்பது நல்லதல்ல. ஆனால் சந்திரன் இருப்பது நல்லது. செவ்வாய் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். (2,11) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரம் நல்லாயிருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (4,9) உரிய சுக்கிரன் 5இல் இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம்தரும். 7க்குரிய சூரியன் மூன்றில் இருப்பினும் 7இல் குரு இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய செவ்வாய் 5இல் இருப்பது மத்திம பலன் தான். அங்கு சுக்கிரன் இருப்பது சிறப்பு. சனி இருப்பது கூடாது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**
(1,10) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. இருப்பினும் சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,9) உரிய செவ்வாய் 4இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. (4,7) உரிய புதன் இரண்டில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் குரு மறைவது நல்லதல்ல. 10க்குரிய குரு மறைவதாலும் 10ஆம் வீட்டை சனி, செவ்வாய், சந்திரன் ஆகிய கிரகங்கள் பார்ப்பதாலும் தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்கும். ராசியை சனி பார்ப்பது தாமத குணத்தையும் எதிலும் தடையையும் ஏற்படுத்தும்.

# இலங்கையில் படமான 'ஒருமுறை சொல்லிவிடு'



நகைச்சுவை நடிகர் எஸ்.எஸ்.சந்திரன் எம்.பி மகன் ரோஹித் கதாநாயகனாக நடிக்கும் 'ஒரு முறை சொல்லிவிடு' திரைப்படப்பிடிப்பு, ஏபி இலங்கை நெய்னார் தலைமையில், இலங்கையில் கொழும்புத் துறைமுகம், தலைநகர், நுவரெலியா, பின்னவெல, கண்டி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

கதாநாயகியாக ஹைதராபாத் ஜனப்பிரியா, ராதாரவி, எம்.எல்.ஏ.வடிவேல், எஸ்.எஸ். சந்திரன், வெண்ணிற ஆடை மூர்த்தி, யுகேந்திரன் ஆகியோர் இதில் நடித்துள்ளனர். கதை – வசனம் எழுதி இயக்குனர் பொறுப்பை ஜவஹார் ஏற்றுள்ளார். விஜய், தாமரை, சினேகன் பிறைசூடன் பாடல் எழுதியுள்ளனர். பரத்வாஜ் இசையமைத்துள்ளார்.

தர்மயுத்தம் மீண்டும் கோகிலா, நியாயம், இளமை போன்ற பல படங்களைத் தயாரித்த ஜாக்பாட் சீனிவாசகன், இப்படத்தை தயாரிக்கிறார். கி.ராஜ், என்.ராமு இணைத்தயாரிப்பாளர்கள் நிர்வாகம் பால்ராஜ், கெமரா ராஜாராஜன், நடன மாஸ்டர் சிவசங்கரன் இலங்கை நடனக் குழுவினரும் நடனமாடினார்கள். இலங்கையின் இயற்கை வளத்தை இந்திய படப்பிடிப்பு குழுவினர் மிகவும் பாராட்டினார்கள். இலங்கை மக்களின் அன்பிற்கு நன்றி தெரிவித்தனர்.

# தேசிய ரீதியில் கலைஞர்களை ஒன்றிணைக்க வழி பிறக்குமா?

தமிழ் கலைஞர்களுக்குள்ள பல்வேறுபட்ட குறைபாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு, தேசிய ரீதியாக செயற்படக் கூடிய அமைப்பு ஒன்று இல்லை என்பது அவர்களது பெரு ஆதங்கமாகும்.

கடந்த காலங்களில் இந்த நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பல அமைப்புகள் சில காலச் செயற்பாடுகளுடன் மறைந்து போய் விட்டன.

முக்கியஸ்தர்கள் பலர் அவ்வப்போது இதற்கான ஆக்க முயற்சிகளை மேற்கொண்ட போதும், ஈற்றில் அவை செயலிழந்ததே உண்மை.

இந்த கடந்தகால நிலைப்பாடுகள் கலைஞர்களது எதிர்பார்ப்புகளை வென்றெடுப்பதற்கு பெரும் தடையாக இருந்துள்ளன.

பல அரசியல் பிரமுகர்களும், கலைஞர்கள் மீது அன்பு கொண்ட ஆர்வலர்களும் இவர்களது முயற்சிகளுக்கு ஆரவளித்து வந்த போதும் - கலைஞர்களிடம் நிலவிய ஒற்றுமை இன்மையால் இவை கைகூடாது போயின.

தமிழ் கலைத்துறைச் செயற்பாடுகளில் இளையவர்களை இணைத்துக் கொண்டு அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கு வழி செய்வதற்கான அமைப்பு ஒன்று தமிழ் கலைஞர்களிடம் இல்லாதிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே.

தேசிய ரீதியாக - தமிழ் கலைகளில் ஆர்வமுள்ள இளங்கலைஞர் - அவர்களது திறமைகளை வெளிக்காட்ட அவர்களை பயிற்றுவித்து ஊக்குவிக்கும் நடைமுறைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாகும்.

இந்த எதிர்பார்ப்புகளை வென்றெடுக்க கூடிய அமைப்பின் அவசியம் உருவாக வேண்டும். அப்போது தான் பல கலை இலக்கிய நிகழ்வுகள் நடைபெற வழி ஏற்படும்.

பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதே, இந்த நிலையில் எழுந்துள்ள கேள்வியாகும். தேசிய ரீதியாக இத்தகைய அமைப்பு ஒன்றை உருவாக்குவது மிகச் சிரமத்துக்குரிய ஒன்று என்றாலும், இது உருவாக்கப்பட வேண்டும்.

இதற்கான முயற்சிகளில் இத்துறைகளோடு ஈடுபாடு கொண்டுள்ள முக்கிய பிரமுகர்கள் முன்வர வேண்டும்.

முயற்சிகள் இறக்குமா? எதிர்காலம் முளைக்குமா? என்பது இளங்கலைஞர்களின் எதிர்பார்ப்பாகும். இவர்கள் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?





காரைதீவு சித்தானைக் குட்டி அறநெறிப் பாடசாலையில் ஆன்மீகப் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

அங்கு அறநெறி பாடசாலை மாணவ, மாணவிகள் தீப நடனம் மற்றும் நடனங்களில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். (214)

# இலக்கியத் தொடர் விரிவுரையில் மகாபாரதச் சொற்பொழிவு



கொழும்புக் கம்பன்கழகம் ஆண்டு தோறும் முத்தமிழுக்கும் விழா எடுத்து வருகிறது. கம்ப காவியத்தை இளைய தலைமுறையினர் மத்தியில் பரப்பவும், நம் தமிழ் பாரம்பரிய இசை, நாட்டிய மரபுகளை நிலை நிறுத்தவும், இளையோர்க்கு அக்கலைகளில் ஆர்வமுண்டாக்கவும், இவ்விழாக்கள் மூலம் கம்பன் கழகம் முயற்சித்து வருகிறது. கம்பன் கழகத்தின் இவ்விழாக்களுக்கு, தமிழ் இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருந்து வருகிறது.

பல அன்பர்களின் வேண்டுகோளின்படி, கம்பராமாயணம் தவிர்ந்த மற்றைய பழைய இலக்கியங்களை இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் வகையில், கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கிய விரிவுரைகளைக் கொழும்புக் கம்பன் கழகம் நடத்தி வருகிறது.

இன்று மரபிலக்கியப் பயிற்சியுள்ள அறிஞர் தொகை அருகிவிட்ட நிலையில் மாணவர்களுக்கு மட்டுமன்றி, இளைய தலைமுறையைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும் மரபிலக்கியப் புலமை என்பது, எட்டாக்கனியாக இருந்து வருகிறது. மரபிலக்கியங்களை கற்கும், கேட்கும் வாய்ப்பிழந்து நிற்கும் இவர்களுக்கு, கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் இலக்கியத் தொடர் விரிவுரைகள் பெரும் நன்மை பயந்து நிற்கின்றன.

இவ் இலக்கியத் தொடர் விரிவுரை வரிசையில் 2001 ஆம் ஆண்டு பேராசிரியர் செல்வ. கணபதி 'பெரியபுராணம்' பற்றியும் 2002 ஆம் ஆண்டு பேராசிரியர் சுந்தர மூர்த்தி 'திருக்குறள்' பற்றியும், 2003 ஆண்டு கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் 'சிலப்பதிகாரம்' பற்றியும் விரிவுரைகளை நடத்தினர். இவ்விரிவுரைகளில் பெருமளவிலான அறிஞர்களும், இளைஞர்களும் கலந்து பயனெய்தினர். இவ்வாண்டுக்கான கொழும்பு கம்பன் கழகத்தின் இலக்கியத் தொடர் விரிவுரை மே முதலாம் திகதி சனிக்கிழமை முதல் எட்டாந்திகதி சனிக்கிழமை வரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்க மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு மகாபாரத இலக்கியம் பற்றிய தொடர் விரிவுரைகள் நடத்தப்படவுள்ளன.

தமிழக பேராசிரியை ஸ்ரீமதி இரா.ருக்மணி இத் தொடர் விரிவுரைகளை நடத்தவுள்ளார். இவர் கடந்த பல தசாப்தங்களாக மரபிலக்கியத் தொடர் விரிவுரைகளைத் தமிழ் நாட்டிலும், பிற நாடுகளிலும் நிகழ்த்தி வருபவர். மரபிலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியும், சிறந்த பேச்சு வன்மையும் கொண்டவர். தமிழில் ஐந்து எம்.ஏ பட்டங்களைப் பெற்றவர். இவர் 'நதிக்கரை நாணல்', 'செம்புலப் பெயல்நீர்', 'புள்ளி மாறிய கோலம்', 'வெளிச்சப் பொட்டுகள்', 'கவிதை அரங்கேறியது', 'வாழ்க்கை கணக்கின் வரவு செலவுகள்', 'தவறான இசைக்குச் சரியான பாடல்', 'புதிய பூபாளம்' எனுந் தலைப்புக்களில் தொடர்ந்து உரையாற்ற உள்ளார்.

இத் தொடர் விரிவுரைகள் தினமும் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 8.00 மணி வரை நிகழ்த்தப் படவுள்ளன.

கொழும்பு கம்பன் கழகப் பெருந் தலைவர் உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வழமை போல முதல் நாள் உரையினைத் தொடக்கி வைக்கிறார். ஈழத்தின் பிரபல பெண்மணிகள் தினமும் பங்கேற்று மங்கள விளக்கேற்றியும், தலைமையுரையாற்றியும் நிகழ்ச்சியைச் சிறப்பிக்கின்றனர். இலக்கிய இரசிகர்களுக்குப் பெருவிருந்தாக இத் தொடர் விரிவுரை அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "நான் நல்ல சமையல் காரன்" சொந்த விஷயம் பேசுகிறார் சச்சின்

ஒரு கிரிக்கெட் வீரரைச் சந்தித்தால்... கிரிக்கெட் மட்டும் தான் பேச வேண்டுமா?

கிரிக்கெட் தவிரவும், நிறைய விஷயங்கள் இருக்கலாம் பேசுவதற்கு. சச்சின் டெண்டுல்கரிடம் பேசினால்... அப்படி நிறைய விஷயங்கள் மனம் திறக்கிறார். கடந்த வாரம் 31 வது

**விளையாட்டு செய்திகள்!**

பிறந்த நாள் கொண்டாடிய சச்சின், இ.எஸ்.பி.என். – ஸ்டார் போர்ட்ஸ் தொலைக்காட்சிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் இருந்து சில விஷயங்கள்....

**• 31 ஆவது பிறந்த நாள்.... இதில் ஏறுத்தாழ 15 வருடங்கள் கிரிக்கெட். உடல் தகுதியை எப்படி கட்டிக் காக்கின்றீர்கள்.**

எந்த விளையாட்டாக இருந்தாலும்... முதலாம் இடத்தைப் பிடிக்க, உடல் தகுதி மிக முக்கியம். இன்றும் ஒரே சீராக உடல் தகுதியை கட்டிக்காப்பதற்கு ஆட்ரியன் லீ ரக்ஸ், கிரெக் ஆலன் கிங், ஆன்ட்ரூ லீபஸ் (அணியின் முன்னாள், இன்னாள் உடல் தகுதி நிபுணர்கள்) இவர்கள் உதவிதான் முக்கிய காரணம். அதுவும், லீபஸ் இல்லாத வாழ்க்கையை நினைத்தும் பார்க்க முடியாது. 15 ஆண்டு காலம் கிரிக்கெட் விளையாடினால்.. உடல் எந்த அளவுக்கு பாதிக்கப்படும் என்பது தெரிந்ததுதானே? உடல் தகுதியை இன்னும் அதிகரிப்பது கடினமான விஷயம். ஆனால், கடின பயிற்சிகள் மூலம் கட்டுக்குள் வைத்திருக்கிறேன்.

**• இம்முறை உங்களுக்கு கிடைத்த மிகச் சிறந்த பிறந்த நாள் பரிசு?**

எனது மகள் சாரா கொடுத்த பிறந்த நாள் வாழ்த்து அட்டை. எனக்காக, அவளே தயாரித்திருக்கிறாள். இந்தப் பரிசை மிகப் பெரிய பொக்கிஷமாக நினைக்கிறேன். என்னுடன் எப்போதும் இருக்கும் விஷயங்களில் இந்த வாழ்த்து அட்டையும் முக்கிய இடம் பெறும். விலை மதிப்பில்லாத பரிசு இது.

**• ஒருகிரிக்கெட் வீரராக உங்களைப் பற்றி உலகத்துக்கே தெரியும். வீட்டில் பொறுப்புள்ள அப்பாவாக....?**

எனது பெற்றோர் எனக்கு என்ன சொல்லிக் கொடுத்தார்களோ.. எனது பெற்றோரிடம் இருந்து நான் என்ன கற்றுக் கொண்டேனோ, அவற்றை எனது குழந்தைகளுக்கு அப்படியே கற்றுத் தருகிறேன். மூத்த பெண் சாரா ரொம்ப அமைதியானவள். ஒழுக்கமாக



வளர்கிறாள். எப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று அவளுக்கு இப்போதே நன்றாகத் தெரிகிறது. இதற்கு முக்கிய காரணம் எனது மனைவி அஞ்சலி. குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்கள் கற்றுத் தந்து உருவாக்குவது அவர் தான். ஆகையால், குழந்தைகளிடம் நான் கண்டிப்புக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லை.

**• வீட்டில் இருக்கும் போது....?**

எனக்கு பிடித்த மற்றொரு விஷயம் சமையல். ஓய்வாக இருக்கும் நேரங்களில் என்னை நீங்கள் சமையல் அறையில் பார்க்கலாம். சமையல், என்னை ரிலாக்ஸ் செய்து கொள்ளவும் உதவுகிறது. மனதுக்கு என்ன பிடிக்கிறதோ. அதை சமைப்பேன், கவலைப் பட வேண்டாம், ருசியாகவே இருக்கும். அஞ்சலியிடம் கேட்டுப் பாருங்கள். வாழ்க்கையில் அவர் சாப்பிட்ட மிக ருசியான மீன் குழம்பு .... நான் சமைத்துக் கொடுத்தது தான்.

**• சாதனைகளைப் பார்த்து ரசிக்க அப்பா இல்லையே என்ற வெற்றிடத்தை உணர்கிறீர்களா?**

அப்பா பற்றி நினைக்காமல் என்னால் இருக்கவே முடியாது. அவர் ஞாபகம் எப்போது என்னுடன் இருக்கும். என் வாழ்க்கை இந்த அளவுக்கு உயர்ந்ததில், அவரது பங்கு மிகப் பெரியது. எந்த இடத்தில் நான் இருந்தாலும், அவர் பற்றிய நினைவுகள் வந்து விட்டால் எனது 'மூட்' உடனடியாக மாறிவிடும். ஆனால், எதுவும் நம் கைகளில் இல்லை தானே? நடந்து முடிந்த விஷயங்களை இனி யாரும் மாற்ற முடியாது. அவரது இழப்பை நான் மட்டுமல்ல... எங்கள் குடும்பத்தினராலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சச்சினைப் பார்த்துவிட்டு, கிரிக்கெட்பற்றி பேசாமல் திரும்பினால்.... பேட்டி முழுமை அடையாதே ஆகையால்....

***15 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள்?**

நிறைய இருக்கின்றன. குறிப்பிட்டுச்சொல்ல வேண்டுமானால்.... உலக கோப்பைப் போட்டியில் இறுதி வரை போனது ஒட்டு மொத்த அணிக்கும் மகிழ்ச்சியான விஷயம். தனிப்பட்ட முறையில் சொல்ல வேண்டுமானால், 1998 ஷார்ஜா போட்டி இறுதி ஆட்டத்தில் ஆவுஸ்திரேலியாவை வீழ்த்தியது (அந்தப் போட்டியில் போப்பை ஜெயிக்க, சச்சின் அடித்த சதம் முக்கிய காரணம்). இப்போது பாகிஸ்தானில் கிடைத்த வெற்றி. டெஸ்ட் தொடரின் கடைசிப் போட்டியில் கடைசி விக்கெட் டேனிஷ் கனேரியா எனது பந்தை மேலே தூக்கி அடிக்கிறார். அதற்கப்புறம் என்ன நடந்தது என்றே தெரியாது. கச்சை விட்டு விடாதீர்கள் என்று கத்தினேன். மற்றப்படி, யார் கச் பிடித்தார்கள் (கச் பிடித்தவர், தலைவர் கங்குலி) என்று கூட தெரியாது. வெற்றி மகிழ்ச்சியில், முதல் ஆளாக ஸ்டெம்ப்பை பிடுங்கினேன். வருத்தமான ஒரு விஷயமும் இருக்கிறது. 1997 இல் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான பார்படோஸ் டெஸ்ட் போட்டியில் (அப்போது தலைவர் சச்சின்) எங்கள் வெற்றிக்குத் தேவை வெறும் 120 ரன்கள். மிகக் குறைந்த இலக்கு. ஆனாலும், 37 ரன்களில் தோற்றோம். ஏழாண்டுகளுக்கு முன் நடந்த விஷயம். ஆனால், இப்போது நினைத்தாலும் வருத்தப்பட வைக்கிறது.

# தொடர்ந்தும் முதலிடத்தில் முரளி!

பிரைஸ் வோட்ட கவுஸ் கூப்பர்ஸ் டெஸ்ட் வீரர்களின் தர வரிசையில் மீண்டும் துடுப்பாட்டத்தில் பிரைன் லாராவும், பந்து வீச்சில் முத்தையா முரளிதரனும் முதல் இடங்களைப் பிடித்துள்ளனர்.



பிரைன் லாரா இந்த மாதம் இங்கிலாந்து அணியுடன் டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டத்தில் 400 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் தனது முதல் நிலையைத் தக்க வைத்துக் கொண்டார். பிரைன் லாரா 897 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். துடுப்பாட்டத்தில் 892 புள்ளிகளைப் பெற்று இந்திய அணியின் துணைத் தலைவர் ராகுல் டிராவிட் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். இவர் நடந்து முடிந்த பாகிஸ்தான் அணியுடனான தொடரில் பிரகாசித்ததன் காரணமாக இந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளார்.

பந்து வீச்சில் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தனது முதல் இடத்தை தக்க வைத்துக்கொண்டார். இவர் சமீபத்தில் நடந்து முடிந்த அவுஸ்திரேலிய அணியுடனான தொடரில் சிறப்பாக பிரகாசித்ததன் மூலம் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இவருக்கு மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் தலைவரும் பிரபல வேகப் பந்து வீச்சாளருமான கொட்னி வோல்ஷின் 519 டெஸ்ட் விக்கெட்டுக்கள் உலக சாதனையை முறியடிக்க மேலும் போதும் 7 விக்கெட்டுக்கள் மாத்திரமே தேவைப்படுகின்றன. இதனைத் தற்போது நடைபெற்று வரும் ஸிம்பாவ்வே அணியுடனான டெஸ்ட் தொடரில் முரளிதரன் கைப்பற்றி விடுவார் என உறுதியாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷோன் பொலக் 837 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், பாகிஸ்தான் அணியின்வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் 826 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

முதல் பத்து இடங்களைப் பிடித்த பந்து வீச்சு, துடுப்பாட்ட வீரர்கள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1.பிரைன் லாரா | மேற்கிந்தியத் தீவுகள் | 897 |
| 2.ராகுல் டிராவிட் | இந்தியா | 892 |
| 3.மெத்தியூ ஹெய்டன் | அவுஸ்ரேலியா | 881 |
| 4.ரிக்கி பொன்சிங் | அவுஸ்ரேலியா | 864 |
| 5.ஜெக் கலிஸ் | தென்னாபிரிக்கா | 883 |
| 6.ஹேராஷல் கிப்ஸ் | தென்னாபிரிக்கா | 815 |
| 7.இன்ஸமாம் உல்–ஹக் | பாகிஸ்தான் | 785 |
| 8.சச்சின் டெண்டுல்கர் | இந்தியா | 784 |
| 9.வீரேந்தர் ஷேவாக் | இந்தியா | 782 |
| 10.கிரஹம் ஸ்மித் | தென்னாபிரிக்கா | 759 |

முதல் பத்து இடங்களைப் பெற்ற பந்து வீச்சாளர்களின் விவரம் வருமாறு

| | | |
|---|---|---|
| 1.முத்தையா முரளிதரன் | இலங்கை | 904 |
| 2.ஷோன் பொலக் | தென்னாபிரிக்கா | 837 |
| 3.சொயின் அக்தர் | பாகிஸ்தான் | 826 |
| 4.ஸ்டிபன் ஹார்மிசன் | இங்கிலாந்து | 802 |
| 5.ஷேன் வோர்ன் | அவுஸ்ரேலியா | 777 |
| 6.கிளன் மெக்மெக்ராத் | அவுஸ்ரேலியா | 775 |
| 7.அனில் கும்ளே | இந்தியா | 751 |
| 8.ஜேசன் கிலெஸ்பி | அவுஸ்ரேலியா | 746 |
| 9.மக்காய நிதினி | தென்னாபிரிக்கா | 722 |
| 10.டெரஸ் டப்பி | நியூஸிலாந்து | 673 |

# "விளையாடுவதை விரும்புகிறேன்" - ஸ்டெஃபி

மீண்டும் டெனிஸ் விளையாடப் போவதில்லை எனக் கூறி ரசிகர்களுக்கு ஏமாற்றிமளித்துள்ளார் முன்னாள் பிரபல டென்னிஸ் வீராங்கனையாள ஜெர்மனியின் ஸ்டெஃபி கிராப். தமது இரு குழந்தைகளையும் பார்த்துக் கொள்ள நேரம் தேவை என்றதன் காரணமாக மீண்டும் டெனிஸ் விளையாடப் போவதில்லை என்று ஸ்டெஃபி கிராப் கூறியுள்ளார்.




அமெரிக்காவின் மார்ட்டினா நவ்ரதிலோவாவுக்கு பின், டெனிஸ் அரங்கில் கொடி கட்டிப் பறந்த அழகு தேவதை ஸடெஃபி கிராப், மொத்தம் 22 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கிறார். இவருக்காக முன்னிலை வீராங்கனையாக அப்போது உருவெடுத்த மோனிகா செலலை கத்தியால் குத்துமளவுக்கு ஒரு ரசிகர் போய்விட்டார் என்றால் பாருங்களேன். 1999 – இல் ஆறாவது முறையாக பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை வென்றதும் ஸ்டெஃபி கிராப் ஓய்வு பெற்றார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டைல் மன்னன் அகாஸ்ஸியுடன் காதலில் நனைந்து. 2001ஆம் ஆண்டு ஒக்டோபரில் அவருக்கு கழுத்தையும் நீட்டியுள்ளார் ஸ்டெஃபி கிராப். இருவரது அன்பின் சாட்சியாக தற்போது ஜேடன் என்ற இரு வயது மகனும் ஜாஸ் என்ற ஆறு மாத பெண் குழந்தையும் ஸ்டெஃபிக்கு. அவரது கணவர் அன்ட்டு அகாஸ்ஸியும் சாதாரணமானவர் அல்ல. 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற 5 ஆடவர்களில் ஒருவர்.

அவ்வப்போது டென்னிஸ் விளையாடுவதை விரும்பினாலும், மார்ட்டினா நவரதிலோவாவைப் போல முழுமூச்சாக களமிறங்கப் போவதில்லை என்கிறார் ஸ்டெஃபி. மீண்டும் விளையாட ஆரம்பித்தால், குழந்தைகளிடமிருந்து நீண்ட நேரம் பிரிந்து இருக்க நேரிடும். ஆகவே முழுமூச்சாக களமிறங்கும் திட்டமில்லை என்கிறார். "நான் ஓராண்டாக டெனிஸ் விளையாடவில்லை. கடந்த சில வாரங்களாகத்தான் அங்கும் இங்கும் டெனிஸ் விளையாடி வருகிறேன். ஆனால், விளையாடுவதை இன்னும் விரும்புகிறேன்" என்கிறார்.

கணவர் அகாஸ்ஸியுடன் இணைந்து கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் பங்கேற்கும் திட்டமும் இல்லை. அதுக்கான டெனிஸ் விளையாடி வருகிறேன். ஆனால், விளையாடுவதை இன்னும் விரும்புகிறேன் என்கிறார். கணவர் அகாஸ்ஸியுடன் இணைந்து கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் பங்கேற்கும் திட்டமும் இல்லை. அதுக்கான வாய்ப்பு ரொம்ப குறைவு என்கிறார்.



# இராணுவங்கள் எல்லாம் ஒன்றுதான்

ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் அதிகம் பேசும் நாடு அமெரிக்கா. தன்னிகரற்ற அந்த உலகப் பொலிஸ் சொல்கிறது. தீவிர வாதிகளும் பயங்கர வாதிகளும் பொதுமக்களைத் தாக்குவதும் அவர்கள் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பதும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் என்று.

விடுலைப் புலிகள், தெற்கில் பொதுச் சொத்துக்களைத் தாக்கினார்கள், பொதுமக்களைக் கொன்றார்கள் என்று கூறித்தான் அமெரிக்கா இன்னும் அவர்களைப் பயங்கரவாதிகள் பட்டியலில் வைத்துக் கொண்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராகப் புரிந்த அரச பயங்கரவாதத்தையும் தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்தரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதையும் கூட அமெரிக்கா அவ்வப்போது தனது அறிக்கைகள் மூலம் ஒப்புக்கேனும் மனித உரிமை மீறல்கள் என்று கண்டித்து வந்துள்ளது.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் பார்வையில் – வரையறையில் – இவையெல்லாம் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள். இந்தச் சம்பங்கள் ஏன் நிகழ்கின்றன என்ற பின்புலத்தை ஒதுக்கி வைத்துவிட்டுப் பார்த்தால், தனி மனிதனின் வாழ்வுக்கான உரிமைகளைப் பாதிக்கின்றன என்ற அடிப்படையில் இவை அனைத்தும் மனித உரிமை மீறல்கள்தான். அமெரிக்கா சொல்கிறபடியே நாங்களும் அதனை ஏற்றுக்கொள்வோம்.

பொதுமக்கள் உயிரிழக்கும் வகையில் குண்டுத் தாக்குதல்கள் நடத்துவதும் சொத்து அழிவுகளை ஏற்படுத்துவதும் பயங்கரவாதம், மனித உரிமை மீறல் என்றால், அமெரிக்கா இப்போது ஈராக்கில் என்ன செய்து கொண்டிருக்கிறது?



எங்கிருந்தோ வந்து என் நிம்மதியை ஏன் கெடுக்கிறீர்கள்?
- இடம் பெயர்ந்த பலூஜா நகரச் சிறுவன்

கடந்த ஒரு வருடகாலமாக ஈராக் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது. அங்கு அமெரிக்கர்களை எதிர்த்துப் போர் தொடுக்க ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அரச இராணுவம் கிடையாது. அத்தகைய, நாடுகளுக்கு இடையிலான போர் முடிந்து 13 மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. இப்போது ஈராக்கை அமெரிக்காதான் ஆள்கிறது.

அமெரிக்க ஆக்கிரமித்த பின்னர் ஈராக் ஒருபோதும் அமைதியாக இருந்ததில்லை. அது அமெரிக்கர்கள் விதி. ஆனால், அதற்கான விலையைச் செலுத்துகிறார்கள் ஈராக்கியர்கள். பலூஜாவிலும் பக்தாத்தை அண்டிய நகரங்களிலும் அமெரிக்கர்களுக்கு எதிராக இஸ்லாமியப் போராளிகள் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். இதற்கான அமெரிக்கர்களின் பதிலடியில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண ஈராக்கியர்கள்தான். பலூஜா நகர் சுனி இன முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி. ஈராக் முன்னால் ஆட்சியாளர் சதாமும் சுனி முஸ்லிமே. அதனால் இங்கு சதாமுக்கு ஆதரவும் அமெரிக்கர்களுக்கு எதிர்ப்பும் அடிப்படையிலேயே இருக்கின்றன. அண்மையில் அமெரிக்க ஒப்பந்தக்காரர்கள் நால்வர் கூட இங்கு கண்டு துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.



ஏ.கே. துப்பாக்கியுடன் ஈராக்கில் அமெரிக்கச் சிப்பாய்கள்

எதிர் நடவடிக்கையாக அந்தப் பிராந்தியத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கா தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. அங்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் 2,000 பேர் இருக்கின்றனர் என்கின்றது அமெரிக்கா.

அவர்களுக்கு எதிரான நடவடிக்கை என்று கூறித் தனது போர் விமானங்களையும், ஹெலிகளையும் கொண்டு கடும் தாக்குதலை நடத்துகிறது அமெரிக்கா. குண்டுகளை மழையெனப் பொழியக்கூடிய AC -130 ரக விமானங்களும் அதி நவீன அபாச்சி ஹெலிகளும் தாக்குதலில் பங்கேற்கின்றன. மிகக் கடுமையாகக் குண்டுவீச்சு நடத்தப்படுகின்றது.

இந்த அதி தீவிரத் தாக்குதல்களில் பொதுமக்களின் சேதங்கள் பற்றி அமெரிக்க இராணுவம் கருத்திற் கொண்டதாக தெரியவில்லை. ''இந்த அமெரிக்கர்கள் எமக்கு மேலும் மேலும் துன்பத்தையே தந்தார்கள்.'' என்று தொலைக்காட்சியில் அழுதார் ஈராக்கியப் பெண்மணி ஒருவர்.

சில லட்சம் மக்கள் வாழும் பலூஜா பிரதேசத்தில் 2,000 போராளிகளின் நிலைகளை இலகுவில் கண்டறிவது அமெரிக்காவுக்குச் சாத்தியமற்றது. அதுவும் ஒழுங்காக இல்லாது – நன்கு செம்மைப்படுத்தப்படாது – இயங்கி வரும் கிளர்ச்சியாளர்களுக்கு நிலையான அமைவிடங்களும் இருக்கப் போவதில்லை. இந்நிலையில் அமெரிக்க குண்டு மழையில் உயிரிழக்கப் போபவர்கள் யார்? அழிந்து போகும் சொத்துக்கள் யாருடையவை? அமெரிக்கர்கள் சொல்வது போன்று அல்லாமல் பாதிக்கப்படுவது எப்போதுமே அப்பாவி ஈராக்கியர்கள்தான்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை தமது விமானம் மற்றும் ஹெலிகளின் குண்டுகளின் கீழே இறப்பவர்கள் எல்லோரும் தீவிரவாதிகள்தான். சண்டை பற்றி மேற்கு நாட்டு ஊடகங்கள் கூறும் இறப்புப் புள்ளி விவரங்கள் அப்படித் தான் காட்டுகின்றன.

உண்மையில் அமெரிக்கர்களின் தாக்குதலால் ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிவிட்டார்கள். நூற்றுக்கணக்கான ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். இன்னும் இன்னும் அது வன்முறைகள் அதிகரித்தே செல்கின்றன.

பாதிக்கப்படும் இந்த மக்களுக்கு மனித உரிமைகள் கிடையாதா? அல்லது போர் நடக்கும் இடங்களில் இதெல்லாம் சகஜம் என்பது அமெரிக்காவின் சால்யாப்பா?

அமெரிக்கர்களின் பலூஜா மீதான தாக்குதலை ஐ.நா. செயலாளர் கோபி அனானும் கண்டித்துள்ளார். அங்கு பொதுமக்கள் உயிரிழப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு எதிராக அவரால் இதனைத்தவிர வேறு எதைச் செய்து விட முடியும்?

அனானின் கருத்துக்களால் அமெரிக்கா ஒன்றும் தனது தாக்குதலை நிறுத்திவிடப் போவதில்லை. இலங்கையாக இருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும் சரி எல்லா இராணுவங்களும் ஒரே மாதிரியானவைதான். அவற்றுக்குத் தங்கள் நலன்களே முக்கியம். போரின் போது பொது மக்கள் ஒரு பொருட்டே அல்லர்.

இலங்கை இராணுவமும் தமிழரின் இராணுவமும் செய்தவைகள் மனித உரிமை மீறல்கள் என்றால் ஈராக்கில் அமெரிக்கா செய்வது மட்டுமென்ன மனித உரிமைப் பாதுகாப்பா?

''ஊருக்குத் தான் உபதேசம் உனக்கல்லடி'' என்கிறார்களா அமெரிக்கர்கள்?

எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் புஷ்ஷின் தேர்தல் வெற்றிக்காக பலூஜா நகர மக்களின் உரிமைகள் ஆகுதியாக்கப் படுவது எந்தவகையில் நியாயமானது?

*-பிறேம்-*

## தன் இயல்புத் தடம்......

*(08 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

இறுதி நேரத்தில் அது கை கூடலாம் என்று துளியளவு நம்பிக்கையும் வைத்திருந்தது. ஆனால் சபாநாயகர் தெரிவுக்கான இவற்றின் பச்சைக் கொடி,பச்சைக் கட்சி பக்கம் சாரப் போகிறது என்பதற்கான நிரூபணம் செய்து கொண்ட பின்பு ''தர்ம இராஜ்யம்'' ஸ்தாபிக்க முற்பட்ட பிக்குமார், தம் பக்கம் சார்வார் என்ற எண்ணத்திலும் இருந்தது.

நடுநிலை நிற்கக் கூடும் என்று எதிர்பார்ப்புக்குள்ளாகியிருந்த தமிழ் அரசுக்கட்சி, கட்சியின் கலந்தாலோசனைகளின்படி, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் நிலைப்பாடு என்ற வகையில் சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பில் கலந்து கொள்வது என்று முடிவெடுத்தது.

சபாநாயகரைத் தெரிவதற்கென முன் நிறுத்தப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வேட்பாளரான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.யூ குணசேகரவும், ஐக்கிய தேசிய முன்னணி தலைவர்களுள் ஒருவராகிய டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டாரவும் ஜாதிக ஹெல உறுமயவின் 7 பிக்கு எம்.பிக்களின் வாக்களியா நிலை மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சி உறுப்பினர் ஒருவர் சமூகமளிக்காத நிலை, என்பவற்றின் மத்தியில் தலா 108 வாக்குகளைப் பெற்றனர்.

சபாநாயகர் என்பவர் சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின்பு சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல சம நோக்குடையவர் என்ற பாரம்பரிய எடுகோள் இந்த 13ஆவது நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கான வேட்பாளர் இருவரும் பெற்ற சமமான வாக்குகளால் மட்டுமே மரியாதை பெற்றது.

இதற்கு முன்பு நிகழ்ந்த 12 தெரிவுகளிலும் நிகழாத வரலாற்று பதிவுகள் நிகழ்ந்திருக்கின்றன.

காலையில் கூடிய நாடாளுமன்றம் இரவு 7.30க்கு பின்பும் சபாநாயகர் தெரிவு யுத்தத்தில் பல யுக்திகளைக் கையாண்டது.

1) முதலாவது வாக்குப்பதிவு சமனாக அமைந்தது.
2) இரண்டாவது வாக்குப்பதிவு, நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தினால் முழுமையாக நிராகரிக்கப்பட்டது.
3) மூன்றாவது வாக்குப்பதிவு லொக்குபண்டா 110 வாக்குகளும் டி யூ குணசேகர 109 வாக்குகளும் பெற்ற வகையில் லொக்குபண்டாரவை சபாநாயகர் ஆக்கியது.

இந்த சபாநாயகர் தெரிவின்போது, நாடாளுமன்றத்தினுள் நிகழ்ந்தவை அனைத்தையும் நாடறியும். தொலைக்காட்சிகள் காட்டின. – வானொலிகள் கூறின. பத்திரிகைகள் எழுதின. நாடாளுமன்றத்தினுள்ளே பகட்டாக உடையுடுத்து வந்து, பண்பற்ற வகையில் நடந்து கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறிவிலித்தனமான அநாகரிகங்கள் பச்சையாக வெளிக்காட்டப்பட்டன.

### நாடாளுமன்றத்துக்குள் பிக்குகளுக்கு நிகழ்ந்த அவமானம்

தூய வெள்ளைத்துணி விரிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து எவர் முன்பும் எழுந்திராது ஆசியும், அறிவுரையும் வழங்கும் அருகதையுடைய பௌத்த பிக்குமார் நாட்டின் அதி உயர் பீடமான நாடாளுமன்றத்தின் உள்ளேயே தம் ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று உரையாற்ற முற்பட்ட போதும் நாகரிகமற்றுத்தூஷிக்கப்பட்டும், பண்பற்ற வார்த்தைப் பிரயோகங்களினால் கண்டிக்கப்பட்டதுமல்லாமல் , சிங்களவர்களும், பௌத்தர்களுமான நாடாளுமன்ற உறுப்பிளர்களே பத்திரங்களையும், புத்தகங்களையும் பௌத்த மத குருமார்களை நோக்கி வீசி எறிந்தமையும் முழு நாடுமே கண்டது.

கண்ணியமான அரசியலையும், மத கலாசாரங்களின் உயர் விழுமியங்களையும், மரியாதைகளையும் அரண் என்று நின்று காப்பாற்ற வேண்டிய நாடாளுமன்றத்தை அதன் அதி உயர் ஸ்தானத்தில் இருந்து அப்புறமாக்கி மற்றொரு வடிவில் காட்டியது இந்த 13ஆவது நாடாளுமன்றமே.

இவை அனைத்துக்கும் மேலாக, சபாநாயகர் தெரிவின் பின்பு நாடாளுமன்றத்தின் உள்ளே காலாகாலம் பேணப்பட்டு வந்த மற்றையதொரு மரபும் இந்த நாடாளுமன்ற முதல் அமர்வில் புறக்கணிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர், தனது தெரிவின் பின்பு கட்சிகளுக்கு அப்பாற்பட்டவராகிறார். கட்சி வலைக்குள் இருந்து வெளிவருகிறார் என்ற வகையில் ஆளும் அணி, எதிர் அணி எனும் இரு அணிகளையும் சேர்ந்த உறுப்பினர்களின் மரியாதை காட்டும் அழைப்புடன் ஆசனம் சரைக்கும் கொண்டு செல்லப்படுதல் மரபானது.

ஆனால், இம் முறை இந்தச் சபாநாயகர் தன் பெயரை முன் மொழிந்த ஜோசப் மைக்கல் பெரேராவினாலும், வழிமொழிந்த ரவூப் ஹக்கீமினாலும் ஆசனம் வரைக்கும் அழைத்துச் செல்லப்பட்டமையைக் காண முடிந்தது. அப்படியாயின் சபாநாயகர் தன் தெரிவின் பின்பும் '' ஒரு கட்சிக்கட்டில்'' இருந்திருக்கவில்லையா? அவரை எதிர்த்த அணி ''அவர்சமமானவர்'' என்று இன்னும் அங்கீகரிக்கவில்லையா?

இந்த 13ஆவது நாடாளுமன்றம் இன்னும் எத்தனை தடங்களைப் பதிக்கவுள்ளது? காலங்காட்டும். காத்திருந்து அவதானிப்போம்.



# டேஸ்ட்கடை தணிகாசலம்

''மூன்றெழுத்தில் அம்மா மூச்சிருக்கு, அது ஒய்ந்த பின்னாலும் பேச்சிருக்கும்.......''எனப் பாடிக் கொண்டே திலகா காரியாலயத்துக்குள் வந்தவள். அங்கே தணிகாசலம் அண்ணனைக் கண்டுவிட்டாள்.

''அடடா தணி அண்ணன் இங்க இருக்காரு'' என்று கூறிக் கொண்டே காரியாலய அறைக்குள் நுழைந்தாள்.

''வணக்கம் அண்ணே''

''வணக்கம் வணக்கம் என்ன திலகவதி அம்மையார்காலையிலேயே குஷியா இருக்கிறாப்போல இருக்கு'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே நம்ப திலகா நேற்று தானே கொழும்பில் இருந்து வந்தாள் .ஏதாவது புதிய செய்தி கொண்டு வந்திருப்பாள் '' என்று ஏக காலத்தில் சிவலிங்கமும், நடராசனும் கூறினர்.

''அப்படியா திலகா? ஏதாவது நல்ல சங்கதி உண்டா? ஏதோ மூண்டெழுத்து அப்படி இப்படி என்று பாடிக் கொண்டே இங்க வந்த மாதிரி இருக்கு ''என்றார் தணி அண்ணன்.

''அண்ணன் அதைக் கேட்டீங்களா சும்மா நம்ப ஜனாதிபதி அம்மாவை நெனைச்சேன். உடனே அப்படி ஒரு பாட்டு தானாவே வந்திருச்சி'' என்றாள் திலகா.

''சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது போல் திலகாவின் வார்த்தையிலும் அர்த்தம் இல்லாமல் போகாது'' என்றான் நடராசன்.

''நடராசன் சொல்றதும் சரி தான் என்ன திலகா அந்த மூண்டின்றை ரகசியத்தை ஒரு தரம்



வெவரமா சொல்லும்மா'' என்றார்த ணி அண்ணனும்.

'ஆமாங்க அண்ணே ,நம்ப ஜனாதிபதி அம்மாவோட பேர் ராசிக்கு மூன்றாம் நம்பர் ஒரு விசேஷம்தான்.

வழமையாக பாருங்க ஐந்து வருடத்திற்கு ஒருமுறை தான் பார்லிமெண்ட் தேர்தல் நடக்கும்......'' என்று திலகா கூறிய போது திலகா புதுமையிருக்கு. வ்ழமையாகவே ஐந்து வருடத்திற்கு ஒரு தரம்தானே தேர்தல் நடக்கும்''என்று கூறினார்.

''அதுசரி நடராசன் சொல்லுறத பாத்தால் கடந்த நாலு வருசத்தில அம்மா மூனு பார்லிமென்ட் தேர்தலை நடத்தி சாதனை படைத்து விட்டார் அல்லவா! இதைப்பத்தி கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டாமா?''என்றாள் திலகா.

''அடடே நம்ப திலகாவும் வரவர அரசியல் விடயங்களை அக்குவேறு ஆணிவேறாக ஆராயத்தலைப்பட்டுவிட்டாள். பலே கெட்டிக்காரி''என்று தட்டிக் கொடுத்தார் தணி அண்ணன்.

தணிகாசலம் அண்ணன் உற்சாகப் படுத்தியதால் திலகாவுக்கும் குஷி கிளம்பி விட்டது.

''பார்லிமெண்ட் தேர்தலை மட்டும் மூன்று முறை நடத்தல.பார்லிமெண்ட் சபா நாயகர் தெரிவையும் இல்லையா மூனு தரம்நடத்தி உலக சாதனை படைத்துவிட்டார்களே. இதைத்தான் மூன்று எழுத்தில் அம்மாவின் மூச்சு இருக்கு என்று பாடினேன்'' என்றான் திலகா. திலகா விளையாட்டுத் தனமாக இதைக் கூறினாலும் சிந்திக்க வைத்துவிட்டது.

''என்ன சிவலிங்கம் நம்ப ஜனாதிபதி அம்மா வோட காலத்தில் மூன்று நாடாளு மன்றத் தேர்தல், மூன்று சபாநாயகர் தேர்தல் என அசத்திப்புட்டாங்க. இது இலங்கை சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டிய ஒரு சம்பவமாகிவிட்டது அல்லவா?'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே இன்னும் ஒருவிசயம் இப்ப ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெரும் தலையிடியாகிவிட்டது. வெள்ளாட்டுக்கூட்டத்தில் ஒரு கறுப்பாடு. ஹு இஸ் த பிளக் ஷீப்.''

''அம்மாவும், ஜே.வி.பி.காரனுங்களும் 105, டக்ளஸ் ஒன்று. பிக்குமார் இரண்டு பேர் ஆக மொத்தம் 108 பேர் தானே இருக்காங்க. ஆனால் 109 வாக்குகள் எப்படி வந்தது? இது தான் இப்ப தலையிடி'' என்றாள் திலகா.

''அதுவும் சரி தான். அப்படீன்னா ரணில் ஐயாவோட கூட்டத்தில் இருந்து தானே யாரோ ஒருவர் அம்மா பக்கம் ஓட்டு போட்டு இருக்க வேணும். இல்லியா? அதைப்பத்தித் தான் இப்ப உள்வீட்டு விசாரணைகள் நடக்குது. அதைப்பத்தி பொறகு பேசுவோம்''என முடித்தார் தணி அண்ணன்.




# வலைவிரிக்கும் பேரினவாதம் விலை போகும் மலையகம்

பேரினவாத அரசியல்வாதிகளின் கரிசனை இப்போது மலையக மக்கள் மீது திரும்பி உள்ளது. காலம் காலமாகத் தம்மால் உதாசீனப்படுத்தப்பட்டு கூலிகள் என்று வாய் கூசாமல் விமர்சனம் செய்து வந்த இப்பேரினவாதத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

ஏழு வருட ஆட்சியின்போது தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலைமைகளைப் பற்றி சிறிதும் சிந்திக்காதவர்கள் கடந்த இரண்டு வருட காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் அதல பாதாளத்துக்குள் வீழ்ந்துவிட்டதாக புலம்புகின்றனர்.

ஐயோ பாவம் பெண் தொழிலாளர்கள். தொழிற்சங்கங்களிலும் சரி, பொதுவிடயங்களிலும் சரி ஒதுக்கப்பட்டே வந்துள்ளனர். இப் பெண் தொழிலாளர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. இங்கு நிலவும் ஆணாதிக்கம் பெண்களைத் தலை தூக்க விடாமல் தடுத்து வந்திருப்பதாகவும், எனவே நிர்வாகத்துறையில் பெண்களுக்கு சம பங்களிக்க வேண்டும், என்றும் மிகவும் அக்கறையுடன் அறிக்கை விட்டுள்ளார் ஒரு அமைச்சர்.

தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றுள்ள இந்தத் தலைவர் தான் முன்பு எதிரணியில் இருந்த போது தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகளையும் வீடுகளையும் கொடுத்து விட்டால் இங்குள்ள சிங்களவர்கள் எங்கே போவது என்று துவேசம் கக்கினார்.

இப்போது ஆடுகள் நனைவதைக் காணச் சகிக்காத ஓநாய் போல் அழுகின்றார்.

மற்றும் ஒரு தலைவர் இவரையும் மிஞ்சிவிட்டார். கடந்த இரண்டு தசாப்தங்களாக நித்திரை கொண்டவர் போல் திடீரென எழும்பி வந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு உருப்படியான வீடுகள் இல்லை, சுகாதார வசதிகள் இல்லை என்று கூச்சல் போடுகின்றார்.

இவை எல்லாம் ஏன்?

பதின்மூன்றாவது நாடாளுமன்றம் தொங்கு நாடாளுமன்றமாக உயிருக்காக ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

இப்படியான ஒரு நிலையில் மே 18ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது அரசாங்கம் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என சபாநாயகர் அறிவித்துள்ளார்.

ஆக 105 ஆசனங்களை மட்டுமே கொண்ட அரசாங்கம் சிறுபான்மைக்கட்சிகளின் ஆதரவைப் பெற்றே ஆக வேண்டும் என்ற இக்கட்டான நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கம் மலைபோல் நம்பி இருந்த தேசிய ஹெல உறுமயவின் ஆதரவு அரசுக்கு இல்லை என்பது உறுதியாகிவிட்டது.

புத்த சமயத்தின் தலைவர்கள் என்ற கௌரவத்தைக்கூட வழங்காமல் நாடாளுமன்றத்தில் காடைத்தனம் புரிந்துள்ளனர். ஆவணங்களை வீசி அடித்தனர்? இதோடு நின்றுவிடவில்லை. பிக்குமாரின் இருப்பிடங்களும் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருகின்றன.

மத குருமார்களாகவும், அதே வேளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கும் எமக்கு பாதுகாப்பு வழங்க முடியாத அரசுக்கு நாம் எப்படி கைகொடுக்க முடியும் என தேசிய ஹெல உறுமய பிக்குகள் கை விரித்துவிட்டனர்.

இதனால் அரச தரப்பினர் இப்போது மலையகம் நோக்கி தமது வலையை விரித்துள்ளனர்.

இதே போன்று 1994இல் தொங்கு நிலையில் சந்திரிகாவின் அரசுக்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் கை கொடுத்து அதற்கு உயிர்ப் பிச்சை அளித்தார்.

சந்திரிக்கா அம்மையாரும் தோட்ட வீடமைப்பு அமைச்சு ஒன்றை உருவாக்கி சந்திரசேகரனை அமைச்சராக்கினார்.

அமைச்சர் ஆறுமுகம் அப்போது என்ன செய்தார். சந்திரசேகரனின் செல்வாக்கைக் குறைப்பதற்காக தானும் சந்திரிகாவுடன் ஒட்டிக்கொண்டார்.

கடைசியில் இரண்டு பேரில் ஒருவருக்கும் இடமில்லாமல் அவர்களை பொம்மைகளாக்கி விட்டார் சந்திரிகா. அதே சூழ்ச்சியைத் தான் இன்றைய அரசும் மேற்கொண்டு வருகின்றது.

தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பாதகமில்லை. எதிரிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்பது போல் எதைக் கொடுத்தாவது மலையகத் தலைவர்களை வளைத்துப்பிடிக்க பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆறுமுகம் தொண்டமானுக்கு அல்லது சந்திரசேகரனுக்கு ஒரு முக்கியமான அமைச்சைக் கொடுத்துவிட்டால் நாம் அழைக்காமலே மற்றவரும் வழிக்கு வந்துவிடுவார். எனவே யாராவது ஒருவரை மடக்கிப்பிடிக்க ஜனாதிபதி வியூகம் வரைந்து கொடுத்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதியின் ஏவலின்படி பேரினவாத தலைவர்கள் இப்போது மலையகத்தில் முகாமிட்டுள்ளனர்.

மந்திரி பதவிகளுக்காக மலையகத் தலைவர்கள் சோரம் போகக் கூடியவர்கள், இவர்களை இலகுவில் விலைக்கு வாங்க முடியும் என பெரும்பான்மைத் தலைவர்கள் மலையக தலைவர்களை கீழ்த்தரமாக எடைபோட்டு வைத்துள்ளனர்.

இந்த நிலையில் நமது மலையகத் தலைவர்களின் நிலைமை என்ன? ஒருதலைவர் தேர்தலுக்கு முன்பே சமயம் பார்த்து, அவசியம் ஏற்படும் போது ஆட்சி அமைப்பவர்களுடன் இணைந்து கொள்வோம் எனக் கூறியுள்ளார்.

மற்றவரோ பெரும்பான்மைக்கட்சிகள் இணைந்த தேசிய அரசு வேண்டாம். எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்த சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கலாம் என்று அறிக்கை விட்டிருக்கிறார்.

இவர்களது பேச்சுக்கள் இந்த இரண்டு தலைவர்களின் அடி மனங்களிலும் தாம் அமைச்சராக வேண்டும் என்ற ஆசை துளிர் விட்டிருப்பதையே தெளிவாக்குகின்றது.

எப்படியோ நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவின்போது துணிச்சலாக எதிர்க் கட்சிகளுடன் இணைந்து வாக்களித்து விட்டனர். இவர்களின் நேர்மை பாராட்டத் தக்கது. இந்த உறுதி மே 18ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது நிலைத்திருக்குமா? இவர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்.



## சொல்லாதே இது இரகசியம்!

டிக் டிக் என ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும்ஒரு நகரில் உள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒரு தாய்க் குலமாம். இவர் வீட்டு வேலைகளுக்காக 13 வயதுச்சிறுமி ஒருத்தியை வைத்திருந்தாராம்.


பெண் அதிபரின் நாயகன் ஒரு வர்த்தகராம். அவருக்கு திடீர் திடீரென கிக் ஏறிவிடுமாம்.அதனால் அடிக்கடி தாக சாந்தி செய்வதும் வழமையாம். ஒரு நாள் பாடசாலையை விட்டு தாய்க்குலம் வீட்டுக்கு வந்த போது அவரது மணாளன் நிறைவெறியில் தள்ளாடிக்கொண்டிருந்தாராம். வேலைக்காரச்சிறுமி ஒரு மூலையில் நின்று அழுது கொண்டிருந்தாளாம்.

என்ன விடயம் என்று கேட்டபோது, நான் தண்ணி அடித்துக்கொண்டிருந்த போது இந்தப் பெட்டை சட்டையில் இருந்து பணத்தையும், மணிக்கூட்டையும் திருடிக் கொண்டு ஓட வெளிக்கிட்டாள். நான் ஒரு மாதிரியாக மடக்கிப்பிடித்து விட்டேன். உடனே இவளைப் பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்றாராம் நாயகன்.

அடிப்பாவி. அப்படியா செய்தாய் என வேலைக்காரச்சிறுமியை உடனே பொலிஸில் ஒப்படைத்தாராம் அதிபரான அந்தத் தாய்க்குலம்.

பொலிஸ் விசாரணையில் வெளி வந்தது என்ன தெரியுமா? வேலைக்காரச்சிறுமி எதையும் திருடவில்லை. அதிபரின் நாயகன் தான் அந்தச்சிறுமியிடம் திருடக்கூடாத ஒன்றைத் திருடிவிட்டார் என்பது. தெரிய வந்திருக்கிறது பாவம் பணத்தை எண்ணிக்கொண்டிருந்த முதலாளி இப்போது கம்பி எண்ணுகின்றாராம்.

# பெண் எலிகள் பெற்ற பெண் குட்டி



இன்றைய உலகம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. ஜப்பானிய விஞ்ஞானிகளின் ஆய்வுமூலம் பிறப்புரிமையியற் பொறியியலில் புதியதொரு அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக முளைய உற்பத்தியில் இடம்பெறும் பிறப்புரிமை அடையாளமிடல், முளைய அசாதாரணம் மற்றும் உயிரின் ஆரம்பம் ஆகியவை பற்றிய பல மர்மங்கள் வெளிச்சத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விந்தைப் பயன்படுத்தாமல் இரண்டு முட்டைகளை மட்டுமே பயன்படுத்தி பிறப்பாலேயே தந்தை அற்ற ஒரு பெண் எலியை உருவாக்கி ஜப்பான் மற்றும் கொரிய நாட்டு விஞ்ஞானிகள் மகத்தான சாதனை ஒன்றை நிலைநாட்டி இருக்கிறார்கள். ஏறத்தாள குளோனிங் செயன் முறையை ஒத்த ஒரு செயன் முறையை அவர்கள் பிரயோகித்திருக்கிறார்கள்.

தேனீக்கள், எறும்புகள், பூச்சிகள் சில மீன்கள் மற்றும் நகருயிர்கள் பாலுறவு இன்றி Partheno Genesis என்ற செயன்முறை மூலம் உருவாக்கப்படுகின்றன. ஆனால், வாழும் பாலூட்டி விலங்குகளை அதே பாலுக்குரிய பெற்றோரிலிருந்து உருவாக்குவது சாத்தியமற்றது என்று தான் ஒரு காலத்தில் கருதப்பட்டது.

ஆனால், இரண்டு பெண் எலிகளுக்கு கயூகா என்ற மகள் எலி ஒன்று ஜப்பானிய விஞ்ஞானிகளால் பிறப்பாக்கம் செய்யப்பட்டிருப்பதானது, ஆணின் எந்த உதவியும் இன்றி ஒரு பால் கலப்பற்ற (Partheno Genesis) பாலூட்டிகளையும் உருவாக்க முடியும் என்று நிரூபிப்பதாயுள்ளது.

ஏறத்தாள குளோனிங் செயற்பாட்டைப் போன்றது தான் இந்த செயன்முறையும். ஆனால் குளோனிங் முறையில் பிறப்பாக்கம் செய்யப்பட வேண்டிய அங்கியின் (பெண்/ஆண்) தோற்கலம் (பொதுவாக) பெறப்பட்டு, சூல் அல்லது முட்டையுடன் இணைக்கப்பட்டு கருக்கட்டப்படும். இதற்கு முன்னர் முட்டையிலுள்ள சூல மரபணுப் பதார்த்தங்களும் அகற்றப்படுவதால் பிறக்கும் எச்சம் முற்றிலும் தோற்கலம் பிரித்தெடுக்கப்பட்ட அங்கியை ஒத்ததாகவே இருக்கும்.

ஆனால் கயூகா எலி பிறப்பாக்கப்பட்ட முயற்சியில் இணைக்கப்பட்ட கலங்கள் இரண்டுமே முட்டைக் கலங்கள் தான். எனவே ஆண் பாலுக்குரிய எந்த நிறமூர்த்தங்களும் முளையத்தில் இராது. அத்துடன் வழங்கிய முட்டையிலிருந்து பிரதானமான ஒரு மரபணு தான் அகற்றப்படுகிறது.

600 முட்டைகளை பயன்படுத்தித்தான் கயூகாவை உருவாக்கி உள்ளனர். இந்த 600 முட்டைகளினால் ஆரம்பத்தில் 28 மரபு எச்சங்களை (Off - Spring) உருவாக்க முடிந்த போதிலும் கயூகாதான் முழுமையான விருத்தியடைந்து பிறந்து இருக்கிறது. ஏனையவை சாதாரண எச்சங்களானதுடன் சிலவற்றின் கர்ப்ப காலம் பூர்த்தியாகாமல் இருக்கிறது.

இந்த நிலையில் மனிதர்களில் இந்தப் பிறப்புரிமைத் தொழில் நுட்பத்தைப் பிரயோகித்து வெற்றி காண்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவே. எனினும் வாய்ப்பு இல்லை என அறவே நிராகரித்து விடவும் முடியாதென்கின்றார்கள் விஞ்ஞானிகள். இரு தாயார் ஒரு பிள்ளை பெறுவதுண்டோ? என்ற சாலமன் மன்னனுடைய கேள்விக்கு விஞ்ஞானம் பதில் கூறும் நாள் வெகு தொலைவில் இல்லை.


## இப்பொழுது வெள்ளவத்தையில்.....

## சுடர் ஒளி THE SUDAR OLI ✱ உதயன் விளம்பர முகவர்

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை எமது வெள்ளவத்தை 4C, 6-1/1, (Fussells Lane) பசல்ஸ் லேன் இல் (பொலிஸ் நிலையத்துக்கு எதிராக) அமைந்திருக்கும் எமது விளம்பர முகவர் நிலவு.com இல் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

வெள்ளவத்தையில்
தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 071 4801391

## EXPOAIR எக்ஸ்போ எயார்

யாழ் பயணத்தின் போது
றோல்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் - கொழும்பு விமான சேவை

## இப்பொழுது விற்பனையில்!

## ஏப்ரல் 2004 இதழ் கம்ப்யூட்டர் ருடே




- பரபரப்பான கட்டுரைகள்!
- புத்தம்புதிய தகவல்கள்!
- 'அட' என்று சொல்லவைக்கும் அசத்தல் பகுதிகள்!
- இவற்றோடு - மென்பொருள் தொகுப்பை உங்களுக்கு வழங்கும் CD அதிர்ஷ்டம் பரிசுக்கூப்பன்!




உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

அச்சிட்டு வெளியிடுபவர்கள்:
உதயன் பப்ளிஷர்ஸ்

Dream Grafix


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 மே 03 ஆம் திகதி வெளியிடப்பட்டது.